# நமது செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 07 ✿ ஸ்ரீ குரோதி ஆண்டு ✿ கார்த்திகை ✿ நவம்பர் 2024 ✿ ரூ.25

Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 07 ✿ November 2024 ✿ Rs.25





Chettinad
Academy
of Research and Education
(Deemed to be University)
Experience Your
Natural Holistic Healing
Treat the ill with
a sweet pill
@ Chettinad Premium
Homoeopathy Wellness
Clinic
BOOK YOUR APPOINTMENTS NOW!
98417 36000 | 95512 97000
044 474 11000

நமது
செட்டிநாடு

மலர் 10 மணம் 07 நவம்பர் 2024
ஸ்ரீ குரோதி ஆண்டு கார்த்திகை மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்
ஆசிரியர் குழு:
புதுவயல் செல்லப்பன்
குழ.கதிரேசன்
ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்
முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி
விசாலாட்சி சுப்பிரமணியம்
புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,
தட்டச்சு: முரு.மலர்விழி
வடிவமைப்பு: பி.தாமோதரன்
விளம்பரம் தொடர்புக்கு:
99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com
செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்
ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,
603, அண்ணா சாலை, சென்னை - 600 006
தொலைபேசி: 044–42951888

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

கரு.மணிகண்டன்,
மக்கள் தொடர்பு அலுவலர்
காரைக்குடி 86818 28284

(சந்தா செலுத்த, புதுப்பிக்க, விளம்பரம் செய்ய)

1) திரு.ஆர்எம்.வி.ராமசாமி
கோட்டையூர் : 94891 77006
2) திரு.MR.பழம் நாச்சியப்பன்
சென்னை : 97899 55526
3) திருமதி அரு.வள்ளிக்கண்ணு
திருச்சி : 75982 15797 / 99654 24996
4) திரு. ஆர்எம்.அழகப்பன்
கண்டரமாணிக்கம் : 98401 23931
5) திரு.விஆர்.பாலமுருகன்
கோவை : 97916 32421, 83000 51512
6) திருமதி வி.வள்ளியம்மை
கோவை : 88706 52054
7) திரு. A.R.முத்தழகப்பன்
சேலம் : 98421 82273
8) திரு. AL.தண்டாயுதபாணி
பெங்களூரு : 090368 62231

மின்னஞ்சல்
namadhuchettinad@gmail.com



# வரவேற்கத்தக்க முக்கிய முடிவு

“காலங்கள் மாறுகின்ற பொழுது உலகில் மாற்றங்கள் ஒன்றே மாறாதது” என்பது கவியரசர் கண்ணதாசன் அவர்களின் கூற்றாகும். நம்முடைய முன்னோர்கள் வகுத்த திருமண உறவுகள் தொடர்பான பழக்கவழக்கங்களை நாம் காலம் காலமாக கடைப்பிடித்து வருகிறோம். இன்றைய காலகட்டத்தில் கட்டுக்கோப்பான குடும்ப உறவுகளை கட்டிக் காப்பாற்றுகின்ற ஒரு மிகப்பெரிய பாரம்பரியமிக்க சமுதாயமாக நம்முடைய நகரத்தார் சமுதாயம் உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. அந்தக் கட்டுக்கோப்பான சமுதாயம் சில பாரம்பரிய பழக்கவழக்கங்களால் சில பிரச்சினைகளை காலப்போக்கில் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பது எதார்த்தமான உண்மையாகும். அந்த வகையில் இன்றைக்கு மிக முக்கிய பிரச்சினையாக பல நகரத்தார் இளைஞர்களுக்கு உரிய நேரத்தில் திருமணம் ஆகாத சூழ்நிலையை நாம் அதிக அளவில் பார்த்து வருகின்றோம். இதற்கு மனப்பொருத்தம், ஜாதகப் பொருத்தம், கல்வி, வேலை, பொருளாதாரம், லட்சணம் எனப் பல்வேறு காரணங்கள் உண்டு. இவற்றையும் தாண்டி கோவில்கள் வேறுவேறாக இருந்தாலும் நமது பழக்கவழக்கங்களின்படி இரணிக்கோவில் மற்றும் பிள்ளையார்பட்டி கோவில் நகரத்தார்கள் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்வதில்லை. இதனை இளைஞர்கள் நலன் கருதி இரு கோவில் நகரத்தார்களும் முன்வந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை திரு.ஏ.ராம.ஏ.ஞானம் அவர்கள் தலைமையில் அமைந்த ஐக்கிய நகரத்தார் சங்கம் வலியுறுத்தி வந்தது. இந்தக் கோரிக்கையை, நீண்ட பரிசீலனைக்குப் பின் இரு கோவில் நகரத்தார்களும் ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றுள்ளது. இந்த முடிவு பெற்றோர்களுக்கும், திருமணமாகாத இளைஞர்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கின்ற வகையில் உள்ளது.

இரண்டு கோவில்களின் நிர்வாகிகளும் தங்களுக்குள் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முக்கியமான முடிவை தக்க அறிக்கைகளின் வாயிலாக தங்கள் பங்காளிகளுக்கு தெரிவித்திருக்கிறார்கள். இன்றைய காலகட்டத்தில் இரண்டு கோவில்களுக்கடையே திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவு ஏற்புடையதாக உள்ளது. இரணிக் கோவிலில் ஏறத்தாழ நான்காயிரம் புள்ளிகள் உள்ளனர். அதே போல் பிள்ளையார்பட்டிக் கோவிலிலும் ஏறத்தாழ ஐயாயிரத்தி இருநூறு புள்ளிகள் உள்ளனர். மேற்கண்ட முடிவின் தொடக்கமாக விரைவில் (ஆண்/பெண்) திருமணங்கள் நடைபெறவும், மேன்மேலும் புள்ளிகள் பெருகவும் அருள்மிகு ஆட்கொண்டநாதரையும், ஸ்ரீ கற்பக விநாயகரையும் பிரார்த்திப்போமாக. ♦




## உள்ளே...

சேலத்தில் நகரத்தார் சங்கத்திற்கு செட்டிநாடு குழுமம் ரூ.5 லட்சம் நன்கொடை .................. 06

ஏட்டுக் கல்வி மூலம் நகரத்தார் மரபை வெளிக்கொணர்தல் ................................ 07

தமிழ்ப் பற்றாளர், கல்வியாளர், ஆலைப் பேரரசர் கருமுத்து தியாகராசர் .............. 10

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க... .... 12

நகரத்தார் திருப்பணிகள்.......................... 14

திருமாலின் திவ்ய தேசங்கள் ..................... 16

ஒன்பது நகரத்தார் கோவில்கள் நூல் உருவானது எப்படி? உமா மெய்யப்பன் பேட்டி .................. 18

தொழில் தொடங்கலாம் வாங்க ............. 21

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ............................................... 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு ...... 28

இராம காவியம் ...................................... 32

திருமந்திரச் சுவை ................................. 34

இரணிக்கோவில் – பிள்ளையார்பட்டி கோவில் நகரத்தார்கள் இடையே திருமணம் தீர்மானம் நிறைவேற்றம் ........................................... 35

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ......... 36


நகரத்தார் சிகரத்தார் ................................ 40

வாழையடி வாழை ................................. 42


வெல்லலாம் வாருங்கள் ........................ 44

சந்தா படிவம்!...................................... 45

அட்டையில் : அமெரிக்க அதிபராகத் தேர்வு பெற்றுள்ள டொனால்ட் ஜே. டிரம்ப் அவர்களுக்கு நமது செட்டிநாடு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.


Vees Star™
Diamonds & Jewelry
ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை
GIA
CERTIFIED SOLITAIRE
Manufacturers, Wholesalers & Retailers
CHENNAI: W-182, NORTH MAIN ROAD
ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY
KHAJOD, GUJARAT - 395007.
044 4553 6003 | 9383007477
www.vstardiamonds.com
SURAT I CHENNAI I MADURAI
S. விஜயகுமார்
V. விசாலாட்சி
பள்ளத்தூர்

# சேலம் நகரத்தார் சங்கத்திற்கு செட்டிநாடு குழுமம் ரூ. 5 லட்சம் நன்கொடை



சேலம் நகரத்தார் சங்கம் சார்பாக சேலம் கந்தாஸ்ரமம் அருகில் பட்டினத்தார் நகரத்தார் சிவமடம் கட்டுவதற்கு நிதி உதவி வேண்டிய சேலம் நகரத்தார் சங்க கோரிக்கையை ஏற்று செட்டிநாடு குழுமம் சார்பாக குழுமத் தலைவர் டாக்டர் முத்தையா ராமசாமி அவர்கள் ரூ. 5 லட்சம் நன்கொடை வழங்கினார்கள். சேலம் நகரத்தார் சங்கத் தலைவர் திரு. பழ.மோகன் (எ) பழனியப்பன் அவர்கள் டாக்டர் முத்தையா ராமசாமி அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்தார்.

## சதாபிஷேகம்

தேவகோட்டை அ.ராம.அ.லெ.பழ.மு. லெட்சுமணன் செட்டியார் – உமையாள் ஆட்சி அவர்களின் குமாரரும் திரு. அ.ராம.அ.லெ. பழ.மு.லெ. பழனியப்பன் செட்டியார் அவர்களின் சகோதரர் பட்டயக் கணக்காயரும் (CA) செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் இயக்குநருமான திரு. அ.ராம.அ.லெ.பழ.மு.லெ. முத்துக்கிருஷ்ணன் செட்டியார் அவர்களின் 80ஆம் ஆண்டு சதாபிஷேகம் 31.10.2024 வியாழக்கிழமை அன்று தேவகோட்டை நகரச் சிவாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. உற்றார், உறவினர்கள், நகரத்தார்கள், நண்பர்கள் பங்கேற்று வாழ்த்துப் பெற்றனர். திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்களுக்கு, நமது செட்டிநாடு வாசகர்கள் சார்பாக, நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.





# ஏட்டுக் கல்வி மூலம் நகரத்தார் மரபை வெளிக்கொணர்தல்

## தொடக்கமும் நிகழ்வுகளும் - ஓர் தொகுப்பு

சிங்கப்பூர் தெண்டாயுதபாணி ஆலயத்தில் நகரத்தார் மரபு, பண்பாடு, கலாச்சாரம், வரலாறு முதலியவை பல வகையான டிஜிட்டல் சாதனங்கள் வாயிலாக முதன் முதலாக கல்லல் திரு.இலட்சுமணன் சுப்பையா செட்டியார் மற்றும் திரு. லெ. தண்ணீர்மலை செட்டியார் ஆகியோரின் தொலைநோக்கு முயற்சியால் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பெற்றது.

AMM குழுமம் முன்னாள் தலைவர் பள்ளத்தூர் திரு. M.V. சுப்பையா செட்டியார் அவர்கள் இந்த அரிய முயற்சியை அனைத்து நகரத்தார் குழந்தைகளுக்கும் பரப்பும் எண்ணத்தோடு நகரத்தார் வேர்களைத் தேடும் பயணத்தையும் அதன் வாயிலாக நகரத்தார் மீண்டும் ஒரு பொற்கால சகாப்தத்தைக் காண வேண்டியும் இதற்குப் புத்துயிர் அளித்தார். தனது மருமகன் புதுவயல் சின்ன நடேசன் செட்டியார் மற்றும் கல்லல் இலட்சுமணன் சுப்பையா செட்டியார் ஆகியோருடன் இணைந்து காரைக்குடியில் 2017 ஆம் ஆண்டு "வேர்களைத் தேடி" குறித்த இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை அமர்வை நடத்தினார்.



ஆழ்வார்ப்பேட்டையில் தன்னார்வலர் வகுப்பு எடுத்தல்

தொடர்ச்சியாக ஓய்வுபெற்ற காவல் அதிகாரி அரிமளம் ச.முத்துக்குமார் அவர்கள் தலைமையில் தியாகராய நகரில், புதுவயல் எ.மு.சொ. பழனியப்பன் செட்டியார் அவர்களின் ஆதரவுடன் வெவ்வேறு நகரத்தார் மகளிர் சங்கத்தைச் சார்ந்த திறன்மிக்க 38 ஆச்சிமார்களுக்கு, ஆத்தங்குடி வணக்கம் சுப்பிரமணியம் அவர்கள் மூலம் 7 பாடங்களாகப் பயிற்றுவிக்கப்பெற்றது.

### அறிவுப்பகிர்வு மற்றும் திறன் மேம்பாடு

தொடர்ந்து மதுரையில் நடைபெற்ற ஒருநாள் கருத்தரங்கு நிகழ்ச்சியில் 28 மகளிர் பங்கேற்றார்கள். விரிவான ஆலோசனைக்குப்பின் கற்பிக்க எடுத்துக் கொண்ட 7 பாடங்கள் என்பதை 16 பாடங்களாக மாற்றி அமைக்கப்பெற்றது.

பயிற்சி குறித்த விவரங்களை விரிவாக விவாதம் கோட்டூர்புரம் AMM பள்ளியில் கருத்துப் பரிமாறும் அமர்வில் நடந்தது. அதில் நகரத்தார் முன்னொரு காலத்தில் ஏட்டுக் கல்வி முறையில் பெற்ற அறம் சார்ந்த பாடங்களை தற்போது குழந்தைகளிடம் கொண்டு சேர்த்தால் நகரத்தார் பண்பு இளமையிலேயே மனதில் பதியும் என்ற கருத்து அமர்வில் வலியுறுத்தப்பெற்று ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

### நோக்கங்கள்

நம் வருங்கால சந்ததியினருக்காக நகரத்தார் பாரம்பரியத்தையும், மதிப்பையும் பாதுகாப்பது. குழந்தைகளின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை வளர்ப்பது. 5 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு முதல் கட்டமாக பயிற்றுவிப்பது. பின்னர் படிப்படியாக 13 முதல் 18 வயதினர் மற்றும் 19 முதல்

24 வயது வரை என மூன்று நிலைகளில் பயிற்றுவிப்பது. தடையற்ற கற்றல் மற்றும் தகவல்களை நன்கறிந்து முடிவெடுக்கும் திறன் பெற ஔவையாரின் ஆத்திசூடியை குழந்தைகளின் ஆளுமை மேம்பாடு கருதிக் கற்பித்தல் ஆகியவை முக்கிய நோக்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

### முன்னேற்ற மேம்பாடு

அர்ப்பணிப்புள்ள 70 தன்னார்வலர்களுடன் 16 மையங்களில் ஆத்திசூடி கற்பிப்பது. காரைக்குடி Blossom அழகப்பன் செட்டியாரின் தஞ்சாவூரில் அமைந்துள்ள அழகு பயிற்சி மையத்தில் சிறப்பாக பயிற்றுவிப்பது எப்படி என்பது குறித்த ஒரு நாள் கருத்தரங்கு நடத்துவது. அனைத்து மையங்களிலும் விஜயதசமி அன்று துவக்க விழா நிகழ்த்துவது. தொடக்கத்தில் ஆத்திசூடியின் முதல் 3 அடிகளை கற்பிப்பது. அதைத் தொடர்ந்து மாதம் ஒன்றுக்கு ஒரு அமர்வில் 5 அடிகள் பயிற்றுவிப்பது என்ற முன்னேற்பாடுகள் செய்வது எனவும் தீர்மானிக்கப்பெற்றது.

### முக்கிய சிறப்பம்சங்கள்

ஒவ்வொரு அமர்விலும் 60க்கும் மேற்பட்டவர்களை பங்கேற்கச் செய்தல். தன்னலமற்ற அமைப்பாளர்கள் தார்மீகக் கடமைகளால் இயக்கப் பெறுதல். குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் விதத்தில் வடிவமைக்கப் பெற்ற பயிற்றுவிக்கும் முறை. கதைகள், புதிர்கள், விளக்கப் படங்கள், நாடகங்கள், பாட்டு, சிறுசிறு விளையாட்டுகள் மூலம் பயிற்றுவித்தல். நகரத்தார் மரபு, பழக்க வழக்கங்கள் ஆகியவை முக்கிய சிறப்பு அம்சங்களாகக் கொண்டு பயிற்றுவிப்பது எனவும் தீர்மானிக்கப்பெற்றது.

### கற்றல் துவக்கம் – வித்யாரம்பம்

அக்டோபர் 12, 2024 அன்று ஏட்டுக்கல்வியின் முறையான துவக்க விழா நடைபெற்ற 16 மையங்களில் 498 பேர் கலந்து கொள்ள, பதிவு செய்தவர்களில் 388 மாணவர்களும், 526 பெற்றோர்/பெரியோர் கலந்து கொண்டனர். ஆறு மையங்களில் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் பாரம்பரிய முறையில் வித்யாரம்பம் செய்து வைக்கப் பெற்றது. குறிப்பாக சென்னை ஆதம்பாக்கத்தில் உள்ள



பெற்றோர்களுடன் திரு. எம்.வி.சுப்பையா அவர்கள்

98 வயது நிறைந்த கவிமாமணி புதுவயல் ந. செல்லப்ப செட்டியார் அவர்கள் ஏழு குழந்தைகளுக்கு அவரது திருக்கரங்களால் நெல் தானியத்தில் “அ” என்று எழுதக் கற்பித்து ஆசிர்வாதம் செய்து சிறப்பித்தார்.

### காலத்தால் மதிக்கப் பெறும் மரபுகள்

குழந்தைகள் நெல், அரிசி போன்ற தானியங்களில் புனிதமான “ஓம்”, “அ” என்ற எழுத்துக்களைக் குருவின் துணையோடு எழுதி, தங்கள் கல்வி கற்றலைத் துவக்கினர்.

### மையங்களில் குறிப்பிடத்தக்க வருகை

காரைக்குடியில் சீரற்ற கால நிலையையும் பொருட்படுத்தாமல் 32 குழந்தைகள் கலந்து கொண்டனர். திருச்சி மையத்தில் அரியலூர் குழந்தைகளும் பங்கேற்றனர். இராயவரம் குழந்தைகள் புதுக்கோட்டை மையத்தில் கலந்து கொண்டனர். வண்டலூரில் வசிக்கும் குழந்தைகள் வடபழனி மையத்தில் பங்கு பெற்றனர். போரூர் குழந்தைகள் திருவெற்றியூர் மையத்திற்கு வந்து பயிற்சி பெற்றது குறிப்பிடத்தக்கது. ஆழ்வார்பேட்டையில் கலந்து கொள்ள பதிவு செய்த 44 பேரில் 35 குழந்தைகள் கலந்து கொண்டு கற்றல் அனுபவம் பெற்றனர். மதுரையில் 35 குழந்தைகள் மகிழ்வோடு கற்றனர்.

### துவக்க விழாக்கள்

சங்கு ஊதி, இறைவணக்கம் பாடி எல்லா மையங்களிலும் துவக்க விழா நடைபெற்றது. மரியாதைக்குரிய நகரத்தார்கள் மற்றும் பெற்றோர்களிடம் குழந்தைகள் ஆசி பெற்றனர். குழந்தைகள் அனைவரும் திருநீறு பூசிக் கொண்டனர். பிரதம விருந்தினர்கள் தங்கள் அனுபவங்களையும், இக்கல்வியின் அவசியத்தையும் விளக்கினர். குழந்தைகளுக்கு ஏழிளந்தமிழ் எனும் நூலுடன் எழுது



தன்னார்வலர்கள்




பொருட்கள் போன்ற பரிசுகளும் வழங்கப் பெற்றன. நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அறிமுக உரையில் நற்போதனைகளின் அவசியத்தை வலியுறுத்தினர்.

**கல்வியியல் அணுகு முறைகள்**

மெல்லிசைப் பாடல்கள், காட்சி விளக்கப் படங்கள், வரைபடங்கள், குறுக்கெழுத்துகள், புதிர்கள், கதைகள், சிறு சிறு விளையாட்டு, தனிநபர் நடிப்பு / நாடகம், வில்லுப் பாட்டு, படங்களை வெட்டி ஒட்டல், சரியானவற்றைப் பொருத்துதல் உள்ளிட்ட முறைகளில் ஆத்திசூடியின் முதல் மூன்று அடிகள் கற்பிக்கப் பெற்றது.

**கிடைத்த அனுபவங்கள்**

மொழி தடையாக இல்லை. குழந்தைகள் மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினர். சில குழந்தைகள் தரையில் அமர்வதில் உள்ள சவால்களை எதிர்கொண்டனர். உக்கி போடுதல், யோகக் கலை போன்றவைகள் மூன்று மையங்களில் கற்பிக்கப்பட்டதை குழந்தைகள் விரும்பினர். விஜயதசமியின் முக்கியத்துவம் குறித்து விளக்கம் தரப்பெற்றது. ஆழ்வார்பேட்டை மையத்தில் விஜயதசமியின் கலாச்சார முக்கியத்துவம் பற்றி அனுபவப் பூர்வமாகக் கற்பிக்கப் பெற்றது. அம்பு போடுதல் எனும் நகரத்தார் மரபை குழந்தைகள் மனதில் ஆழப் பதிய வைத்தது. வீரமுடன் வெற்றியைக் குறிக்கும் வெள்ளி அம்பு கொண்டு வாழை மரத்தை குழந்தைகள் குத்தி வெற்றித் திலகமாக அதன் சாறை நெற்றியில் ஆர்வத்துடன் அணிந்து கொண்டனர். ஓசூர் மையத்தில் பெற்றோர்களும் குழந்தைகளுடன் சேர்ந்து படங்களை வெட்டி ஒட்டி ஆத்திசூடியின் பொருளைக் குழந்தைகள் மனதில் ஆழமாகப் பதிய உதவினர்.

**உயரிய நோக்கம் கொண்ட கல்வி**

**அறம் செய்ய விரும்பு** - நகரத்தாரின் வள்ளல் தன்மை இரத்தத்தில் பதிந்துள்ளதை, நடை பழகும் போதே கொடை பழகிய திறத்தை விரிவாக எடுத்துரைத்தனர். அவரவர் குடும்பங்களில், மூதாதையரால் செய்யப்பெற்ற தர்மங்களைப் பெற்றோர்களிடம் கேட்டறிந்து அடுத்த வகுப்பில் சொல்லுமாறு அறிவுறுத்தப்பெற்றனர். நல்லது செய்தால் நல்லது நடக்கும் என்பதை மனதில் பதிய வைத்தனர்.

**ஆறுவது சினம்** - கோபம் உடல் நலத்தைக் கெடுக்கும். சண்டையை வளர்க்கும். பொருள், புகழ், நலம் போன்றவற்றை இழக்க வைக்கும். அதனால் கோபம் கொள்ளலாகாது என்றும், அதை எப்படி எளிதாகத் தவிர்க்கலாம் என்றும் குழந்தைகளுக்கு அறிவுறுத்தப் பெற்றது.

**இயல்வது கரவேல்** - தம்மால் இயன்றவற்றை மற்றவர்களுக்கு ஒளிக்காது கொடுக்கவும், பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மை வாழ்வில் சிறப்பைச் சேர்க்கும், நல்ல நட்பு அன்பை வளர்க்கும் என்று கற்பிக்கப் பெற்றது. பழங்கால நகரத்தார் நடைமுறைகள், முன்மாதிரியான நிகழ்வுகள், சக குழந்தைகளுக்கு தம்மால் இயன்றதைத் தந்து உதவிய நிகழ்வுகளை பயிற்சியாளர்கள் நன்கு நினைவுபடுத்திப் பாராட்டி, குழந்தைகளைப் பெரிதும் கவர்ந்தனர்.

பெரும்பாலான குழந்தைகள் புரிந்து கொண்டு, மூன்று அடிகளையும் நினைவு கூர்ந்து பொருளும் கூறி மற்ற குழந்தைகள் தடுமாறும் போது அடி எடுத்துக் கொடுத்து உதவியது பயிற்சியாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பயிற்சியில் கலந்து கொண்ட குழந்தைகளுக்கு வீட்டுப்பாடங்கள் கொடுக்கப் பெற்றது. பெற்றோர், பெரியோர் ஆர்வமும் ஆசியும், குழந்தைகளின் கற்றல் நாட்டமும் பெரிதும் பாராட்டத் தகுந்தது.

இந்த உயர்ந்த முன்னெடுப்பு முயற்சிகளின் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்திற்கு அசைக்க முடியாத ஒற்றுமையும் கொண்ட மகளிர் மன்றம், நகரத்தார் சங்கம், இளைஞர் சங்கம், அமைப்பாளர்கள், தன்னார்வலர்கள், புகழ்பெற்ற வெற்றிக் கொடி நாட்டிய நகரத்தார் பெருமக்கள் என அனைவரின் உயர்ந்த பங்களிப்புடன் பழமையைப் போற்றி, பெரியோர் வழி பயணித்து, விரைவில் மீண்டும் ஒரு நகரத்தார் பொற்காலம் காணலாம் என்ற நிலையை "வேர்களைத் தேடி" நிகழ்ச்சி உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையல்ல.

தொகுப்பு: வணக்கம் சுப்பிரமணியம்

## தமிழ்ப் பற்றாளர், கல்வியாளர், ஆலைப் பேரரசர்

# கருமுத்து தியாகராசர்



டாக்டர் சோம வள்ளியப்பன்



நகரத்தார் சங்கங்கள், ஐக்கிய சங்கம், ஐபிசிஎன் போன்ற அமைப்புகள் ஏற்பாடு செய்த கூட்டங்கள், நகரத்தார் பெரு ஆளுமைகளின் பிறந்தநாள் விழாக்கள், நகரத்தார் பள்ளிகள் ஆகியவற்றில் செய்த சொற்பொழிவுகள் ஆகியவற்றைத் தொகுத்து, சென்ற ஆண்டு 'நகரத்தார்கள்' என்று ஒரு புத்தகம் வெளியிட்டேன். அதில் என் முனைவர் பட்ட ஆய்வு வழிகாட்டி, தினமணி செட்டியாரின் குமாரர், டாக்டர் பிரகதீஸ்வரன் குறித்த கட்டுரையையும் சேர்த்திருந்தேன்.

அதன் ஒரு பிரதியை அவர், மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரிக்கு சென்றிருந்த போது, திரு ஹரி தியாகராசன் அவர்களிடம் கொடுத்திருக்கிறார். அப்போதே புரட்டிப் பார்த்த திரு ஹரி தியாகராசன், 'இந்தப் புத்தகத்தில் பல நகரத்தார் ஆளுமைகள் குறித்த கட்டுரைகள் இருக்கின்றன. மகிழ்ச்சி. என் அய்யா கருமுத்து தியாகராசன் செட்டியார் குறித்த கட்டுரை இல்லையே!' என்று சொல்லியிருக்கிறார்.

அந்தத் தகவலை என்னிடம் டாக்டர் பிரகதீஸ்வரன் அவர்கள் பகிர்ந்து கொள்ள, நான் பதறிப்போனேன். நான் பேசிய பேச்சுக்களின் தொகுப்புதான் அந்தப் புத்தகம். அதனால் விட்டுப் போயிருக்கிறது. ஆனாலும், பலரும் படிக்கக்கூடிய, காலம் தாண்டி நிற்கக்கூடிய ஒரு ஆவணத்தில் நகரத்தார்களுக்கு மட்டுமல்ல, தமிழர்களுக்கே பெருமை சேர்த்த கருமுத்து தியாகராசன் செட்டியார் குறித்து கட்டுரை அவசியம் இருக்க வேண்டும் என்று, அதற்காக அவர் குறித்த புத்தகங்கள் சிலவற்றைப் படித்து, அதில் இருந்து சிலவற்றை வைத்து இந்தக் கட்டுரை எழுதியிருக்கிறேன்.

ஆலைப் பேரரசர் கருமுத்து தியாகராசர் என்ற தலைப்பில், திருமதி டாக்டர் இராதா தியாகராசன் எழுதிய புத்தகத்தைப் படித்து வியந்து போனேன். எப்படிப்பட்ட ஆளுமை கருமுத்து தியாகராசர்! எவ்வளவு மன உறுதியோடு செயல்பட்டு இருக்கிறார்!! எத்தனை ஆலைகள் அமைத்திருக்கிறார். வங்கிகள், காப்பீடு, கல்வி நிறுவனங்கள் என அவர் உருவாக்கிய அமைப்புகள்தான் எத்தனை எத்தனை!

கருமுத்து தியாகராசர் சாதனைகளையும் பெருமைகளையும் ஒரு கட்டுரையில் சொல்லிவிட முடியாது. பல புத்தகங்கள் எழுதும் அளவிற்கு சாதித்திருக்கிறார். இந்தக் கட்டுரை ஒரு சிறுகுறிப்பு மட்டுமே.

**பேரரசர் கருமுத்து தியாகராசன் செட்டியார்.**

தியாகராசரின் தந்தை முத்துக்கருப்பன் செட்டியார் வாழ்ந்தது கருங்குளத்தில். 1860 களிலேயே அவர் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் செய்திருக்கிறார். தந்தையிடமிருந்து தியாகராசர் கற்றுக்கொண்டது ஏராளம்.

தியாகராசர் 1893-ம் ஆண்டு, அத்திக்காடு தெக்கூரில் பெற்றோருக்கு 10-வது குழந்தையாகப் பிறந்தார். அவருக்கு மூன்று சகோதரர்கள் மற்றும் ஆறு சகோதரிகள். அவரது 9-வது வயதில் இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பள்ளிப்படிப்பை அங்கே முடிக்கையில் ஆங்கிலப் பயிற்சி பெற்றார். தவிர, இலங்கையின் பெரும் புலவர் சிறு கைலாச பிள்ளையிடம் மூன்று ஆண்டுகள் தமிழ் படித்தார்.

இந்தியா வந்து, மணமுடித்து 1914-ல் மீண்டும் இலங்கை போய், 'மார்னிங் லீடர்' என்ற ஆங்கில நாளிதழில் செய்தியாளராகப் பணியாற்றியிருக்கிறார். தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து எழுதி, கிளர்ச்சிகளும் செய்தார். தொழிலாளர் நிலை குறித்து வெள்ளை அரசு அமைத்த ஒரு கமிஷனின் மழுப்பல் அறிக்கை குறித்து தியாகராசர் விளக்கமாக எழுதி அம்பலப்படுத்தினார். ஹிந்து, இண்டியன் பேட்ரியாட், நியூ இந்தியா ஆகிய இதழ்கள் தியாகராசரின் அறிக்கையை மேற்கோள் காட்டி தலையங்கங்கள் எழுதின.

தியாகராசர் இறைபக்தி மிக்கவர். தேவாரம், திருவாசகம் தவறாமல் ஓதுவார். சைவ உணவுதான் உட்கொள்வார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார், மகா மகோபாத்தியாயா, உ.வே. சாமிநாத ஐயர், சோமசுந்தர பாரதியார், வ.உ.சி., தமிழ்க் கடல் ராய சொ போன்ற பல தமிழறிஞர்களோடு நேரடித் தொடர்பில் இருந்தார்.

இந்தித் திணிப்பை கடுமையாக எதிர்த்தார். இராஜகோபாலாச்சாரி, காந்தியடிகள் ஆகியோருக்கு விரிவாக கடிதங்கள் எழுதினார். அவரது 'தமிழ்நாடு' நாளிதழில் இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்து தலையங்கங்கள் எழுதினார். பல தமிழ் சங்கங்களுக்கு புரவலராக இருந்தார். மறைமலை அடிகளின் தனித் தமிழ் இயக்கத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டார்.

அமைதியான முறையில்தான் நாடு விடுதலை அடைய வேண்டும் என்று விரும்பியதால் நேதாஜி அவர்களின் கட்சியில் சேர மறுத்து விட்டார். தேசிய விடுதலையில் ஈடுபாடு கொண்ட காங்கிரஸ் உறுப்பினராக இருந்த தியாகராசர், இந்திய தேசிய காங்கிரஸின் மெட்ராஸ் மாகாண காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் இந்தித் திணிப்பு காரணமாக அதிலிருந்து விலகி, திராவிட அமைப்பினரோடு சேர்ந்து இயங்கினார். அதற்காக திராவிட இயக்கத்தினர் தியாகராசரை பெரிதும் மதித்தார்கள்.

தியாகராசர் தமிழின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழ்நாடு நாளிதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார். இவர் நடத்திய தியாகராசர் கல்லூரியில் இருந்த மாணவர்களும் பெரிய அளவில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். போலீஸ், கல்லூரி வளாகத்திற்குள் நுழைந்து மாணவர்களை அடித்தது. தியாகராசரைக் கைது செய்ய முயற்சி நடந்தபோது, அவருக்கு வேண்டியவர்கள் மதுரைக்கு வர வேண்டாம் என்று சொன்னதைக் கேட்காமல் மதுரை வந்தார். போலீசாரின் அடக்குமுறைகளைப் படமெடுத்து வெளியிட்டார்.

## தமிழ்ப் பற்றும் தமிழுக்குச் சேவையும்

1914-இல் கொழும்பு நகரில் மார்னிங் லீடர் என்னும் ஆங்கில நாளிதழில் செய்தியாளராகச் சேர்ந்தவர், பின் அதன் துணை ஆசிரியரானார். மதுரை வந்த பிறகு சைமன் பாதிரியாரிடம் ஆங்கிலத்திற்கு என்று நாள்தோறும் தனிப்பயிற்சி எடுத்துக் கொண்டார். அவருக்கு நல்ல ஆங்கிலப் புலமை இருந்தும், எப்போதும் தமிழில்தான் கடிதங்கள் எழுதினார்.

1951-ல் இவர் நிர்வாக ஆசிரியராக மதுரையிலிருந்து 'தமிழ்நாடு' என்ற ஒரு நாளிதழ் நடத்தினார். தமிழ்நாடு இதழ் 17 ஆண்டுகள் நாளிதழாகவும் 5 ஆண்டுகள் மாத இதழாகவும் வெளிவந்தது.

அதில் தனித்தமிழ் போக்கைக் கடைப்பிடித்தார். இந்தியை எதிர்த்தார். அதனால் தனித்தமிழை தினமணி போன்ற இதழ்களும் பின்பற்ற வேண்டி வந்தது. வடமொழிச் சொற்களைத் தவிர்த்து தனித்தமிழில் எழுத பலருக்கு அது முன்மாதிரியானது. ஊக்கம் கொடுத்தது.

குழு, வேட்பாளர், பேருந்து, தொழில்கள், ஆளுநர், நடுவண் அரசு, மாநில அரசு, அரசாணை, வட்டம், மாவட்டம், வருவாய் துறை, மேல்முறையீடு, ஓட்டுநர், நடத்துனர், அரசுத் துறை, தனியார் துறை, புனித நீராட்டு, மருத்துவமனை, மருந்தகம், அமர்வு போன்ற பல புதிய தமிழ்ச் சொற்கள் இவர் காலத்தில் உருவாக்கப்பட்டன. ஆகாஷ்வாணி, அகில இந்திய வானொலி ஆனது. ஆலயங்களில் தமிழில் வழிபாடு, மாநிலத்திற்கு தமிழ்நாடு என்ற பெயர் வேண்டும் என்றெல்லாம் முதலில் எழுதினார்.

1968-ஆம் ஆண்டு இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் வரவேற்புக் குழுவில் இருந்த தியாகராசர், ஸ்ரீ, ஸ்ரீமான் என்பதற்கு பதில் அழைப்பிதழில் திரு. என்றுதான் எழுதவேண்டும் என்று வலியுறுத்தி, அதற்காக போராடி, செயல்படுத்தினார். இப்போது மிக எளிதாக அனைவரும் திரு., திருமதி ஆகிய சொற்களைப் பயன்படுத்துகிறோம். அதை முதலில் அறிமுகப்படுத்தியவரும் செயல்படுத்தியவரும் கலைத்தந்தை தியாகராசர்தான்.

## முன் மாதிரி தொழிலதிபர்

நட்டம் காரணமாக மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்ட மதுரை நூற்பாலையிலிருந்து வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்காகவே மதுரை மீனாட்சி ஆலை என்ற நூற்பாலையைத் தொடங்கினார். அப்படித்தான் அவர் நூற்பாலைகள் தொழிலுக்கு வந்தது. மதுரை மீனாட்சி நூற்பாலை என்று பெயரிட்டு அந்த ஆலைக்காக 1923-ஆம் ஆண்டு 15 லட்சம் ரூபாய் பங்கு முதல் சேர்த்தார். மிகச் சிறந்த எந்திரங்கள் மற்றும் மிகச் சிறந்த பணியாளர்களைக் கொண்டு, தரத்தில் மிக அற்புதமான நூல் தயாரித்து விற்பனை செய்தார்.

எகிப்து, உகாண்டா, சூடான் போன்ற நாடுகளிலிருந்து பஞ்சு இறக்குமதி செய்தார். மூலப்பொருளான பஞ்சு, ஆலைக்குள் நேரடியாக வரும் விதமாக ஆலைக்குள் ரயில்வே தண்டவாளங்கள் (ரயில்வே சிலைடிங்) அமைத்திருந்தார். அவரது பொறியாளர்களையும், மேலாளர்களையும், ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று பார்த்து கற்றுக்கொண்டுவரச் செய்தார். 1930-ஆம் ஆண்டுகளிலேயே இரவு ஷிப்ட் உற்பத்தி செய்ய வேண்டிய அளவிற்கு அவருடைய நூலுக்குத் தேவை இருந்தது.

ஆலைத் தொழிலாளர்களுக்காக ஊழியர் குடியிருப்புகளும் அமைத்தார். அவற்றைப் பார்த்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் அதைப் பாராட்டினார். தொழிலாளர்களுக்கு அப்போதே காப்பீடு வழங்கினார். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தொழிலாளர் நல வாரியத்தின் தலைவராக செயல்பட்டார்.

(தொடரும்)

# வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...



சோமலெ
சோமசுந்தரம்

## 8 கடற்கரை நகரம்!

### வித்தியாசமான வியட்நாம்!

இந்தியாவிற்குச் சுற்றுப் பயணம் வருவோரில் பலர் போதிய நேரமோ, பணமோ இல்லாத காரணத்தால் "Golden Triangle" என்று குறிப்பிடப்படுகின்ற புது தில்லி – ஆக்ரா – ஜெய்ப்பூர் நகரங்களை மட்டும் பார்த்துவிட்டு இந்தியாவைப் பார்த்துவிட்டதாகச் சொல்வார்கள். அது போன்று, வியட்நாமிற்கு வரும் பெரும்பாலான சுற்றுலாவாசிகள் ஹனாய் மற்றும் ஹோ சி மின் சிட்டி பகுதிகளுக்கு மற்றும் செல்வது வழக்கம்.

தலைநகர் ஹனாய்க்கு வடக்கே, சீன எல்லையை நோக்கி உள்ள நின்ஹ் பின்ஹ் மாநிலம், ஹ ஜியாங் நகரம் போன்ற கிராமிய மலைப்பகுதிகளும், ஹனாய் நகருக்கும், அதன் தெற்கில் உள்ள ஹோ சி மின் சிட்டிக்கும் இடையே உள்ள மத்திய வியட்நாம் கடற்கரைப் பகுதிகளும், வியட்நாம் வித்தியாசமான நாடு என நினைவூட்டும் சுற்றுலா மையங்களாகும்.

### கடற்கரை நகரம்!

மத்திய வியட்நாமில் உள்ள ட நாங் இந்த நாட்டின் மூன்றாவது பெரிய நகரம். இந்நகரின் சிறப்பே கண்ணைக் கவர்கின்ற, உள்ளத்தைத் தொடுகின்ற கடற்கரைகள்.



உலகின் பல பகுதிகளில் கடற்கரைகள் உள்ளன. மிகப் புகழ் பெற்ற அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் உள்ள கடற்கரைப் பகுதிகளுக்கு நான் பல முறை சென்று வந்துள்ளேன். அவற்றுக்கு இணையாக, சில பகுதிகளில் அவற்றையும் விட ரம்மியமாக உள்ளன ட நாங் பகுதி கடற்கரைகள்!

கண்ணுக்கெட்டிய வரை ஒரு குப்பை கூட இல்லாத மிகத் தூய்மையான கடற்கரைகள், தும்பைப் பூ வெண்மையில் நீண்ட பரப்பில் கடல் மண், கடற்கரையிலும் அவற்றை ஒட்டிய சாலைகளிலும் வரிசையாக நடப்பட்டுள்ள அலங்காரப் பனை மரங்கள், கடற்கரையையொட்டி மேற்கத்திய நாடுகளில் உள்ள தரத்திற்கு ஒப்பான உல்லாச விடுதிகள்... இப்படி ட நாங் கடற்கரை நகரத்தின் சிறப்புக்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

இந்த சிறப்பு அம்சங்கள் மட்டுமன்றி, கடலில் பலகையில் உலா வரும் கேளிக்கை விளையாட்டு (Surfing) விளையாட இப்பகுதியில் உள்ள கடல், கற்றுக்குட்டிகள் முதல் வல்லுநர்கள் வரை அனைவருக்கும் மிகவும் சாதகமாக இருப்பதால் வெளி நாட்டவர்கள் பலரும் இங்கு பல நாட்கள் தங்கி மகிழ்கின்றனர்.

பொதுவாக இந்தியர்கள் ஊர் சுற்றிப் பார்க்கும் போது முக்கியமான இடங்களைப் பட்டியலிட்டு அனைத்தையும் பார்த்து விட விரும்புவோம். மேற்கத்திய நாட்டு சுற்றுலாப் பயணிகளோ வேறு எதையுமே பார்க்காமல், கடற்கரையில் படுத்திருந்தும், கடல் அலைகளில் பலகைகளில் உலா வந்தும் ஒரு வாரம் முழுவதும் ஒரே இடத்தில் இருந்து விட்டு ஊருக்கு திரும்பிச் சென்று விடுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ட நாங் ஒரு சொர்க்கலோகமாக இருக்கிறது.

ட நாங் கடற்கரை பகுதிகளில் இல்லாதவை: சிலைகள், குப்பை, தள்ளு வண்டிக் கடைகள், குடிசைகள். இருப்பவை: இயற்கையான கடற்கரை, அதற்குப் பொலிவூட்டும் வகையில் நடப்பட்ட பனை மரங்கள், ஏராளமான சுற்றுலாப் பயணிகள்.

### வாழை மலை

கடற்கரைகளை அனுபவித்த சுற்றுலாவாசிகள் ஒரு மாற்றத்திற்காக அருகே உள்ள 'பா னா' மலைக்குச் செல்கின்றனர். அது என்ன 'பா னா' மலை? தானாக இயற்கையில் வளர்கின்ற வாழை மரங்கள் இந்த மலையில் அதிகமாக உள்ளன. 'பனானா' என்ற ஆங்கிலச்



சொல் எளிதாக வியட்னாமியர்கள் வாயில் வராததால் 'பா னா' மலை என்று சொல்கின்றனர்!

இந்த மலையை சுற்றிப் பார்க்க ஆறு கிலோமீட்டர் நீளத்திற்கு இரும்புக் கம்பித் தொங்கு வண்டிகள் (cable cars) அமைக்கப்பட்டுள்ளன. ஐஸ்லேண்ட் நாட்டில் உள்ள உலகின் மிக நீளமான (8 கிலோமீட்டர்) தொங்கு வண்டிகளுக்கு அடுத்த நீளமான இவற்றில் கிட்டத்தட்ட 5,000 அடி உயரத்தில் பயணம் செய்து கீழே உள்ள இயற்கை வாழைத் தோப்புக்களையும், இயற்கை காட்சிகளையும் ரசித்தது என் வியட்நாம் பயண நினைவுகளில் நிலைத்து நிற்கும் காட்சிகளாகும்.

### கைக்கு ஒரு சிலை, காலுக்கு ஒரு சிலை!



வியட்நாமில் சிலை என்றால் மேனாள் அதிபர் ஹோ சி மின் அவர்களின் சிலை தான் நம் கண் முன் தோன்றும். 'பா னா' மலையின் உச்சியை அடைந்ததும் உள்ள பூங்காவில் நம்மை வரவேற்பதோ முற்றிலும் புதுமையான கலைப் பூங்கா. அங்கு, மூக்கு, காது, கை, கால், மார்பகம் என உடலின் பல உறுப்புகளைச் சித்தரிக்கும் கலைத்திறனை, ஒவ்வொரு உறுப்பிற்கும் தனிப்பட்ட சிலைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

### தங்கப் பாலம்

சமீபத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கூத்தனூர் சரஸ்வதி ஆலயத்திற்கு சென்ற போது அங்கிருந்த அர்ச்சகர் என்னிடம் "இந்தக் கோவில் இரண்டாம் ராஜ ராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டிருந்தாலும், பிரபலமானதற்குக் காரணம் கடந்த சில வருடங்களில் வந்த சமூக ஊடகங்களே" என்றார். அதே கதை தான் வியட்நாமிலும்... 2018 இல் கட்டப்பட்ட தங்கப் பாலத்தைப் பற்றி சமூக ஊடகங்களில் படித்த வியட்நாமியர்கள் தொன்று தொட்டு அங்குள்ள பா னா மலைக்கு பெருமளவில் விடுமுறையில் வரத்தொடங்கி விட்டனர். தங்கப் பாலத்திற்கும் தங்கத் திற்கும் தொடர்பில்லை. மலை மேல் உள்ள இந்தப் பாலம் எந்த ஆற்றையும் கடந்து போகக் கட்டப்படவில்லை. இந்தப் பாலத்தை தாங்குவது போல் கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான இரண்டு கைகளும், பாலத்தில் நின்று தங்களைத் தானே படமெடுத்து சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்வதுமே இப்பாலத்தின் சிறப்புக்களாகும்.






### பெண் புத்தர்!

வியட்நாம் நாட்டின் மிக உயரமான புத்தர் சிலை ட நாங் பகுதியில் உள்ளது. லின்ஹ் உங் பகோடாவில் (பகோடா என்றால் கோவில் என்று பொருள்) உள்ள கலை வேலைப்பாடுகள் மிகுந்த 220 அடி உயர சிலையை 115 அடி உயர தாமரை மலரில் அமைத்துள்ளது பொன் குடத்திற்குப் பொட்டு வைத்தது போல் அமைந்துள்ளது. கடலை நோக்கிப் பார்க்கின்ற இந்த புத்தர் சிலை கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலையை நினைவுப்படுத்தியது.

புத்தர் எப்போது பெண் ஆனார் என்ற கேள்வி உங்கள் மனதில் வரலாம். பெண் புத்த குரு ஒருவரின் நினைவில் வைக்கப்பட்ட சிலையே 'பெண் புத்தர்' என வழிபடப்படுகிறது.

(தொடரும்)





சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

### 104) திருமுருகன் பூண்டி (Pincode - 641 652):

அவிநாசியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இத்தலம் சுந்தரர் பாடல் பெற்றது. சேரமான் கொடுத்த செல்வத்தோடு, சுந்தரர் இவ்வழியே வந்த போது, இறைவன் தன் பூதகணங்களை வேடர் வடிவில் அனுப்பி, அச்செல்வங்களைப் பறித்துக் கொண்டார். சுந்தரர் "எற்றுக்கு இங்கிருந்தீர்" என்று சினத்தோடி பாடிய பின் செல்வங்கள் திரும்பக் கிடைத்தன. இது முருகப் பெருமான் வழிபட்ட தலம். எனவே, இறைவர் முருகநாதசுவாமி. இறைவி முயங்குபூண் முலையம்மை. சுவாமி, அம்மன் சந்நிதிகள் மேற்குப் பார்த்தவை. சிவபெருமான் இருக்கும் இடத்தைச் சுந்தரருக்குக் கூப்பிட்டுக் காட்டிய கூப்பிடு விநாயகர் சந்நிதி ஓர் பாறை மேல் உள்ளது. பிரமஹத்தி தோஷம் நீங்கிய தலம் என்பதால் சித்தப்பிரமை, பைத்தியம், பில்லி சூன்யம் இவை நீங்கப் பலரும் இங்குப் பல நாட்கள் தங்கி இருக்கிறார்கள். செட்டிப்பாளையம் வாசுதேவ முதலியார் இத்தலத்திற்குத் தலபுராணம் பாடி இருக்கிறார். இத்தலத்தில் திருப்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஆறாயிரம் ரூபாய் செலவில் நந்தவனம் அமைத்திருக்கிறார்கள். இக்கோயிலுக்குச் சற்றுத் தொலைவில் மாலாதரன் என்ற வேட மன்னன் வழிபட்ட மாதவனேஸ்வரர் கோயில் உள்ளது. இங்குள்ள வயிரவர் சந்நிதி சிறப்பானது.

### 105) திருநணா (பவானி) (Pincode - 638 301):

பவானி ஆறு காவிரியில் சேரும் இடத்தில் இத்தலம் உள்ளது. ஈரோட்டிலிருந்து பன்னிரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இத்தலம் சம்பந்தரால் பாடப்பெற்றது. குபேரன், விசுவாமித்திரர், பராசரமுனிவர் முதலியோர் வழிபட்ட இறைவன் பெயர்: சங்கமேஸ்வரர். இறைவி பெயர்: வேதாம்பிகை. கோயிலுக்குள் – நுழைந்ததும் அழகான மண்டபம் உள்ளது. இங்கு ஆதிகேசவப் பெருமாளும், சௌந்தரநாயகித் தாயாரும், யோக நரசிம்மரும் எழுந்தருளி இருக்கிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோவை மாவட்டத்தில் ஆட்சியராக இருந்த காரோ (GARO) என்ற வெள்ளைக்காரர் இங்கு வந்து படுத்து உறங்கும் போது ஒரு சிறிய பெண் குழந்தை வந்து அவரை எழுப்பி, அவர் கையைப் பிடித்து வெளியே வேகமாக இழுத்து வந்தது. மறுநிமிடம் அவர் படுத்திருந்த கட்டிடம் இடி மின்னலால் இடிந்து விழுந்தது. ஆச்சரியத்தோடு குழந்தையைப் பின் தொடர்ந்தார் ஆட்சியாளர். அது அம்மன் சந்நிதியில் புகுந்து மறைந்து விட்டது. அம்பாள் சந்நிதிக்கு நேரே வெளி மதிலில் துவாரம் செய்வித்து அதன் வழியே அந்த வெள்ளைக்காரன் அம்மனைக் கண்குளிரச் கண்டு வணங்கினார். பள்ளியறையில் வைக்கத் தந்தத்தால் ஆன பல்லக்கைச் செய்து அம்மனுக்குக் காணிக்கை ஆக்கினார். ஆடிப்பெருக்கன்று லட்சக்கணக்கான மக்கள் இந்தக் கூடுதுறையில் நீராடிச் சங்கமேஸ்வரரை வழிபட்டுச் செல்கின்றனர். இத்தலத்தில் தேவகோட்டையைச் சேர்ந்த பழ.ப. தேவராசன் செட்டியார் சுமார் நூறாண்டுகளுக்கு முன் திருநந்தவனம் வைத்துள்ளார்.

## நடுநாட்டுத் திருத்தலங்களில் நகரத்தார் திருப்பணிகள்

### 106) திருநெல்வாயில் அரத்துறை (Pincode - 606 111):

விருத்தாசலத்திலிருந்து தொழுதூர் செல்லும் சாலையில் உள்ள கொடிகளம் என்னும் இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இத்தலம் சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் பாடிய திருத்தலமாகும். நிவா நதிக்கரையில் உள்ள இத்தலத்தில் தான் சம்பந்தருக்கு இறைவன் முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், சின்னங்களும் அருளினார். ஊர்: நெல் வாயில். கோயில்: அரத்துறை, இறைவன்: அரத்துறைநாதர், இறைவி: அரத்துறை நாயகி. நிவா நதியில் வெள்ளம் வந்த போது அதனால் சேதம் உண்டாகாமல் இருக்க நந்தி தலையைத் திருப்பிப் பார்த்ததால் நந்தியின் தலை சற்றுத் திரும்பியுள்ளது. இந்தச் சிவாலயம் தேவகோட்டை ராம.அரு.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் பதினைந்தாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

107) கூடலையாற்றூர் (Pincode - 608 702):

இத்தலம் சிதம்பரத்திலிருந்து காவாலகுடி செல்லும் பாதையில் உள்ளது. மணிமுத்தாறும், வெள்ளாறும் கூடும் இடத்தில் உள்ளதால் கூடலையாற்றூர் எனப் பெயர் பெற்றது. வெள்ளப் பெருக்கில் பழைய கோயில் அழிய, அங்கிருந்த கற்களைக் கொண்டு வந்து இவ்வூரில் கோயிலைக் கட்டினர். இது நூறாண்டுகளுக்கும் முற்பட்ட கோயில். சுந்தரர் திருமுதுகுன்றம் சென்ற போது, இறைவன் அந்தணராக வந்து காட்சி தந்தார். சுந்தரர் திருமுதுகுன்றத்துக்கு வழி கேட்டார். அந்தணர் கூடலையாற்றூருக்கு வழி இது எனக் கூறி மறைந்தார். அதன் பிறகு சுந்தரர் இங்கு வந்து வழிபட்டார். இறைவன் பெயர் நெறிகாட்டுநாதர். இறைவி: புரிகுழல்நாயகி. பிரமனுக்கு நர்த்தனம் செய்து காட்டியதால் இறைவனுக்கு நர்த்தன வல்லபேஸ்வரர் என்றும் பெயர்.

பராசக்திக்கும் ஞானசக்திக்குமாக இங்கு இரண்டு அம்பாள் சந்நிதிகள் உள்ளன. இங்குள்ள சித்திரகுப்தர் திருமேனி மிக அழகானது. இங்கு நவக்கிரக சந்நிதி இல்லை. சனி பகவான் சந்நிதி மட்டும் உள்ளது. தேவகோட்டை ராம. அரு.அருணாசலம் செட்டியாரால் எண்பதாயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்று விக்ருதி ஆண்டு, தை மாதம், பதினெட்டாம் நாள் (30.01.1891) திருக்குட நன்னீராட்டு நடந்தது. இந்தத் திருப்பணிச் செல்வர் இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் நந்தவனம், அந்தணர் உறையுள், விடுதி முதலியனவும் அமைத்துள்ளார்.

108) திருவதிகை (Pincode - 607 106):

அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றான திருவதிகை, கடலூர் மாவட்டத்தில், பண்ருட்டியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இது சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவரும் பாடிய திருத்தலமாகும். அப்பர் பெருமான் இங்கு வந்து "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடித் தன்னுடைய தமக்கையாரிடம் திருநீறு பெற்றுச் சூலை நோயை நீக்கிச் சமண மதத்தை விட்டுச் சைவ மதத்திற்கு மீண்டு வந்தார். சைவ சமய சாத்திரமான உண்மை விளக்கம் என்ற நூலை அருளிய மனவாசகம் கடந்தார் இங்கு தான் அவதரித்தார். இத்தலத்தை மிதிக்க அஞ்சிய சுந்தரர் அருகிலுள்ள சித்தவட மடத்தில் தங்கிய பொழுது இறைவன் திருவடித் தீட்சை பெற்றார். கெடில நதிக்கரையிலுள்ள இத்தலத்தில் இறைவன் பெயர் வீரட்ட நாதர். இறைவி: திரிபுரசுந்தரி. திரிபுரத்தை எரித்த வீரச்செயல் நிகழ்ந்த இத்தலத்தில் ஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனம் காட்டி அருளினார். சுவாமி கருவறை பூமியில் நிழல் சாயாதபடி கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலைத் தேவகோட்டை மேனா வகையறா சீர்திருத்தம் செய்தனர். தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார் இருபதாயிரம் ரூபாய் செலவு செய்து இராஜகோபுரத் திருப்பணி செய்தார். இது 120 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற திருப்பணி ஆகும்.

109) திருநாவலூர் (Pincode - 607 204):

விழுப்புரத்திலிருந்து உளுந்தூர்ப்பேட்டை செல்லும் வழியில் இத்தலம் உள்ளது. சுந்தரர் அவதரித்த இத்தலம் இவரால் பாடப் பெற்றது. சுக்கிரன் வழிபட்ட இத்தலத்தில் இறைவன் பெயர்: திருநாவலேஸ்வரர். இறைவி: சுந்தர நாயகி. நவக்கிரகங்களில் சூரியன் திசை மாறி மூலவரைப் பார்த்தவாறுள்ளார். ஆலயத்தில் வரதராஜப் பெருமாள் சந்நிதியும் உள்ளது. கோயிலுக்கருகில் சுந்தரர் மடாலயம் உள்ளது. தேவகோட்டை ராம.அரு.அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் இருபதாயிரம் ரூபாய் செலவு செய்து, 120 ஆண்டுகளுக்கு முன் அம்மன் கோயில் அமைத்துத் திருநாள் மண்டபமும் கட்டினார்.

110) திருக்கோவலூர் (Pincode - 605 757):

திருவண்ணாமலையிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருக்கோவலூர் அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றாகும். இது அந்தகாசுரனைச் சிவபெருமான் வதைத்த திருத்தலம். மெய்ப்பொருள் நாயனார் அரசாட்சி செய்த இத்தலம் இராஜராஜ சோழ மன்னன் பிறந்த ஊராகும். இவருடைய அக்கா குந்தவைப் பிராட்டி சுவாமிக்குப் பொன் பூ வழங்கியதோடு சாவா மூவாப் பேராடுகள் முந்நூறும், இரண்டாயிரம் கழஞ்சு பொன்னும் ஊர்ச்சபையாரிடம் ஒப்படைத்த செய்தி கல்வெட்டில் பொறிக்கப் பெற்றுள்ளது. இங்குள்ள உலகளந்த பெருமாள் ஆழ்வார்களால் பாடப் பெற்றவர். இரவு நேரத்தில் முதலாழ்வார் மூவரும் கூடி மொழி விளக்கேற்றி முகுந்தனைத் தொழுத இத்தலம் வைணவத் திருத்தலமும் ஆகும்.

பாரி மகளிரை மலையமான் திருமுடிக்காரிக்கு மணம் செய்வித்த புலவர் கபிலர் இங்குதான் வடக்கிருந்து உயிர் நீத்தார். இங்கு இறைவன் பெயர்: வீரட்டேஸ்வரர். இறைவி: சிவானந்தவல்லி. இது அப்பரும், சம்பந்தரும் பாடிய திருத்தலம். ஞானானந்த சுவாமிகள் ஆசிரமம், ரகோத்தமர் பிருந்தாவனம் இரண்டும் இங்குதான் உள்ளன. இங்குள்ள பெரியானைக் கணபதியை வழிபட்ட ஔவையார் அவர் அருளால் ஆடிச் சுவாதி நாளில் சுந்தரருக்கும், சேரமான் பெருமாளுக்கும் முன்னதாகக் கயிலை சேர்ந்தார். இங்குள்ள சிவாலயம் தேவகோட்டை மெ.சித.வயி.ராம. சிதம்பரம் செட்டியாரால் ரூ.1,50,000/- செலவில் திருப்பணி செய்யப் பெற்று, அவர் சகோதரர் வயிரவன் செட்டியாரால் விரோதிகிருது ஆண்டு, தை மாதம், பனிரெண்டாம் நாள் (25.01.1912) திருக்குட நன்னீராட்டுச் செய்யப் பெற்றது.

(திருப்பணிகள் தொடரும்)




# திருப்புள்ளம் பூதங்குடி - [10]

நா. சௌரிராஜன், கோட்டையூர்





புள்ளம் பூதங்குடி ராமனே போற்றி!
சங்கு சக்கர தாரியே போற்றி!
பூமித் தாயே போற்றி!
பொற்றாமரையாளே போற்றி! போற்றி!

*****

இத்தலம் தஞ்சையில் இருந்து கும்பகோணம் செல்லும் வழியில், சுவாமி மலையில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. திரு ஆதனூர் திவ்ய தேசத்திற்கு மிக அருகில் சுமார் 0.5 கி.மீ. தொலைவில் உள்ளது.

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற போது, அவனை எதிர்த்து சடாயு என்ற புள் அவனுடன் போரிட்டது. ராவணனின் வாளால் தாக்கப்பட்டு இறகுகள் துண்டிக்கப்பட்டு, “ராமா....ராமா” என்ற சத்தத்துடன் கீழே விழுந்து குத்துயிராய்க் கிடக்க, சீதையைத் தேடி வந்த இராமபிரானும், இலட்சுமணரும் சடாயுவைக் காண்கிறார்கள். அவர்களைக் கண்ட சடாயு, இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற செய்தியைக் கூறி உயிர் விடுகிறான். சடாயுக்கு முக்தி அளித்து இராமபிரான் தீக்கடன், நீர்க்கடன் ஆகிய இறுதிச் சடங்குகளைச் செய்ய நினைக்கும் போது, சீதாப்பிராட்டி உடன் இல்லாமையை எண்ணித் துயர் கொள்ளப் பூமித்தாய் பொற்றாமரையில் மானசீகமாக வந்து நின்று காட்சியளிக்க, இராமன் சடாயுவுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தான். சடாயு என்ற புள்ளுக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்தமையால் புள்ளம் பூதங்குடியாயிற்று.

சூரியனின் மகனான ஜடாயு, தசரதச் சக்கரவர்த்திக்குப் பல உதவிகள் செய்து அவரின் உயிர்த் தோழனாக இருந்தவர். தசரதன் ஜடாயுவைத் தன் உயிராகவும், தன்னை உடம்பாகவும் பலரிடம் கூறுவார். எனவே, ராம லெட்சுமணர்கள் அவரைப் பெரிய தந்தையாகப் பாவித்தனர். இவரை வைணவ சம்பிரதாயத்தில் பெரிய உடையார் எனக் கூறுவர். தன் தகப்பனார் தசரதனுக்கு இறுதிச் சடங்குகள் செய்ய இயலாமல் போன குறை தீர, ஜடாயுவுக்கு அதைச் செய்து, அவனுக்கு ராமன் மோட்சம் அளித்தார்.

நான்கு கரங்களுடன் சங்கு சக்ரதாரியாக ராமன் சயனத் திருக்கோலத்தில் உள்ள தலம் 108-இல் இது ஒன்றுதான்! இதுவும் ஸ்ரீரங்கத்தைப் போலவே காவேரி கொள்ளிடத்திற்கு மத்தியில் உள்ளது.

திருமங்கையாழ்வாரால் பாசுரம் பெற்ற இத்தலத்தில் மூலவர் வல்வில் இராமன். சங்கு சக்கரத்துடன் புஜங்க சயனம். கிழக்கு நோக்கியது. தாயார்: பூமிப்பிராட்டி, பொற்றாமரையாள்.

*****

# திரு ஆதனூர் - [11]

ஆதனூர் ஆண்டு அளக்கும் ஐயனே போற்றி!
காமதேனு வணங்கிய கடவுளே போற்றி!
ஸ்ரீரங்க நாயகித் தாயே போற்றி! போற்றி!

*****

இத்தலம் சுவாமிமலையில் இருந்து 3 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவிலும் உள்ளது. புள்ளம் பூதங்குடி திவ்ய தேசத்துக்கு மிக அருகில் உள்ளது. இத்தலமும் காவேரி, கொள்ளிடம் ஆறுகளுக்கு மத்தியில் உள்ளது.

காமதேனு தவமிருந்து பெருமாளைப் பூஜித்ததால் (ஆ + தன் + ஊர்) ஆதனூர் ஆயிற்று. ஸ்ரீரங்கம் கோயிலைப் போலவே இங்கும் ஒரு காலத்தில் 7 மதில்கள் இருந்ததாகவும், பிற்காலத்தில் அழிந்துபட்டது என்றும் அறிய முடிகிறது. கர்ப்பக்கிரகத்திற்குள் இரண்டு தூண்கள் உள்ளன.



அவற்றை நாம் தழுவிக் கொண்டால், சொர்க்கம் கிடைக்கும் என்பது ஐதீகம். இது மாதிரியான இரண்டு தூண்கள் 108 திவ்ய தேசங்களில் திருவரங்கத்திலும், இந்த ஆதனூரிலும் மட்டுமே உள்ளன.

இலங்கையில் இருந்து அயோத்தி செல்லும் போது, ஆஞ்சநேயர் இவ்வூரில் இரண்டு தினங்கள் தங்கி இளைப்பாறி சந்தியா வந்தனம் செய்தார். அதன்பின், இராமபிரான் இங்கே வந்த போது, “என் பக்தன் இங்கே வந்தானா?” எனக் கேட்டுத் தம் திருவடியைப் பதித்ததாக வரலாறு. வீர சுதர்சன ஆஞ்சநேயர் என்ற பெயரில் இன்றும் இங்குள்ள ஆஞ்சநேயரும், ஸ்ரீராமர் திருவடியும் தனிச் சிறப்பு வாய்ந்தவை.

“ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன்” என்று திருமங்கை யாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்திருத்தலத்தின் மூலவர், ஆண்டு அளக்கும் ஐயன். கையில் மரக்கால், ஓலை, எழுத்தாணியுடன் பள்ளி கொண்ட திருக்கோலம். காலடியில் காமதேனுவும், திருமங்கையாழ்வாரும் உள்ளனர். தாயார் : ஸ்ரீரெங்க நாயகியார்.

திருமங்கையாழ்வார் கோவில் மதில் சுவர் எழுப்பிய சமயம், வேலை பார்த்தவர்களுக்குக் கூலி கொடுத்திடப் பணம் இல்லாமல் தவித்த போது, அவர் பெருமாளை வேண்டி நிற்க, இவ்வுலகைப் படைத்து ஆண்டு அளக்கும் ஐயனாகிய பெருமாள், மரக்கால், (அளக்கும் படி) ஏடு, எழுத்தாணியுடன் ஒரு வணிகர் வேடத்தில் வந்து படி அளந்து கொடுத்ததாக வரலாறு.

# திருக்குடந்தை (கும்பகோணம்) - (12)

திருக்குடந்தை சாரங்கபாணியே போற்றி!
சாரங்க வில்லை ஏந்தியவனே போற்றி!
ஆரா அமுதே அன்பே போற்றி!
படிதாண்டாப் பத்தினியே போற்றி!
கோமளவல்லித் தாயே போற்றி! போற்றி!

*****

கோயில்கள் நிறைந்த கோயில்களின் நகரமான குடந்தை எனும் கும்பகோணத்தில் பள்ளிகொண்டுள்ள ஆராவமுதப் பெருமாளைப் பற்றிப் பல புராணங்களும் பேசுகின்றன.

ஏழு ஆழ்வார்களால், 52 பாசுரங்களினால் மங்களாசாசனம் செய்யப்பட்ட இக் கோயிலின் ராஜகோபுரம் உயரத்தில் மூன்றாவது ஆகும். முதலாவது ஸ்ரீரங்கம் 236 அடி உயரம். இரண்டாவது, ஸ்ரீவில்லிப்புத்தூர் 165 அடி உயரம் ஆகும். மூன்றாவது இக்குடந்தையின் ராஜகோபுரம் 150 அடி உயரம் ஆகும்.

வட இந்தியாவில் 12 ஆண்டுகட்கு ஒருமுறை கொண்டாடப்படும் கும்பமேளாவைப் போல, இங்கும் 12 ஆண்டுகட்கு ஒருமுறை மகாமகம் என்னும் நீராடல் விழா கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் உள்ள புண்ணிய நதிகளான கங்கை, யமுனா, சரஸ்வதி, கோதாவரி, நர்மதை, கிருஷ்ணா, சிந்து, சரயு, காவேரி ஆகிய ஒன்பது நதிகளும் இங்கு மகாமகக் குளத்தில் நீராடிப் பாவங்களையும் போக்கிப் புனிதம் அடைவதாக ஐதீகம். இக்குளக் கரையில் 9 நதிக் கன்னிகைகட்கும் 9 சிலைகள் உள்ளன. இந்த அமைப்பு இங்கு மட்டுமே உள்ளது.

இத்தலத்தில் உத்தராயண வாசல், தட்சிணாயன வாசல் என இரண்டு வாசல்கள் உள்ளன. அந்தந்தக் காலங்களில் அதற்குரிய வாசல் வழியே சென்று வழிபாடு செய்யப்படுகிறது. இங்குள்ள உற்சவமூர்த்தி சாரங்கம் என்னும் வில்லை எப்போதும் கையில் வைத்திருப்பதால் சாரங்கபாணி என்ற திருநாமம் உண்டாயிற்று. தாயார் கோமளவல்லி ஒரு போதும் வெளியே உலா வராமல், ஆலயத்துக்குள்ளேயே இருந்து இறைவன் திருப்பணியிலேயே இடையறாது ஈடுபட்டு இருப்பதால், படி தாண்டாப் பத்தினி என்ற பெயரும் தாயாருக்குண்டு.

வைணவ மத வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய கிருஷ்ண தேவராயரால் இத்தலம் புதுப்பிக்கப்பட்டது. நாலாயிரம் திவ்ய பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுப்பதற்கு இப்பெருமானே காரணமாக இருந்ததாகக் கூறுவர். 12 ஆழ்வார்களின் சந்நிதியும் இங்கு உள்ளது. மூலவர்: சாரங்கபாணி, ஆராவமுதன், கிழக்கு நோக்கிய சயனத் திருக்கோலம். தாயார்: படிதாண்டாப் பத்தினி எனும் கோமளவல்லி.



வேறு எங்கும் இல்லாத ஒரு அரிய, மிக அழகான, கண்களைக் கவரும் திருக்காட்சி ஒன்றை இங்கே மட்டுமே காணலாம். பெருமாளின் கருவறையே அதாவது மூலஸ்தானமே பெரிய தேர் வடிவில் அமைந்துள்ளது. பெருமாளின் கருவறையைச் சுற்றி வரும் போது இதைக் காணலாம். மிகவும் பிரம்மாண்ட சக்கரங்கள் கொண்ட திருத்தேர்! அப்படி ஒரு அழகுத் தேர்! தாயாரைத் திருமணம் செய்யப் பெருமாள் வைகுண்டத்திலிருந்து இறங்கிய தேரின் வடிவம் இது!

இந்த அழகுத் தேரில் வந்த ஆராவமுதனையும், கோமளவல்லி எனும் அழகுத் தாயாரையும் இதயத்தில் நிறுத்தி வணங்கி விட்டு, அடுத்த திவ்ய தேசமான ஒப்பிலியப்பன் கோயில் நோக்கிச் செல்வோம்.

(பயணம் தொடரும்)



# ஒன்பது நகரத்தார் கோவில்கள்

## நூல் உருவானது எப்படி? உமா மெய்யப்பன் பேட்டி...

சொ.சொ.மீ. எழுதிய 'ஒன்பது நகரக் கோயில்கள்' பற்றிய நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, வெளியிட்டுள்ள உமா மெய்யப்பன், அந் நூலை மொழிபெயர்த்த விதத்தை சுவாரஸ்யமாக விளக்கினார்.

"இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாக இருந்தவர்களுள் முக்கியமானவர் மதுரையிலுள்ள ஒரு ரைட்டர். சொ.சொ.மீ. அய்யா எப்போதுமே டைப் பண்ண மாட்டார். நோட்ஸ் எல்லாமே கையால் எழுதுவதுதான் அவர் பழக்கம். இதற்காகவே ஒரு ரைட்டரை நியமித்தோம். அவர் மதுரையில் அய்யாவைச் சந்தித்து அவருடைய கையெழுத்துப் பிரதிகளை வாங்கி, அதை டைப் செய்து, பின்னர் எங்களுக்கு இமெயிலில் அனுப்புவார். அதன் பிறகுதான் என்னுடைய மொழிபெயர்ப்புப் பணி துவங்கும். எங்களுடைய அடுத்த கட்டப் பணியே அப்போதுதான் நகரும். ஏதாவது திருத்தம் இருந்தால் கூட, அந்த ரைட்டர் நேரில் போய் அதை வாங்கி வந்து எங்களுக்கு அனுப்புவார். அந்தப் பக்கம் ஞானத்தின் ஊற்று. அறிவுச் சுரங்கம்! இந்தப் பக்கம் தகவல் தொழில்நுட்பத்தின் உச்சம். இரண்டும் சேர்ந்ததுதான் இந்த நூல். அய்யாவின் அந்த பாணியை நாங்கள் துளி கூடத் தொந்தரவு செய்யவில்லை. அய்யா எப்போது கொடுத்தாலும், எப்படிக் கொடுத்தாலும் அந்த ரைட்டர் உடனுக்குடன் போய் வாங்கி வந்து டைப் செய்து, உலகத்தில் நாங்கள் எந்த மூலையில் இருந்தாலும் அனுப்பி வைத்துவிடுவார். ஏனெனில் சிதம்பரம் இருப்பது சென்னை. பதிப்பாளர், கோயில்கள் பற்றி நிறைய நூல்கள் வெளியிடுவதால் அவரும் பிரயாணத்திலேயே தான் இருப்பார். நானும் அதிகமாகப் பயணங்களை மேற்கொள்பவள். எனவே, மொழியாக்கம், தொகுத்தல் எல்லாமே அதன் பிறகுதான் என்பதால், இந்த ஒருங்கிணைப்பு மிக நேர்த்தியாக இருந்ததால்தான் நூலாக்கம் சாத்தியமானது".

"இந்த நூலாக்கத்தின்போது நீங்கள் சந்தித்த சுவாரஸ்யமான சம்பவங்கள், மறக்க முடியாத சம்பவங்கள். இப்படி ஏதேனும் பகிர முடியுமா?"

"அந்த நூலாக்கத்தின்போதுதான் நம் செட்டிநாட்டை முழுமையாகப் பார்த்தேன். அதுவரையில் செட்டிநாட்டை இந்தளவுக்கு முழுமையாக நான் பார்த்ததில்லை. நான் பிறந்தது மாத்தூர் கோயில். திருமணமானது நேமம் கோயில். அவை இரண்டைத் தவிர, எப்போது ஊருக்கு வந்தாலும் பிள்ளையார்பட்டி போவதுண்டு. அதைத்தாண்டி, இரணியூர் எல்லாம் நான் போனதே இல்லை. இந்தப் புத்தகத்துக்காக எல்லா கோயில்களுக்குமே போகும் வாய்ப்பு கிடைத்தது. அய்யா ஒவ்வொரு சிற்பத்தைப் பற்றியும் எழுதும் போது, அதை நேரில் போய்ப் பார்த்து புகைப்படம் எடுக்க வேண்டும் அல்லவா. அந்தக் கோயிலின் அழகையும், சிறப்பையும் உள்வாங்கினால்தானே அய்யாவின் எழுத்தை அப்படியே ஆங்கிலத்தில் பிரதிபலிக்க முடியும்!



பிரேமா நாராயணன்

மேலும் அந்தப் புகைப்படங்களை எடுத்தவருக்கு நம் ஊர்ப் பக்கமெல்லாம் அதிகம் பரிச்சயம் இல்லை. நான் சென்னையில் உட்கார்ந்து கொண்டு, 'நீங்க போய் போட்டோ எடுத்துட்டு வாங்க' என்று சுலபமாகச் சொல்லி அனுப்பிவிட முடியாது. நம் கோயில்களில் அவருக்கு யாரையும் தெரியாது, அவரையும் அங்கேயுள்ள நிர்வாகிகளுக்கு தெரியாது. அவரே பிற்பாடு சொன்னார், "மேடம், நீங்க வரலன்னா இந்தளவுக்கு எடுத்திருக்க முடியுமான்னு தெரியல." என்று. அவர் தனியாகச் சென்றால் நம் கோயில்களுக்குள் புகைப்படம் எடுக்க அனுமதிக்க மாட்டார்கள் என்பதுடன். அய்யா எழுதியது என்ன என்பதைக் கோயிலில் கண்டுபிடித்து படம் எடுக்க வேண்டுமே. அதுதான் அங்கே முக்கியம்! ஒவ்வொரு கோயிலுக்கும் போட்டோ ஷூட்டுக்கு நான் சென்றதுடன், அங்கே ஒவ்வொன்றையும் நிதானமாக ரசித்துப் பார்க்கவும் முடிந்தது. தேவாரத்தில் நான் என்ன கற்றுக்கொள்கிறேனோ, அதெல்லாம் அங்கே ஒன்று சேர்ந்து வந்தது போல உணர்ந்தேன்.

செட்டிநாட்டின் 76 ஊர்களும் இந்த ஒன்பது கோயில்களுக்குள் அடங்கும் என்பதால், ஒவ்வொரு கோயிலுக்கும் பயணிக்கும் போது இடையிடையே உள்ள செட்டிநாட்டு ஊர்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அத்தனை ஊர்களை அதுவரையில் நான் பார்த்ததில்லை என்பதுடன் சில ஊர்களின் பெயர்களை நாம் கேள்விப்பட்டிருக்கக் கூட மாட்டோம். மேலவட்டகை, கீழ வட்டகை என்ற இரு பிரிவுகளில் மேலவட்டகை பக்கம் அதிகம் போனது இல்லை. நமது செட்டிநாட்டைப் பற்றி அப்போதுதான் பல விஷயங்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்.

அதுமட்டுமல்ல. நம்முடைய நகரத்தார்கள் கோயில்களுக்கு எவ்வளவு திருப்பணி செய்திருக்கிறார்கள்! பலருக்கு வாழ்க்கையே கோயில் திருப்பணியாகத்தான் இருந்திருக்கிறது. நம் முன்னோர் செய்த புண்ணியம்தான் நாம் எல்லோரும் இன்று எந்தெந்த நாட்டிலோ நல்ல நிலைமையில் இருக்கிறோம். நம் அய்யாக்களின் முதல் பணியே தர்மமாகத்தான் இருந்திருக்கிறது. அதனால்தான் நாம் இன்று வரம் பெற்றவர்களாக இருக்கிறோம்."

நாம் மிகவும் குறைவான புள்ளிகள்தான். யூதர்கள் போலத்தான் நம்முடைய மக்கள்தொகையும். ஆனால் நம்முடைய பெருமைகள், அதன் பின்னணி எதையுமே நாம் பார்ப்பதில்லை. எல்லாம் சுலபமாகக் கிடைத்தது போல, 'கிராண்டட்' ஆக எடுத்துக் கொண்டு நகர்ந்து விடுகிறோம். அதைத்தான்




இந்தத் தலைமுறை உணர வேண்டும். நாம் வீடுகளில் படைக்கிறோம் என்று சொன்னால், நம் முன்னோர்களுக்கு அவ்வளவு பக்தியுடன் நன்றி சொல்கிறோம் என்று அர்த்தம். நம்மை இன்று நன்றாக வைத்திருப்பதே நம்முடைய முன்னோர்கள் வழிபாடுகளும் குலதெய்வ வழிபாடுகளும்தான். நாம் எல்லோருமே குலதெய்வத்துக்கு நன்றாகவே செய்கிறோம். எந்த ஊரில் இருந்தாலும் ஊருக்கு வந்ததுமே குலதெய்வம் கோயிலுக்குப் போய் முடி இறக்குகிறோம். தொட்டில் கட்டுகிறோம். ஏதோ ஒன்று செய்கிறோம். குலதெய்வக் கோயில்களையும் இப்போது மிக நன்றாகப் பராமரிக்கிறோம். அத்துடன் நகரக் கோயில்களையும் நன்கு பார்த்துக் கொள்கிறோம்.

என்னுடைய குருஜி ஸ்ரீ ஸ்ரீ முரளீதர சுவாமிகள் அடிக்கடி சொல்வார், “எப்போது நீ ஊருக்கு வந்தாலும் வந்ததுமே உன் குலதெய்வக் கோயிலுக்குப் போய் சாமியைப் பார்த்துடணும். ஒருவேளை 3வது 4வது தலைமுறையினர் சிலருக்கு, குலதெய்வம் எதுவென்றே தெரியாத நிலையில் அவர்கள் திருப்பதி போய் வணங்கிவிட்டு வந்துவிடலாம்” என்பார். இந்தத் தலைமுறையினர் சிலர் நகரங்களில் இருந்து கிராமத்துக்கு வரும் போது, மிக சுலபமாக ‘அது சரியில்லை, இது சரியில்லை’ என்று சொல்லி விடுகின்றனர். ஆனால், அவர்கள் வட இந்தியாவுக்குப் போய்ப் பார்த்தால்தான் தெரியும். நாம் இங்கே எவ்வளவு செய்திருக்கிறோம் என்று.

“இப் பணியில் உங்கள் கணவரின் பங்கு எப்படி இருந்தது?’

“என் கணவரும் சரி. இரு பிள்ளைகளும் சரி. இப் பணியில் முழுமையான ஆதரவு கொடுத்ததால்தான் இதைச் சிறப்பாகச் செய்ய முடிந்தது. ஏனெனில், சுமார் ஒன்றரை மாதம் நான் இங்கே வந்து விட்டேன். அமெரிக்காவில் பள்ளிப் பணிகள் எல்லாவற்றையும் அவர்களே மேனேஜ் செய்தார்கள். நான் திரும்பி வந்த பிறகும் கூட, 3 மாதங்களுக்கு என்னால் பள்ளிப் பணிகளைப் பார்க்கப் போக முடியவில்லை. இரு பள்ளிகளையும் கம்ப்ளீட்டாகப் பார்த்துக் கொண்டது அவர்கள்தான். என்னால் நூல் பணியில் முழுமையாக நேரத்தை அர்ப்பணிக்க முடிந்தது என்றால் அதற்குக் காரணம் என் கணவர்தான்.

பொதுவாக இதுபோன்ற நூல்களை மொழியாக்கம் செய்வதற்கு முன், நம்முடைய சைவ சமய சித்தாந்தம் பற்றி நன்கு உள்வாங்க வேண்டும். பிறகு, நகரத்தாரின் வழிபாட்டு முறைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டு அவற்றையும் உள்வாங்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த மொழியாக்கம் உயிர்ப்புடன் இருக்கும். வெறுமனே வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பு செய்தால் அதில் உயிர் இருக்காது. என் கணவர் சில மொழிபெயர்ப்பு டூல்ஸ் எல்லாம் செயற்கை நுண்ணறிவு மூலமாக எடுத்துக் கொடுத்ததால், மொழிபெயர்ப்பை மிகத் திறமாகச் செய்ய முடிந்தது. நூல் வெளியீட்டின்போதும் என் கணவர்தான் மற்ற ஏற்பாடுகளை எல்லாம் பார்த்துக் கொண்டார்கள். நூலுக்கான செலவு முழுவதையும் நாங்கள்தான் ஸ்பான்சர் செய்திருக்கிறோம். நூல் வெளியீட்டுக்கு வந்த 300 நகரத்தார் குடும்பங்களுக்கும், குடும்பத்துக்கு ஒரு நூல் வீதம் கொடுத்தோம்.”

“வருங்காலத்தில் இது போல வேறு ஏதேனும் மொழியாக்கம் செய்யும் நோக்கம் இருக்கிறதா?”

“இப்போதைக்கு இல்லை. பள்ளிப் பணிதான் செய்வேன். பள்ளியிலும் திருமுறைகள் கற்றுக்கொடுப்பது எனக்கு மிகவும் பிடித்த பணி. அய்யா கேட்டதால்தான் இந்த நூலுக்கே சம்மதித்தேன்.

“நம் இளைய தலைமுறைக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?”

“முடிந்தால் இந்த நூலைப் படியுங்கள். அப்படி இல்லையென்றாலும் உங்கள் கோயிலைப் பற்றி மட்டுமாவது நன்கு தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். நாம் யார் என்று தெரிந்து கொள்ளுங்கள். எவ்வளவு ஒரு செறிவான கலாச்சாரம், பாரம்பரியம் நம்முடையது! மன்னர்களே நம்மைப் பார்த்து வியந்திருக்கிறார்கள். மன்னர்களைப் போல கொடி கட்டிக் கொள்ளலாம் என்ற உரிமையெல்லாம் நமக்கு மட்டுமே அந்தக் காலத்தில் கொடுத்திருக்கின்றனர். அப்பேற்பட்ட பெருமைக்குரிய இனமல்லவா நாம்! இன்று நம் பெற்றோர்கள் அனைவருமே நம்மை நன்றாகப் படிக்க வைத்து, நல்ல வேலையிலும் அமர்த்தி வைத்துள்ளனர். எனவே ஏதேனும் ஒரு வகையில் நாம் இந்தச் சமூகத்துக்கு சிறிதளவேனும் திருப்பித் தரவேண்டாமா? அது பணம்தான் என்றில்லை. ஏதேனும் ஒரு பங்களிப்பு! இது போன்ற நூல்களைப் படித்தால்தான், நாம் எப்படிப்பட்ட பாரம்பரியம் உடையவர்கள் என்பதை உணர்ந்தால்தான், நாம் அதைப் பற்றி பெருமிதப்பட முடியும். பெருமிதப்பட்டால்தான் அந்தப் பாரம்பரியத்தைக் காக்க வேண்டுமே, நாமும் ஏதாவது செய்ய வேண்டுமே என்ற அக்கறையும் உணர்வும் வரும். இப்போது ஊர்களில், கோயில்களில் நடைபெறும் விழாக்களில் பங்கேற்போர் எல்லோருமே 60 வயதைக் கடந்தவர்கள்தான். மைக்ரோசாஃப்ட், கூகுள், அமேசான் என எந்தப் பெரிய நிறுவனத்தை எடுத்தாலும் அதில் நகரத்தார் இளைஞர்கள் கோலோச்சுகின்றனர். அந்தத் தொழில்நுட்ப அறிவில் ஒரு துளியை நம் சமூகத்துக்கும் கோயில்களுக்கும் வழங்கலாமே! நான் நன்கு படித்து, இங்கே பொருளீட்டுவதால்தான் அந்த அறிவையும் வசதிகளையும் வைத்து இது போல நூல் மொழிபெயர்க்க முடிந்தது.

உங்கள் குடும்பத்தில் அல்லது பங்காளிகள் சேர்ந்து நடத்தும் படைப்பு நடக்கிறதென்றால் அதை ஆவணப்படுத்துங்கள். ஏனென்றால், இன்றைக்கு அதன் வழிமுறைகளைப் பற்றிச் சொல்ல ஒரு ஆயா, அப்பத்தா அல்லது அய்யா இருக்கலாம். ஆனால் நாளை வரும் சந்ததியினருக்கு யார் சொல்வார்கள்? அப்போது இந்த ஆவணப் பதிவு உபயோகமாக இருக்கும் அல்லது உங்கள் கோயில் திருவிழா 10 நாட்கள் நடக்கிறது என்றால் அதில் 2 நாட்களைப் படம் பிடியுங்கள். எந்த வகையிலாவது உங்கள் சமூகத்துக்கு நீங்கள் திருப்பிச் செய்யுங்கள். நகரத்தார் என்பதில் நான் கர்வப்படுகிறேன். என் சமூகத்துக்கு இந்த வகையில் திருப்பி அளிக்க முடிந்ததில் பெருமையடைகிறேன்!” ♦

## காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை சார்பில் 15.12.2024 அன்று சென்னையில் நடைபெற உள்ளது

# காரைக்குடி சந்தை

உ
சிவமயம்

காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை (KNSC) தொழில்புரிந்து வரும் மகளிர் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒருமுகப்படுத்தி மக்களிடம் எளிதில் எடுத்துச் செல்லும் ஒரு இணைப்பு பாலமான 'காரைக்குடி சந்தையை' ஒரு நாள் நிகழ்வாக டிசம்பர் மாதத்தில் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் மூன்று முறை அதாவது 2019 ஆம் ஆண்டு நுங்கம்பாக்கம் EM EL EM திருமண மண்டபத்திலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு எக்மோர் ராணி மெய்யம்மை மண்டபத்திலும் மிகச் சிறப்பாக நடத்தியுள்ளனர். இதற்கு மகளிர் தொழில் முனைவோரிடமிருந்தும், மக்களிடமிருந்தும் தொடர்ந்து நல்ல வரவேற்பு இருந்து வருவதனால் இந்த ஆண்டு நான்காம் முறையாக டிசம்பர் மாதம், 15 ஆம் தேதி (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை, சென்னை ராயப்பேட்டை YMCA A/C Convention Centre-ல் நடத்த திட்டமிடப்பட்டு, வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன. இதில் மகளிர் தொழில் முனைவோர்கள் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் வெவ்வேறு ஊர்களில் இருந்து சென்னை வந்து தங்கள் பாரம்பரியம் மிக்க பொருட்களையும், தொழில் நுட்ப திறமைகளையும் சந்தைப்படுத்த உள்ளனர். இங்கு புவிசார் குறியீடு பெற்ற செட்டிநாட்டு கண்டாங்கி சேலைகள், கொட்டான்கள், ஆத்தங்குடி கற்கள், மற்றும் கூடைகள், செட்டிநாட்டுக் காட்டன், டிசைனர் புடவைகள், பித்தளை, எவர்சில்வர், மங்குச் சாமான்கள், கலைநயமிக்க மரச்சாமான்கள், மரத் தூண்கள், பெரியவர்கள், சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுக்கான வடிவமைக்கப்பட்ட ரெடிமேட் ஆடைகள், பை வகைகள், வெள்ளிச் சாமான்கள், தங்கம், வைர ஆபரணங்கள், செட்டிநாட்டிற்கே உரித்தாகிய மாவு மற்றும் பலகார வகைகள் சந்தையில் இடம் பெறவுள்ளன.

இம்முறை புது முயற்சியாக பதினெட்டு வயதிற்குட்பட்ட நம் நகரத்தார் குழந்தைகளின் தனித் திறமையுடன் கூடிய படைப்புக்களை வெளிக்கொணர்ந்து அதை அவர்கள் தன்னம்பிக்கையோடு சந்தைப்படுத்தி தொழில் முனைவோர்களாக வளர ஊக்குவிக்கும் வகையில் காரைக்குடி சந்தையில் இடம் கொடுத்து வாய்ப்பளிக்கவுள்ளனர்.

காரைக்குடி சந்தையில் தனிப்பிரிவாக செட்டிநாட்டு பலகார வகைகள் வித விதமாக உடனுக்குடன் சுடச் சுட பார்வையாளர்கள் வாங்கிச் ருசிக்க ஏதுவாக ஸ்டால்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும் குறிப்பிடத்தக்க வகையில் பாரம்பரியம் மிக்க செட்டிநாட்டின் தலைவாழை விருந்தாக சுவையான சைவ மதிய உணவும் இடம் பெற உள்ளது.

இந்த ஆண்டு காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னை (KNSC)-யுடன் பிரதான Sponsor-ஆக Meenu Subbiah Diamonds (MSD)-ம், Associate Sponsors-களாக M.RM.RM Cultural Foundation, Rathna Residency, Lakshmi Ceramics, KKN Energy, Vees Star Diamonds, Kaaveri Coffee-யும் Media Partner ஆக Peppers TV-யும் இணைந்துள்ளனர். காரைக்குடி சந்தையில் ஸ்டால்கள் Regular, Premium மற்றும் Elite என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 120 ஸ்டால்கள் வரை வரவுள்ளன.

காரைக்குடி நகரத்தார் சங்கம் சென்னையின் (KNSC) சமூக மற்றும் மகளிர் மேம்பாட்டிற்கான சேவையை நாமும் மனதாரப் பாராட்டுவதுடன் வரும் 'காரைக்குடி சந்தை' இனிதே நடைபெற வாழ்த்துவோமாக !!!!

## Powered by

MSD
MEENU SUBBIAH DIAMONDS

## Media Partner

peppers TV

## Associate Sponsors

M.Rm.Rm CULTURAL FOUNDATION

Lakshmi Ceraamics

RATHNA RESIDENCY

KKN BUILT FOR THE FUTURE

KAAVERI "Everything you love about coffee"

Vees Star Diamonds & Jewelry



# தொழில் தொடங்கலாம் வாங்க 71

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்
## ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ் ஸ்டார்ட் அப்

ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ் இந்திய அளவிலும், உலகளவிலும் அதிகமாகத் தேவைப்படுகிறது. உலகளவில் ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் சீனா தான் முன்னணியில் நிற்கிறது. உலகத்தின் 15 முதல் 17 சதவீத மார்க்கெட்டை கைவசம் வைத்திருக்கிறது. இந்தியாவின் பங்கு 1 முதல் 2 சதவீதம் வரை தான். இது இந்தியாவிற்கு பரவலான பெரிய வாய்ப்பை கொண்டுள்ளது என்பதைக் குறிக்கிறது.

தற்போது உலகளாவிய சந்தை சீனாவிலிருந்து வாங்குவதை குறைப்பதால், மேலும் பல உலகளாவிய நிறுவனங்கள் படிப்படியாக மூலப்பொருட்களுக்கான உலகளாவிய தேவையைப் பூர்த்தி செய்வதற்கான இந்தியாவின் திறன்களில் நம்பிக்கை காட்டத் தொடங்கியிருப்பதாலும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இந்தியாவை ஒரு முக்கிய இரசாயன உற்பத்தி மையமாக மாற்றுவதை Atomgrid என்ற இந்த ஸ்டார்ட்அப் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### சீனாவின் திணிப்பும், இந்தியாவின் வாய்ப்புகளும்

குறைந்த விலையில் பொருட்களை விற்கும் சீனாவின் dumping, உலகளாவிய மார்க்கெட்டுகளைக் கணிசமாகப் பாதித்துள்ளது.

சீனத் திணிப்பு உள்ளூர் சந்தைகளில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது, இந்திய உற்பத்தியாளர்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் குறைந்த விலையுடன் போட்டியிடப் போராடுகின்றனர். எஃகு, ஜவுளி மற்றும் எலக்ட்ரானிக்ஸ் போன்ற கணிசமான அதிகப்படியான திறனை சீனா கொண்டிருக்கும் தொழில்களில் இது குறிப்பாக சிக்கலாக உள்ளது, இந்தத் துறைகளில் இந்திய நிறுவனங்களுக்கு குறிப்பிடத்தக்க சிக்கல்களை ஏற்படுத்துகிறது. இதனால் இந்தியாவிற்குள் வரும் பல சீனப்பொருட்களுக்கு அதிகப்படியான இறக்குமதி வரிகள் போடப்படுகிறது.

குறைந்த விலை சீனப் பொருட்களின் வருகை இந்திய நிறுவனங்களின் லாப வரம்பைக் கணிசமாகக் குறைத்துள்ளது. ஏனென்றால், இந்திய உற்பத்தியாளர்கள் போட்டியிட தங்கள் விலைகளைக் குறைக்க வேண்டும், இது பொதுவாக குறைந்த லாபம் மற்றும் சில சூழ்நிலைகளில், திறம்பட போட்டியிட முடியாத வணிகங்களுக்கு நிதிச் சிக்கல்களையும் உருவாக்குகிறது.

### இந்தியாவுக்கான வாய்ப்புகள் என்ன?

பீனால்கள் (Phenols), சீனத் திணிப்பின் சிரமத்தை இந்தியா ஒரு வாய்ப்பாக மாற்றக்கூடிய ஒரு பகுதி, சிறப்பு இரசாயனங்கள், குறிப்பாக பீனால்கள் உற்பத்தி ஆகும். பிளாஸ்டிக், மருந்துகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் தயாரிப்பதில் பரவலாகப் பயன்படுத்தப்படும் பீனால் உற்பத்தியில் இந்தியா குறிப்பிடத்தக்க நிபுணத்துவத்தையும் திறனையும் நிறுவியுள்ளது. சீன இறக்குமதிகளுடன் போட்டியிட, புதுமையான உற்பத்தி முறைகள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருள் கிடைப்பதன் மூலம் இந்திய நிறுவனங்கள் தரம் மற்றும் குறைந்த விலையை மேம்படுத்தலாம்.



### மேம்பட்ட மருந்து இண்டர்மீடியரீஸ்

மருந்துத்துறை இந்தியாவிற்கு மற்றொரு குறிப்பிடத்தக்க வாய்ப்பை வழங்குகிறது. உலகின் மருத்துவத் துறையில் ஒரு குறிப்பிட்ட இடத்தை அடைந்திருக்கும் இந்தியா, பொதுவான மருந்து தயாரிப்பில் வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளது, மேலும் புதுமையான மருந்து இண்டர் மீடியரீஸை உருவாக்க மதிப்புச் சங்கிலியை இப்போது உயர்த்தி வருகிறது. இதில் இந்தியா சீனாவுடன் போட்டியிட முடியும்.

### இந்த ஸ்டார்ட் அப் என்ன செய்கிறது?

உற்பத்தித் திறன் மற்றும் ஏற்றுமதித் திறனை மேம்படுத்துவதன் மூலம் இந்திய உற்பத்தியாளர்களை உலகளவில் கொண்டு செல்ல இந்த ஸ்டார்ட் அப் செய்யும் ஒரு பெரும் முயற்சியாகும்.

Atomgrid என்ற பெங்களூரை சேர்ந்த ஸ்டார்ட் அப் இந்திய ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களான, ரிசர்ச் அண்ட் டெவலப்மெண்ட் வசதிகள் இல்லாதது, மூலப்பொருள் சோர்சிங் மற்றும் உலகளாவிய சந்தை இணைப்புகள் (அதாவது ஏற்றுமதி வாய்ப்புகள்) ஆகியவற்றை நிவர்த்தி செய்ய வழி வகுக்கிறது.

இந்தக் கம்பெனி தற்போது மூன்று துறைகளில் கவனம் செலுத்துகிறது. அதாவது, மருந்துகள், விவசாயம் மற்றும் உற்பத்தி போன்ற பிற தேவைகளுக்கான ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ்.

சிறப்பு இரசாயனங்களின் hub-ஆக இந்தியாவை நிலைநிறுத்துவதையும், இந்தியாவில் இருந்து அத்தகைய இரசாயனங்களின் ஏற்றுமதியை விரைவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

250-க்கும் மேற்பட்ட இந்திய உற்பத்தியாளர்களுடன் இணைந்து, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆதாரங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல், உலகளாவிய விநியோக நெட்வொர்க்குகள், தரமான மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் உட்பட இந்திய உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சவால்களை இவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

இந்தியாவின் ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ் துறையானது தொழில்துறை வளர்ச்சியை மேலே கொண்டு செல்வதால், MSME கம்பெனிகளின் திறன்களை அதிகப்படுத்துவதன் மூலம் ஆட்டம்கிரிட் தனித்து நிற்கிறது. தேவை மற்றும் உற்பத்திக்கு இடையே இருக்கும் இடைவெளியை நிரப்புவதுடன், Atomgrid சப்ளை செயினிலும் கவனம் செலுத்துகிறது.

### உங்கள் உற்பத்தி, வியாபாரம், ஏற்றுமதியை மேம்படுத்தலாம்

ஸ்பெஷாலிட்டி கெமிக்கல்ஸ் உற்பத்தியில் இருப்பவர்கள் இவர்களுடன் தொடர்பு கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்தலாம். இவர்களின் இணையதளம் www.atomgrid.in. ஈமெயில் sales@atomgrid.in.

# இந்த மாத வழிகாட்டி
## கண்டவராயன்பட்டி இராம. முருகப்பன்
## (Extracare Medical Trading, Dubai)



நகரத்தார்களில் வெளிநாட்டில் வித்தியாசமான ஒரு தொழில் செய்யும் திரு. இராம. முருகப்பன் அவர்களை இந்த இதழுக்காகப் பேட்டி கண்டோம். இந்தியாவில் மெடிக்கல் டிஸ்ட்ரிபியூஷன் துறையில் நூற்றுக்கணக்கான நகரத்தார்கள் இருக்கிறார்கள். ஆனால், வெளிநாட்டில் பல நாடுகளின் பல கம்பெனிகளின் மருந்துகளை மொத்த வியாபாரமாகச் செய்து வருபவர்கள் இல்லை எனலாம், அல்லது மிகவும் குறைவு. வெளிநாடுகளில் regulated market-ல் மருந்து வணிகம் செய்வது என்பது மிகவும் கடினமான ஒன்று. அந்தத் துறையில் ஜெயித்து காட்டியிருக்கிறார் நம்மவர்.

அந்தத் துறையில் சிறப்பாக செயல்பட்டு வரும் திரு. இராம. முருகப்பன் அவர்களை இந்த மாத வழிகாட்டி பகுதியில் உங்களுக்காக பேட்டி கண்டோம்.

### உங்கள் வணிகப் பயணம் பற்றிக் கூறுங்களேன்...

என்னுடைய B.Pharm., படிப்பு முடித்தவுடன் Abbott கம்பெனியில் இந்தியாவில் மருத்துவப் பிரதிநிதியாக வாழ்க்கையைத் தொடங்கினேன். என் மேல் அதீத அன்பு வைத்திருந்த ஒரு நண்பர் துபாயில் மருந்தாளுனர் வேலைக்கு பெங்களூரில் ஆள் எடுக்கிறார்கள் என்று சொன்னதை வைத்து பெங்களூர் சென்று அந்த அமர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்று துபாய்க்கு 2003-ம் வருடம் வந்தேன். அங்கு ஒரு Chain of Pharmacies நிறுவனத்தில் பணியாற்றினேன். ஒரு கம்பெனியில் வேலை செய்யும் போது வளர்ச்சி மற்றும் நிதி சுதந்திரத்தில் ஒரு லிமிட்டேஷன் இருப்பதை உணர்ந்தேன். இது மருத்துவத் துறையில் எனது சொந்த தொழில் செய்ய, பிராண்டுகளை உருவாக்க என்னைத் தூண்டியது.

எப்படி தொழில் ஆரம்பித்தேன் என்று கட்டாயம் சொல்ல வேண்டும். சில நேரங்களில் தொழில் செய்வது ஒரு யோசனையாக மட்டும் இருந்தது. காரணம் அது வெற்றிகரமாக இருக்குமா என்ற பயம் தான். அந்த யோசனையை ஒரு பயணமாகப் பயணிக்க நிறைய காம்பரமைஸ் மற்றும் நிதி தேவை. ஆனால் என்னுடைய பெரிய பலம் எனது மனைவி மீனாட்சியின் ஆதரவு தான். எனக்கு மிகவும் நம்பிக்கை கொடுத்து ஆரம்பிக்க உதவினார். மேலும், கல்லூரி நாட்களில் இருந்தே எனக்குள் ஒரு பழமொழி மனதில் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். அது, "பாதங்கள் நடக்கத் தயாரானால், பாதைகள் எப்போதும் மறுக்கப்போவதில்லை" என்பது தான். இதுவும் எனக்கு ஒரு உந்துதலாக இருந்தது.

பிறகு, தனியாக மருந்து வணிகம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்ட போது நண்பர்களுடன் இணைந்து Extracare Medical Trading 2015-ம் வருடம் துவங்கப்பட்டது. எங்களுடைய அடிப்படை வேலை வெளிநாட்டு மருந்து கம்பெனிகளின் பிராண்டுகளை highly regulated ஐக்கிய அரபு நாட்டில் அதற்கான அரசாங்க ரிஜிஸ்டிரேஷனைப் பெற்று, சந்தைப்படுத்துவது தான். எங்களால் UAE மார்க்கெட்டில் பல மருந்து பிராண்டுகள் உருவாக்கப்பட்டது என்றால் மிகையாகாது.

இது மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தை என்பதால், வணிகப் பிரிவின் சீரான ஓட்டத்தை உறுதிசெய்ய நிறைய விடாமுயற்சியும், உத்தியும் தேவைப்படுவதால், பணத்தை விட நேரம் முக்கியமானதாக இருந்தது. அதிக நேரம் உழைத்தோம். குறிப்பாக கோவிட் நேரம். சந்தையை சமாளிப்பது மிகவும் சவாலாக இருந்தது. கோவிட் சூழ்நிலைகளைக் கையாண்டது தொழிலில் அதிக நம்பிக்கையை அளித்தது.

### நீங்கள் தற்போது என்ன செய்கிறீர்கள்

எக்ஸ்ட்ராகேர் மெடிக்கல் டிரேடிங் (Extracare Medical Trading) தற்போது UAE, Qatar, Bahrain ஆகிய நாடுகளில் உலகெங்கிலும் உள்ள முன்னணி நிறுவனங்களின் பல்வேறு மருந்து தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகித்தலைச் செய்து வருகிறது.

ஆஸ்திரேலியா, இந்தியா, இத்தாலி, சைப்ரஸ் மற்றும் சீனாவைச் சேர்ந்த சுமார் எட்டு முக்கிய மருந்து நிறுவனங்களுடன் வர்த்தகம் செய்து வருகிறோம். நாங்கள் அனைத்து முன்னணி மருத்துவமனைகளுக்கும், மெடிக்கல் ஸ்டோர்களுக்கும் மருந்து (espcially Urology, Gynecology and Dermatology) மற்றும் ஊட்டச்சத்து தயாரிப்புகளை (Nutrition) வழங்குகிறோம்.

தற்போது எங்களது owns brand-லும் கவனம் செலுத்தி வருகிறோம். அது சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது.

எனது 20 ஆண்டுகால sales and marketing நிபுணத்துவம், எனது பார்ட்னர்களின் logistics and

procurement நிபுணத்துவம் வணிகத்தில் நாங்கள் வெற்றி அடைவதை உறுதி செய்தது என்றால் மிகையாகாது.

**பணியாளர்கள் தாம் எங்களது பலம்**

பல்வேறு தேசங்களைச் சேர்ந்த 40 பணியாளர்கள் எங்களிடம் பணியாற்றுகிறார்கள். நாங்கள் வணிகத்தை உருவாக்குவதில்லை. நாங்கள் பணியாளர்களை சிறப்பாக உருவாக்குகிறோம், அவர்கள் வணிகத்தை உருவாக்குகிறார்கள்.

**குடும்பம் பற்றி**

தந்தையார் கண்டவராயன்பட்டி திரு KR. ராமநாதன் செட்டியார், தாயார் திருமதி தெய்வானை ஆச்சி. மனைவி மீனாட்சி ராஜேந்திரன், வெற்றியூர் மற்றும் மூன்று பெண் குழந்தைகள். தேவி அபிராமி முருகப்பன் 11வது வகுப்பு படிக்கிறார், ஹரிணி முருகப்பன் 5வது படிக்கிறார், ஐஸ்வர்யா முருகப்பன், 2வது படிக்கிறார். மாமனார் திரு. OL. ராஜேந்திரன் செட்டியார் அவர்கள், மாமியார் திருமதி திலகவதி ஆச்சி அவர்கள்.

**பொழுதுபோக்குகள்**

விளையாட்டில் எனக்கு ஆர்வம் அதிகம். அதுவே எனக்கு மிகப்பெரிய பலமாகவும் இருக்கிறது. பேட்மிண்டன் விளையாடுவது எனது விருப்பமான பொழுதுபோக்கு. இது எனது தொழிலில் இருப்பவர்களுடன் போட்டி போடுவதற்கும், கடைசி புள்ளியைப் பெறும் வரை ஒருபோதும் கைவிடாதீர்கள் என்ற மனப்பான்மையை வைத்திருக்கவும் உதவுகிறது.

**வியாபாரத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு உங்கள் அறிவுரை**

1. நீங்கள் முடிவு எடுத்தவுடன், எடுத்த முடிவுகளில் இருந்து மாறாதீர்கள். 2. வாழ்க்கையில் values எப்போதும் பின்பற்ற வேண்டிய ஒன்று. பல இளைஞர்கள் விரைவாக பணம் சம்பாதிப்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள். இலக்கை மட்டும் பார்த்து செயல்முறையை சமரசம் செய்வதையும் காண்கிறேன். இலக்கை கண்டிப்பாக அடைய வேண்டும், ஆனால் சரியான business values –களுடன். அப்போது தான் செய்யும் தொழிலில் ஒரு திருப்தி இருக்கும். 3. மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் நாம் பங்களித்தால் மட்டுமே தொழில்முனைவுப் பயணம் நிறைவு பெறும். அதாவது எளிதாக கூறினால் giving back to the society. இதை ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். ■

**ஈமெயில்** Sethuraman.sathappan@gmail.com,
**மொபைல்** 9820451259,
**இணையதளம்** www.startupandbusinessnews.com

# அகில பாரத ஐயப்ப சேவா சங்கம்


மு.சுப.கருப்பையா


மு.விஸ்வநாதன்


பழ.கருப்பஞ்செட்டி

அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் தமிழ் மாநில அமைப்பின் சார்பாக பழனியில் நடைபெற்ற 2024 - 27-க்கான நிர்வாகிகள் தேர்தலில் மாநில புரவலராக குருவிக்கொண்டான்பட்டி மு.சுப.கருப்பையா அவர்களும் மாநிலத் தலைவராக தேவகோட்டை மு.விஸ்வநாதன் அவர்களும் மாநில இணைச்செயலராக காரைக்குடி பழ.கருப்பஞ்செட்டி அவர்களும் போட்டி இன்றி தேர்வு செய்யப்பெற்றனர். ஐயப்ப சேவா சங்கத்திற்கு தேர்வு பெற்றுள்ள நம்மவர்கள் பணி சிறக்க வாழ்த்துகள்.

*Best Compliements of*

**NIKKESH ENTERPRISES**




*No. 5/1018. Roja Nagar,*
*Seelapadi Village, Dindigul 624004.*


நேசங்களோடு வளர்ந்த பந்தம்...
காலங்களோடு கலந்த பாரம்பரியம்...!
மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds
Grade by
GIA
Authorised
Forevermark Jeweller
FOREVERMARK


Maganlal
a precious legacy
Desire meets
a New Style.
MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited
87 YEARS
#51, AVM Building, Kallukatti
North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road,
T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 13



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

## டாக்டர் சுப. அருணாசலம்



இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றி நான் எழுதி வரும் கட்டுரைகளில் கடந்த மாதம் விண்வெளித்துறையில் ஆண்டெனாவின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டிருந்தேன். இந்த மாதம் மற்றொரு முக்கிய துறையான தொலைநுகர்வு (Remote Sensing) பற்றியும் அதில் தற்சமயம் அரும்பணி ஆற்றி வரும் நம் நகரத்தாராகிய டாக்டர் சுப.அருணாசலம் அவர்களைப் பற்றியும் எழுத விளைகிறேன்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சியின் தந்தையான திரு. விக்ரம் சாராபாய் அவர்கள் இஸ்ரோவிற்கு விட்டு சென்ற அறிவுரை, விண்வெளியின் உயரிய திட்டங்கள் இந்திய மக்களுக்கு அனைத்து வகையிலும் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பதாகும்.

இஸ்ரோ இதை தன் தலையாய கடமையாக ஏற்று, தன் ஆராய்ச்சி துறைகளை மக்களுக்கு உபயோகமானதாக வடிவமைத்தது. அதில் மிக முக்கியமான துறை தான் தொலை நுகர்தல் என்ற Remote Sensing துறை. தொலை நுகர்வு என்பது உலகத்தின் ஒரு பகுதியை அது வெளிவிடும் உணர்வுகளை அளந்து அதன் உட்தன்மையை விவரிக்கும் தொழில் நுட்பம் ஆகும். (Remote Sensing is the process of detecting and monitoring the physical characteristics of an area by measuring its reflected and emitted radiation at a distance.)

உபகிரகங்களில் பொறுத்தப்பட்ட பிரத்யேக காமெராக்களை கொண்டு இந்த அளவுகளை மேற்கொள்வதினால் இது சாத்தியமாகிறது. வெவ்வேறு நிலப்பகுதிகள் (பாலைவனங்கள், காடுகள், நீர்நிலைகள், மலைகள்) இவை அனைத்தும் வெவ்வேறு சமிக்ஞைகளை வெவ்வேறு அலை வரிசைகளில் (Wave Lengths) அனுப்புவதால் இந்த தொழில் நுட்பம் மூலம் அவைகளின் இயற்கையான தன்மையையும் (Nature) விஸ்தீரணத்தையும் (Area) காலத்தோடு அவைகளில் ஏற்படும் மாறுபாடுகளையும் (Change Detections with time) நாம் அறிய முடியும். உதாரணமாக காடுகள் அழிக்கப்படுவதையும், புயல் போன்ற இயற்கை சீற்றங்களின் திசை, அவை ஏற்படுத்தும் அழிவு ஆகியவைகளையும் துல்லியமாக அளக்க முடியும். இந்தத் துறை இந்திய மக்களுக்கு இன்றியமையாததாக இருக்கக்கூடிய துறை என்பதால் இஸ்ரோ, அதிக கவனம் செலுத்தி உலகத்திலே மிக அதிகமான தொலைநுகர்வு உபகிரகங்களை (Remote Sensing Satellites) விண்ணில் நிறுவி இந்த துறையில் மிகுந்த பாண்டித்தியம் பெற்ற நாடாகத் திகழ்கிறது.

இதற்கான National Remote Sensing Centre - NRSC பாலா நகர், ஹைதராபாத்தில் நிறுவப்பட்டு உபகிரகங்களிலிருந்து வரும் தகவல்களை தள நிலையத்தின் (Ground Stations) மூலம் பெற்று இந்திய அரசாங்கத்தின் பல்வேறு துறைகளின் உபயோகத்திற்கு கொடுக்கும் அரும்பணியையும் மற்ற ஆராய்ச்சிகளையும் செய்து வருகிறது.

டாக்டர் சுப. அருணாசலம் அவர்கள் அழகப்பா கலைக் கல்லூரி காரைக்குடியில் 1985 வருடம் இளங்கலை வேதியியல் பட்டம் பெற்றவர். நான்கு ஆண்டுகள் சென்னை விஜயா லாபரட்ரியில் வேதியிலாளர் (கெமிஸ்ட்) ஆக பணிபுரிந்தார். அந்த அனுபவத்தின் வாயிலாக 1989-ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் உள்ள இஸ்ரோ மையமான தேசிய தொலை நுகர்வு மையத்தில் (National Remote Sensing Centre - NRSC) இணை விஞ்ஞானியாக சேர வாய்ப்பு கிடைத்தது.



டாக்டர் சுப. அருணாசலம் – அபிராமி ஆச்சி



டாக்டர் அருணாசலம். அரவிந்த் பாலசுப்பிரமணியம். மீனாட்சி. அபிராமி ஆச்சி. அர்ஜுன் பாலகிருஷ்ணன்

இங்கு முதல் பணியாக தான் பெற்றிருந்த அனுபவத்தின் மூலம் செயற்கை கோள் புகைப்பட மையத்தில் வேதியியல் பகுப்பாய்வு மையத்தை (Analytical Labaratory) நிறுவி புகைப்பட ரசாயனங்களை பகுத்தாய்ந்து தன் பணியைத் துவங்கினார்.



அர்ஜுன் பாலகிருஷ்ணன்

தொடர்ந்து படிப்பில் ஆர்வம் இருந்ததால் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பகுதி நேர மாணவராக பயின்று முதுகலை வேதியியல் (M.Sc) பட்டம் பெற்றார். அதன் பின்பு தொடர்ச்சியாக பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் புவி வேதியியல் துறையில் முனைவர் பட்டம் (Doctorate) பெற்றுள்ளார். பத்து வருட அநுபவத்திற்குப் பிறகு செயற்கை கோள் தகவல் பகிர்ந்தளிக்கும் மையத்தில் (Satellite Data Distribution Centre) பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது.

இதன் பின்னர் தொலைநுகர் செயற்கை கோள் திட்டத்தில் (Remote Sensing Satellite Project) துணை திட்ட மேலாளராக (Deputy Project Director) கடல் ஆய்வு செயற்கை கோள் 2 (Ocean sat 2)-ல் சீரிய பணியாற்றினார். இவருடைய சிறந்த அநுபவத்தை கருத்தில் கொண்டு இவருக்கு அனைத்து தொலைநுகர்வு செயற்கை கோள் திட்டக்குழுவிலும் உறுப்பினராக பணியாற்றும் வாய்ப்பை இஸ்ரோ நிர்வாகம் வழங்கியது. செயற்கை கோள் தகவல் விலை நிர்ணய குழுவிலும் பிரதான உறுப்பினராக தற்சமயம் இருந்து வருகிறார். இவரும், இவருடைய குழுவினரும் ஆற்றி வரும் அயராத உழைப்பினால் நமது தொலை நுகர்வு செயற்கை கோள் தகவல் சிறப்புகளை (Remote Sensing Satellite Data Sets) குழுக்களாக பிரித்து அவர்கள் மூலம் அனைத்து இந்திய மக்களும் பயன்படுத்தி பலன்களை அடைய உபயோகமாக இருந்து வருகிறது.

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக சர்வதேச சாசன பேரிடர் மையத்திற்கு (International Charter Emergency Centre) நமது இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் சார்பாக அவசர தொடர்பு நிலை அதிகாரியாக (Emergency On Call Officer) பணிபுரிந்து பேரிடர் சமயத்தில் தேவைப்பட்ட உதவிகளை உடன் பெற்றுத்தரும் முக்கியமான பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

தற்சமயம் ஹைதராபாத்தில் தன் குடும்பத்தினருடன் வசித்து வரும் இவர் இஸ்ரோவின் சேவையில் முக்கிய பங்காற்றி வருகிறார். ♦

### குடும்பம்

| | |
|---|---|
| பெயர்: | டாக்டர் சுப. அருணாசலம் |
| பிறந்த தேதி: | 28/02/1965 |
| ஊர்: | கானாடுகாத்தான் |
| கோயில்: | இரணிக்கோயில் |
| வீட்டுப்பெயர்: | மல்லுப்பட்டியார் வீடு |
| தந்தையார்: | அரு. சுப்பையா செட்டியார் |
| தாயார்: | சுப. விசாலாட்சி ஆச்சி |
| மனைவி: | அபிராமி அருணாசலம் சொந்த ஊர்: நேமத்தான்பட்டி |
| மகன்: | அரவிந்த் பாலசுப்பிரமணியம், B.E., M.B.A., Manager, HDFC Bank, Hyderabad |
| மருமகள்: | மீனாட்சி பாலசுப்ரமணியம் சொந்த ஊர்: கண்டனூர் |
| மகன்: | அர்ஜுன் பாலகிருஷ்ணன், B.Tech., Software Engineer, Hexaware Technologies, Chennai |



அரவிந்த் பாலசுப்பிரமணியம் – மீனாட்சி

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 40



## மாத்தூர் நகரத்தார்களும், பொன்னமராவதி அழகப் பெருமாள் விண்ணகர எம்பெருமாள் கோயிலும்



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

செவலூர் - மலையடிப்பட்டியில் தமக்கென ஒரு நகர் அமைத்தனர் நகரத்தார்கள். அதற்கு காளையான் காலப்பெருந்தெரு எனப் பெயர் சூட்டினர். அப்பெயரினைக் கல்லிலும் வெட்டினர். 15-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சார்ந்த அந்தச் சான்றினைச் சென்ற இதழில் பார்த்தோம்.

பொன்னமராவதி அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமாள் என்ற பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு (S11 Vol:26, கல். எண்; 15 பக் 11, புசக 788) இந்தக் கோயில் பொன்னமராவதியில் இருந்து வேந்தன்பட்டி செல்லும் சாலையில் உள்ளது. எழில் கொஞ்சும் பழமையான கோயில். சுந்தரபாண்டியனின் 8-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கோயில், மாத்தூர் நகரத்தார்கள் தொடர்பான ஒரு கல்வெட்டினைக் கொண்டுள்ளது. முதலில் கல்வெட்டு வரிகளைப் பார்க்கலாம்.

“ஒல்லையூர் கூற்றத்து சுந்தரசோழபுரத்து தேசியுகந்த பட்டணத்து பரம்பையூருடையான் வடிவீரழகியான் திருமேனி” இந்தக் கல்வெட்டு வரிகள் செறிவான செய்திகளை உள்ளடக்கி இருக்கிறது. இந்த வரிகளைப் புரிந்து கொள்ளும் முன்னர் இரு செய்திகளை நாம் பார்க்க வேண்டியுள்ளது.

இக்கல்வெட்டின்படி 1475-ஆம் ஆண்டில் சுந்தர சோழபுரத்தில் நகரத்தார்கள் இருந்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல செய்தி. 15-ஆம் நூற்றாண்டில் வணிகச் சமூகங்கள் ஊர்ப் பெயர்களின் அடிப்படையில் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் மற்றும் சமூக அடிப்படையிலான பிரிவுகள் அப்பொழுது இல்லை என்பனவற்றையும் தெரிந்து கொள்கிறோம். சுந்தரசோழபுரத்தில் இருந்த நகரத்தார்கள் 15-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு அந்த ஊரை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. அது எந்த மாதிரியான சூழல் என்பதை அறிய, தகுந்த சான்றுகள் இல்லை. இன்று அந்த ஊரில் கோயில் இருக்கிறதே தவிர ஒரு நகரத்தார் கூட இல்லை. சுந்தரத்து மற்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பொன்னமராவதி பெருமாள் கோயில் கல்வெட்டு சிறந்த சான்றாக இருக்கிறது.

நகரக் கோயில்களில் ஒன்றான மாத்தூர் ஐநூற்றீசர் கோயிலானது இருக்கும் இடம் மாத்தூர் ஆகும். மாத்தூர் என்ற ஊரானது பரம்பையூர் என்ற சிறு நிலப்பகுதிக்குள் இருக்கிறது. இந்த பரம்பையூர் என்ற நிலப்பகுதி சோழர் கால நிலப் பாகுபாட்டின்படி உள்நாடு என்ற பிரிவுக்குள் அமையப் பெறும். பரம்பையூரை எப்படி மாத்தூர் நகரத்தார்களுடன் தொடர்பாக எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு நமது இசைகுடிமானமே பெருந்துணையாக உள்ளது. “கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்” என்ற வரி மாற்றூர் நகரத்தார்களைக் குறிக்க இசைகுடிமானத்தில் எழுதப்படும் பொதுவான வரியாகும். வளநாடு என்று குறிக்கப்படும் நிலப்பரப்பானது இரண்டு ஆறுகளுக்கு இடைப்பட்ட பெரும் நிலப்பரப்பாகும். வளநாடு, நாடு, உள்நாடு போன்றவை நிர்வாகப் பயன் கருதி சோழர்கள் காலத்தில் நாடு பிரிக்கப்பட்டிருந்தது. இந்தச் செய்தி இத்தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கேரளசிங்க வளநாடு என்ற பெரும் நிலப்பரப்பிற்கு உட்பட்டது பிரம்பூர் என்ற நாடு. பிரம்பூர் நாட்டிற்குட்பட்டது மாத்தூர் என்ற வீரபாண்டியபுரம். மாற்றூரின் மற்றொரு பெயர் வீரபாண்டியபுரம் ஆகும்.

அறிய முடியாத காரணங்களில் அங்கிருந்த நகரத்தார்கள் சுந்தரத்தை விட்டு வெளியேறுகிறார்கள். அவர்களில் சுந்தரசோழபுரம் நகரத்தார்கள் என்றும், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்றும் அறியப்பட்டார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு தமக்கென சைவசமயத்தின் அடிப்படையில் கோயில்கள் இருந்ததால் புதிய கோயில்களை வரித்துக் கொள்ள வேண்டிய தேவை எழவில்லை. ஆனால், சுந்தரத்து நகரத்தார்கள் இன்று சுந்தரசோழபுரத்தில் இருக்கும் பொழிந்து நின்ற எம்பெருமான் என்ற சிவன் கோயிலையே தமது கோயிலாகக் கொண்டு தொடர்ந்து வழிபாடு செய்து வருகின்றனர்.

பிரம்பூர் நாட்டைச் சேர்ந்த மாத்தூர் நகரத்தார்கள் தேசியுகந்த பட்டணம் என்ற சுந்தர சோழபுரத்தில் இருந்திருக்கிறார்கள் என்று பொன்னமராவதிக் கல்வெட்டைப் புரிந்து கொள்ள வேண்டும். பரம்பூரைச் சேர்ந்த மாத்தூர் நகரத்தார்கள் பொன்னமராவதி பெருமாள் கோயிலுக்கு நன்கொடை வழங்கியிருக்கிறார்கள் என்ற செய்தி இக்கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

### நகரத்தார்கள் நடுவர்களாக...

கி.பி.1500-ஆம் சேர்ந்த மேலப்பனையூர் கல்வெட்டு, இப்பகுதி சமூகங்களின் இணக்கத்தையும், பிணக்கையும் எடுத்துக்காட்டுகிறது (புசக.944 பக்.613) மேலப்பனையூர், குளமங்கலம் ஆகிய இரு ஊர்களுக்கு இடையே ஏற்பட்ட ஒரு சிக்கல் தீர்த்து வைக்கப்பட்டது. நடுவர்களாக இருந்தவர்கள் வெள்ளாளர்களும், இளையாத்தாக்குடி நகரத்தார்களும்



கொடும்பாளூர் குமிழி ஐநூற்றுவர்

என அக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. ஒவ்வொரு முறை சச்சரவு ஏற்பட்டவுடன், நடுவர்களாக நகரத்தார்கள் அமர்த்தப்படுகிறார்கள். நடுவர்கள் தீர்வு சொல்கிறார்கள். கோயிலுக்கு நன்கொடை தருகிறார்கள். இனிமேல் சண்டையிடுவதில்லை எனக் கல்வெட்டில் பதிவிடுகிறார்கள். ஆனால் அதன்படியா நடக்கிறார்கள்? கல்லில் எழுதுவதால் மட்டும் மாந்தன் திருந்துவதில்லை என வரலாறும் சான்று கூறுகிறது.

### கொடும்பாளூர் வணிக வளாகம்

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், குளத்தூர் வட்டம் மற்றும் திருமயம் வட்டம், பொன்னமராவதி வட்டம் ஆகிய பகுதிகள் வணிகப் பாதைகள் சென்ற பகுதிகளாக இருந்திருக்கின்றன. இவை பெருவழிகள் என்றும் வரலாற்றில் குறிக்கப்படுகின்றன. வணிகர்கள் பயன்படுத்திய பாதைகள் என்பதற்குப் பல சான்றுகள் இன்று கிடைக்கின்றன. இந்தச் சாலையில் இருந்த ஊர்களில் நகரத்தார்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

### ஐநூற்றுவர் பெயர் மடைத்தூணில்

15-ம் நூற்றாண்டில் ஐநூற்றுவர் பெயர் பொறித்த கல்வெட்டுகள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஐநூற்றுவர் அமைப்பினரின் அறச்செயல் குறித்த பதிவு ஒன்று கொடும்பாளூர் கண்மாயில் காணக் கூடியதாக உள்ளது. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஊர் கொடும்பாளூர். கொடும்பாளூரில் உள்ள கண்மாயின் தெற்குப்பகுதி மடையில் உள்ளது ஒரு கல்வெட்டு. கண்மாயில் இருந்து நீர் பாய்ச்ச, பாயும் நீரை தடுத்து நிறுத்த பழங்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு குமிழி அல்லது மடைத்தூண் என அழைக்கப்பட்டது. இந்த மடைத்தூணில் அத்தூணைச் செய்து கொடுத்தவர்கள் பெயரை பொறிப்பது வழக்கம். நம் பகுதியில் இவ்வாறான மடைத்தூண்கள் பெரும்பாலான கண்மாய்களில் இருப்பதை நாம் காணலாம். இங்குள்ள கோயில் முசுகுந்தீசுவரர் கோயில் என அழைக்கப்படும். இந்தக் கோயிலுக்குப் பின்புறம் இந்தக் கண்மாய் உள்ளது. அந்தக் கண்மாயில் உள்ள மடைத்தூணில் உள்ள கல்வெட்டு இது.

உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும் வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி

8508392087 / 8778527165 / 8760742590

ADVT

இக்கல்வெட்டில் வணிகச் சின்னங்களான அங்குசம், கோடரி, இரண்டு சாமரங்கள், குடை, அம்பு, அம்புடன் பட்டறைக்கல், வளரி, வில், விளக்குத் தாங்கி, அரிவாள், பசும்பை (திருநீற்றுப்பை) வாள் கேடயம் மற்றும் இரண்டு குத்துவிளக்குகள் பொறிக்கப்பட்டுள்ளன.

### கல்வெட்டு வரிகள்

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. அஞ்ஞூற்றுவர் ர
3. க்ஷை செய்வித்தான்
4. சாத்தன்னீலன்.

சாத்தன்னீலன் என்பவர் ஐநாற்றுவர் அமைப்பைச் சேர்ந்தவர். அவர் அளித்த கொடை அந்த கண்மாய் மடைவாய் என்பது பொருளாகும். (கரு. இராசேந்திரன், புதுக்கோட்டை வட்டாரக் கல்வெட்டுகள், க.எண். 18, 201, பக்.19)

வணிகக் குழுக்கள் பெயர் மறைந்து ஊரின் பெயர் அடிப்படையில் வணிகச் சமூகங்கள் அழைக்கத் தலைப்பட்ட காலம் இந்த நூற்றாண்டு. இளையாத்தக்குடி, சுந்தரசோழபுரம், அருவியூர் நகரத்தார்கள் என்ற பெயர்கள் புழக்கத்துக்கு வந்துவிட்ட பிறகு, ஐநூற்றுவர் என்ற பெயரும் உயிர்ப்புடன் இருந்திருக்கிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் கல்வெட்டு என்பது கல்வெட்டுக் கலைஞர் கரு. இராசேந்திரன் அவர்களின் கருத்தாகும்.

கொடும்பாளூர் வணிக வளாகம் என்ற கருத்தை நான் உருவாக்கியதற்கு மற்றொரு அழுத்தமான காரணமும் இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், தன்னாங்குடி கிராமம் அருகில் உள்ள கிராமம் “பிலிப்பட்டி” ஆகும். இங்கு உள்ள கல்வெட்டு உத்தம சோழனின் கி.பி.984-ஆம் ஆண்டைச் சேர்ந்தது ஆகும். (செய்திகள் – யாதும் ஊரே அமைப்பினர்)

இக்கல்வெட்டில் பல வணிகர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. பெரும்பாலோர் ஐநூற்றுவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் சார்ந்த ஊரைச் சேர்த்து அவர்களின் பெயர்கள் அமைந்துள்ளன. அந்தப் பெயர்களாவன மங்களநாட்டு ஐநூற்றுவர், புறமலைநாட்டு ஐநூற்றுவர்,

## வேலைக்கு ஆள் தேவை

**அரிமழத்தில் இயங்கி வரும் முதியோர் நண்பன் இல்ல அலுவலகத்திற்கு பெண் உதவியாளர் தேவை.**

தேவையான கல்வித் தகுதி : பட்டப் படிப்பு மற்றும் MS Office - Word, Excel and Power Point.

தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தட்டச்சு தெரிந்திருத்தல்,

Tally தெரிந்திருப்பது கூடுதல் தகுதி.

3 வருட அனுபவம் இருக்க வேண்டும்.

தொடர்புக்கு : 70100 74310




பிலிப்பட்டி

பூங்குன்றநாட்டு ஐநூற்றுவர் (மகிபாலன்பட்டி) மணலூர் நாட்டு ஐநூற்றுவர் (மாத்தூர் கோயிலின் ஓர் உட்பிரிவு), கொடும்பாளூர் வீரபட்டின ஐநூற்றுவர் மற்றும் வளஞ்சியர் ஆகும்.

இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்கள் திரிசூலம், அரிவாள், குத்துவாள், வளரி, அங்குசம், வெண்குடை, கோடரி, குத்துவிளக்கு ஆகும். 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டும் நகரத்தார் வரலாற்றில் இடம் ஒரு முக்கியமான கல்வெட்டு ஆகும். இதே காலப்பகுதில் தான் இவ்வூருக்கு அருகாமையில் உள்ள நார்த்தாமலையிலும் நகரத்தார்கள் உள்ளிட்ட வணிகச் சமூகங்களின் பண்பாடு செறிந்த நகரமும் இருந்திருக்கிறது.

இக்கல்வெட்டைப் படி எடுப்பதற்கும், அந்தப் பகுதியை ஆய்வு செய்வதற்கும் பல முறை சென்றிருக்கிறோம். பிலிப்பட்டி அருகில் ஓர் ஊரணி, சிறு கல்மண்டபம், சுமைதாங்கிக் கல், ஒற்றை மண்டபத்தில் வீற்றிருக்கும் பிள்ளையார் கோயில் என வழிப்போக்கர்கள், வண்டியில் செல்பவர்கள் தங்கிச் செல்ல ஏதுவாக ஒரு பழமையான தங்குமிடத்தையும் கண்டோம். அந்தப் பகுதி வணிகச்சாலையாக இருப்பதற்கான எல்லா வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறது. எனவே, நார்த்தாமலை தொடங்கி செவலூர் - மலையடிப்பட்டி வரை உள்ள பகுதியை கொடும்பாளூர் வணிக வளாகம் என வரையறை செய்வது மிகவும் பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

11-ம் நூற்றாண்டு தொடங்கி 15-ஆம் நூற்றாண்டு வரையிலும் இந்தப் பகுதி வணிகக் குடிகளின் வாழ்விடமாக இருந்திருக்கிறது. நார்த்தாமலை, இலுப்பூர், கொடும்பாளூர், சிவபுரி, செவலூர், சுந்தரசோழபுரம், நெய்வேலி, நெய்வாசல், பில்லமங்கலம், பிரான்மலை, ஆதனூர் என ஏராளமான சிற்றூர்கள் நகரத்தார்களின் வாழ்க்கையில் இடம் பெறுகின்றன. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் என்ற தனித்த பெயரை பெறுவதற்கு முன்னர் வணிகச் சமூகமாக இணைந்திருந்த காலத்தில் இருந்த ஊர்கள் அவை. இன்றும் அந்த ஊர்கள் உள்ளன. சின்னஞ்சிறு கிராமங்களாக, அவை பெருமைகளைத் தம்முள் பொதிந்து வைத்துக் கொண்டுள்ளன.

(வரலாறு வளரும்)




## Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923



# 80-ஆவது பிறந்த நாள் விழா

அரிமழம், நேமம் கோவிலைச் சேர்ந்த திரு. **AL.நடராசன் செட்டியார்** – திருமதி **N.மீனாட்சி ஆச்சி** அவர்களின் 80-வது வயது பூர்த்தியானதை முன்னிட்டும், அவர்களுக்கு திருமணமாகி 60 ஆண்டுகள் ஆனதையும் முன்னிட்டு 28.09.2024 அன்று பட்டுக்கோட்டை, ஸ்ரீ நாடியம்மன் திருக்கோவிலில் அபிஷேகம் மற்றும் அர்ச்சனை செய்து பிறந்த நாள் விழா இனிதே நடைபெற்றது. அந்த விழாவில் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பாக கொண்டாடினார்கள்.

**வாழ்த்துபவர்கள்:**

**மகன் மற்றும் மகள்கள் : N.அழகப்பன், T. மீனா, A. செல்லம்,**
**பெயரன்கள், பேத்திகள் : T. ஜெயஸ்ரீ, T.பழனியப்பன், AL.நடராஜ், AL.மீனு நாச்சம்மை, A.ஸ்ரீராம் கொள்ளுப் பேத்தி : SJ.ஷிவானி ஸ்ரீ.**

ADVT.



சாகித்திய அகாதமியின் பால புரஸ்கார் விருது பெற்றவரும், தலைசிறந்த குழந்தைக் கவிஞரும், நமது செட்டிநாடு இதழின் ஆசிரியர் குழு உறுப்பினருமான குழந்தைக் கவிஞர் குழ.கதிரேசன் அவர்கள் 75ஆம் ஆண்டு அகவையைப் போற்றும் நிகழ்வாக சென்னைப் பல்கலைக்கழக தமிழ் மொழித் துறை சார்பில், துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ய.மணிகண்டன் அவர்கள் தலைமையில், கவிஞர் குழ.கதிரேசன் அவர்கள் “படைப்புப் பயணமும் பதிப்புப் பயணமும்” என்ற தலைப்பில் 17.10.2024 அன்று பல்கலைக் கழக மெரினா வளாகத்தில் உரை நிகழ்த்தினார். முனைவர் வாணி அறிவாளன், முனைவர் வே.நிர்மலா செல்வி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். கவிஞர் குழ.கதிரேசன் அவர்கள் வளத்தோடும் நலத்தோடும் வாழ்வாங்கு வாழ நமது செட்டிநாடு வாழ்த்துகிறது.


VALATHI
Since 2005

உ
**திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.**
**வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.**
**ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.**

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ.1,00,000/- முதல்
ரூ.25,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.

துவக்கம் 2005

**TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.**
**VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,**
**SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,**

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001.
Cell : 93616 07776, 89034 90064

0431-2760064,80 3569950,7968005. 94439 86143 ★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com valathichitfunds.com

# இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)



## சூர்ப்பனகை சூழ்ச்சி - (5)

அகத்தியர் சக்தியை அறிந்து கொண்டு
அவரால் இழந்ததை திருப்பி பெற
கரண் துசன் மன்னவர் சொல்ல
சூர்ப்பனகை ஆணவம் கொண்டு புறப்பட்டாள்
அவரிடம் மோதி அடிபட்டு அசிங்கப்பட்டாள்
என்ன செய்தால் சரியாகும் நாம் இழந்ததை
எப்படி மீட்பதென்றே
எண்ணிக் கொண்டு அவள் நடந்தாள்
மின்னும் ஒளியாய் புது மலராய்
கண்முன் தெரிந்த குடில் கண்டாள்
எழிலும் நேர்த்தியும் இணைந் திருக்க
இன்முகம் அமைதியில் பூத்தி ருக்க
ராமனைக் கண்டு காமு ற்றாள்
அவனை ஒத்த மகன் இருந்தும்
ராவணன் தங்கை என்ப தனால்
அரக்க உருவை மாற்றிக் கொண்டு
அழகுடன் நடந்து அவள் வந்தாள்
கண்ணில் காமம் கலந்தி ருக்க
உடையில் நடையில் அது தெரிய
ராமன் முன்னே வந்து நின்றாள்
தசரத மைந்தன் என்றறி ந்தாள்
தனக்கு உகந்தவன் நீ என்றாள்
உன்னை அடைவதே என் நோக்கம்
என்னுடன் வருவாய் ராமா என்றாள்
திசையில் நின்ற சீதையை காட்டி
திருமண மானவன் நான் என்றான்
இளவல் இருக்கும் திசை காட்டி
இயன்றால் அடைவாய் அவனை என்றான்
வந்த நோக்கம் நிறைவேற அவள்
இளவல் நோக்கி நடந்து சென்றாள்
இடையில் காமம் துள்ள லிட
அவனை அடைய குறி கொண்டாள்
அண்ணனின் குறும்பை அறிந்து கொண்டு
அவளை நோக்கி சிரித்த வண்ணம்
அண்ணன் அண்ணியின் சேவகனாய் அடிமை
என்னை மணந்து கொண்டால்
எப்பவுமே அடிமை நீ சேவகியே
புரிந்து கொள்வாய் புறப்படு என்றான்
இருவரும் மாறி இவளை பந்தாட
எளிதில்அதனை புரிந்து கொண்டே
சீதையை கொல்ல அவள் நெருங்க
சிறிய வாளால் மூக்க றுத்தான்
அண்ணா வென்றே ஓலமிட்டாள்
ராவணனை நோக்கி புறப்பட்டாள்

## ராவணன் சீதையை கவர புறப்படுதல் - (6)

அண்ணா என்று ஓலமிட்டு
அவையின் முன்னர் தலைவிரித்து
என்னால் வந்த செயல் இல்லை
உன்னால் வந்தது உரு மாற்றம்
தண்ட காருண்யம் வனமதிலே
தளிர்மிகு நங்கை ஒருவளுடன்
அண்ணன் தம்பி இருவர் கண்டேன்
அழகில் மயங்கி உன்னை நினைத்தேன்
ராமன் என்பவன் ஒருவன் பெயர்
அவளின் மனைவி சீதை ஆவாள்
உலகில் சிறந்த அழகியவள்
அறிவில் சிறந்த நாயகியே
அவளை உனக்கு மணம்முடிக்க
அவளிடம் பேசி நடிக்கையிலே
இலக்குவன் என்பான் என் மூக்கை
இந்த நிலைக்கு கொண்டு வந்தான்
தசரத மன்னன் மூத்த மகன்
ஜானகி அவனின் மனைவி யாவாள்
உச்சி முதல் பாதம் வரை
ஒளிரும் அழகு சேர்ந்திருக்க
இச்சை கொண்டேன் இவள் உனக்கு
மனைவி ஆக வேண்டுமென்று
அதனால் வந்த என் துயரை
அகற்றல் அண்ணா உன் கடமை
என்ன செய்வாய் என்று அறியேன்
என் துயர் தீர்த்து காப்பாயே
போரில் வென்று அவன் இறந்தால்
பொழுதில் அவன் புகழ் மறைந்துவிடும்
சீதையைக் கவர்ந்து எடுத்து வந்தால்
சீக்கிரம் நீ மணம் கொள்வாய்
மனைவியை இழந்த துக்கத்தால்
மானம் இழந்து பரிதவிப்பான்
உலகம் முழுதும் அச்செய்தி
உம்மை போற்றிப் பாராட்டும்
நஞ்சை விதைத்தால் சூர்ப்பநகை
சுயநலம் எண்ணி பிணைத்து விட்டாள்
மூன்று உலகம் வென்றவன் இன்று
முழுதுமாய் மதி இழந்து விட்டான்
காமம் கண்ணை மறைத்து விட
சீதையை கவர புறப்பட்டான். (தொடரும்)

நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளை
[நிறுவனர் புதுவயல் செல்லப்பன்]
தமிழ் மரபுக் கவிதைப் போட்டி

நல்லழகம்மை செல்லப்பன் அறக்கட்டளை சார்பில் தமிழ் மரபுக் கவிதைப் போட்டி நடைபெற உள்ளது. போட்டியில் பங்கேற்கும் நூல்கள் 2023 மற்றும் 2024-ஆம் ஆண்டுகளில் வெளியானதாகவும், குறைந்தபட்சம் 100 பக்கங்கள் கொண்டதாகவும் இருக்க வேண்டும். போட்டிக்கு மூன்று படிகள் அனுப்ப வேண்டும். நூல்களை வரும் 2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ஆம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும். குழந்தைகளுக்கான கவிதை நூல்களும் அனுப்பலாம்.

சிறந்த கவிதை நூல்களுக்கு முதல் பரிசு ரூ.10,000/-, இரண்டாம் பரிசு ரூ.7,500/-, மூன்றாம் பரிசு ரூ.5,000/- வழங்கப்படும்.

இப்போட்டிக்கான பரிசுத் தொகை 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி அல்லது மார்ச் மாதம் நடைபெறவுள்ள சென்னை வாணுவம்பேட்டை, திருவள்ளுவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவில் வழங்கப்படும். நூல்கள் தேர்வில் நடுவர்கள் தீர்ப்பே இறுதியாகும். பரிசு பெறாத நூல்கள் திரும்ப அனுப்ப இயலாது.

நூல்கள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: ந.செல்லப்பன்,
G-2, ரங்க விலாஸ், CTS அடுக்ககம், 49, இரண்டாவது தெரு,
புவனேஸ்வரி நகர், ஆதம்பாக்கம், சென்னை - 600 088




# நகரைக் கலக்கிய திருச்சி நகரத்தார் சங்க பவள விழா

1948-ல் தேவகோட்டை ஏவி.கே. சோமசுந்தரம் செட்டியார் மற்றும் காரைக்குடி எஸ்.ஆர்எம்.எஸ். சுப்பையா செட்டியார் ஆகியவர்களால் தோற்றுவிக்கப்பட்டது திருச்சி நகரத்தார் சங்கம். இச் சங்கத்தின் முதல் தலைவர் பள்ளத்தூர் அருணாசலம் செட்டியார். வெற்றிகரமான 75 ஆண்டுகளைக் கடந்து, அக்டோபர் மாதம் 5, 6-ம் தேதிகளில் பவள விழா திருச்சி எஸ்.பி. எஸ் மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சி, திருச்சி நகரத்தார் மகளிர் சங்கத்தின் பெண் பிள்ளைகளின் பரதநாட்டியத்துடன் தொடங்கியது. அன்றைய சிறப்பு விருந்தினராக தமிழக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு கே.என். நேரு பங்கேற்று உரையாற்றினார். பவள விழா துவக்க உரையை மாண்புமிகு நீதியரசர் எம்.சொக்கலிங்கம் வழங்கினார். அதன் பின்னர் பொருளாதார நிபுணரும் வங்கியாளருமான சேதுராமன் சாத்தப்பன் கருத்துரையாடல், மேஜிக் ஷோ ஆகியவை நடைபெற்றன. மாலையில் முன்னாள் அமைச்சர் மா.ஃபா. பாண்டியராஜன் மற்றும் திருமதி லதா பாண்டியராஜன் சிறப்புரையாற்றினர். அதனைத் தொடர்ந்து 9 நகர கோயில்களின் காரியக்காரர்கள், தலைவர்கள், காசிச்சத்திரம் மேலாண்மை கழக நிர்வாகிகள், வெளியூர் நகரத்தார் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் என்.பி.சி. இயக்குனர்கள் ஆகியோர்களுக்கு பாராட்டு அரங்கம் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி சங்கத் தலைவர் சுப. சுப்பிரமணியன் வரவேற்புடன் தொடங்கியது சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி தலைமை ஏற்க, திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவர்களும் மகளிர் சங்க முன்னாள் தலைவிகளும் கௌரவிக்கப்பட்டனர். அன்றைய சிறப்பு உரையை தமிழருவி மணியன் மற்றும் மருத்துவர் கு.சிவராமன் ஆற்றினர். மாலையில் ‘பெண்மை போற்றுதும்’ என்ற நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக உயர் பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றும் நகரத்தார் பெண்மணிகளான, சென்னையில் CSIR, Structural Engineering Research Centre என்னும் ஆய்வு மையத்தின் இயக்குநர் முனைவர் நா. ஆனந்தவல்லி, மெட்ராஸ் ஐ.ஐ.டி. கல்வி நிறுவனத்தில் மேலாண்மைக் கல்வித் துறை தலைவர் மற்றும் அத் துறையில் நிதிப் பேராசிரியர் முனைவர் தேன்மொழி ராமசாமி, சென்னையில் Directorate General of Vigilance, South Zonal Unit, Anti corruption wing-ல் கண்காணிப்பாளர் பதவி வகிக்கும் சாந்தி நாச்சியப்பன், DGAQA ஹைதராபாத்தில் Military Aircraft Manufacturers ஆன HAL (Hindustan Aeronautics Limited) நிறுவனத்தில் மண்டல இயக்குநராகப் பணியாற்றி, ஓய்வு பெற்ற சுப. விசாலாட்சி, சென்னை கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் Scientific Officer – H என்னும் பொறுப்பு வகிக்கும் நாச்சம்மை கண்ணன், பெங்களூரில், இந்திய பாதுகாப்பு அமைச்சரகத்தில், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (DRDO), CEMILAC (Centre for Military Airworthiness and Certification – Intellectual Property (IP) துறையில் விஞ்ஞானி மற்றும் கூடுதல் இயக்குநர் (மென்பொருள்) பதவி வகிக்கும் சாலா லெட்சுமணன், தினமணி, ஆனந்த விகடன் குழுமங்களில் பணியாற்றி தற்போது ஃப்ரீலான்ஸ் ஜர்னலிஸ்ட் ஆகப் பணியாற்றும் பிரேமா நாராயணன், வருமான வரித்துறை அதிகாரி வள்ளியம்மை தியாகராஜன் ஆகியோருக்கு பழ. கருப்பையா விருது வழங்கினார். விருது பெற்ற பெண்மணிகள் மேடையில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பவள விழா நிறைவு சிறப்புரையை பழ. கருப்பையா வழங்கினார்.

விழா நடந்த இரு நாட்களும் காலை, மதியம், மாலை, இரவு 4 வேளைகளும் சுடச்சுட அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக ஒருங்கிணைத்து, விமர்சையாக விழாவை சங்கத்தினர் நடத்தியது குறிப்பிடத்தக்கது. ♦



விருது பெற்ற நகரத்தார் பெண்மணிகள்



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் – 36 (மெய் உணர்தல்)

360) காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.
காமம் வெகுளி மயக்கம் தம்மையே
கருத்தில் வராமல் உள்ளம் ஒதுக்கினால்
தீமனம் பிறவித் துன்பமும் விலகும்
தெளிந்த மனதில் மெய்ப்பொருள் தெரியும்
காமம் வெகுளி மயக்கம் என்பவை
காலமும் பிறரைத் துளைத்திடும் துயர்தான்
ஆம்இவை பெயர்களை நினைவிலும் கொள்ளா
ஆற்றலால் பிறவித் துன்பமும் வீழுமே.

அதிகாரம் – 37 (அவா அறுத்தல்)

361) அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.
அவாஎனில் எதற்கும் ஆசைப் படுவது
ஆசைதான் பிறவித் துயர்எனும் பகைவன்
அவாவைத் துறந்து ஆசையை விலக்கினால்
அகலுமே பிறவித் துன்பங்கள் அனைத்தும்
துன்பம் முளைக்கும் விதைஎது தெரியுமா
தோன்றும் அவாதான் அவாவைத் துறந்தால்
இன்பப் பயிர்தான் எதிலும் நிம்மதி
இனிஒரு பிறவியால் துன்பம்வந் திடுமோ.

362) வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.
விரும்புவ தானால் எதைநீ விரும்பலாம்
வேண்டும் பிறவாமை அதையே விரும்பலாம்
பிறவாமை உலகில்நாம் இல்லாத நிலைதான்
பிறவாமை இல்லையேல் துன்பங்கள் இல்லையே
பிறந்தவன் யார்க்கும் பெருகலாம் துன்பம்
பிறவித் துயரை வெல்வது என்பது
பிறவாமை யால்தான் இயலுமே அதனால்
பிறவாமை மட்டுமே பெரும்பே ரின்பம்.

364) தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.
ஆசைஇல் லாமனம் தூய்மை ஆனது
ஆசையைத் துறக்க ஆன வழிஎது
மாசறு மனத்தை வாய்மையால் பெறலாம்
வாய்மையால் ஆசையை அடக்கி வெல்லலாம்
உன்மனம் தூய்மையாய் உண்மையாய் இருக்க
உள்ளத்தில் பொய்மையை அண்ட விடாதே
என்று உன்மனம் உண்மையால் நிறைந்ததோ
இல்லை எனக்கினி ஆசையால் வரும்துயர்.

# திருமந்திரச் சுவை – 40

## யார் பெரியவர்?



பூங்குன்றம் இராமசாமி

'நானே பெரியவன்!'

இவ் எண்ணம் நம் அனைவரிடத்தும் உள்ள ஒன்றே! அதுதான் ஆணவம் (கர்வம்). இதற்கும் நம் ஆணவத்தால் உண்டாகும் நம் அறியாமையே காரணம்!

உயர்ந்த நிலையில் உள்ளவன் ஒருகணத்தில் தாழ்ந்து விடலாம்! தாழ்ந்த நிலையில் உள்ளவன் ஒரு நொடியில் உயர்ந்து விடலாம்!

யாராக இருப்பினும் ஒருவரைவிட உயர்ந்த மற்றொருவர் உலகில் உள்ளார். இவ் அடக்கம் ஒன்றே உயர்ந்தது. நிலைத்து நிற்பது.

இக் கர்வம் பிரமனுக்கும் திருமாலுக்கும் வந்தது.

'நானே பெரியவன்' என்றார் பிரமன். திருமாலும் அதையே சொன்னார். இதனை எவ்விதம் நிரூபிப்பது?

'சிவனது அடி, முடி கண்டவரே உயர்ந்தவர்' என்ற முடிவிற்கு வந்தனர் இருவரும்.

திருமால் பன்றி உருவெடுத்துச் சிவனது அடிதேடி விரைந்தார். பிரமன் அன்னப்பறவை வடிவெடுத்துச் சிவனது முடிதேடிப் பறந்தார். சிவனோ அனற்பிழம்பாய் நீண்டார். ஆக, இருவராலும் அடிமுடி காண இயலாது போனது.

இதனைத் திருமூலர் பாடல் வழிக் காண்போம்.


பிரமனும் மாலும் பிரானேநான் என்னப்
பிரமன்மால் தங்கள்தம் பேதைமை யாலே
பரமன் அனலாய்ப் பரந்துமுன் நிற்க
அரனடி தேடி அரற்றுகின் றாரே (10.372)

பிரமனும், திருமாலும் 'நானே தலைவன்' என்று தங்கள் அறியாமையால் தம்முள் மாறுபடப், பரமன் அனல்மலையாய் எங்கும் பரவி அவர்கள் முன்நின்றான். அதனை உணராது அவனடி தேடிப் புலம்புகின்றனரே!

ஆக, யாரும் பெரியவரல்லர். நாம் அனைவருமே சிறியவர்தாம்! மேலும், சிவத்தின் உயர்வை நோக்கும் போது நம் உயிர்கூடச் சடந்தான் (சடம் போல்வதே)!

எனவே, சிவன் ஒருவனே உயர்ந்தவன். ✶

# இரணிக்கோவில் – பிள்ளையார்பட்டி கோவில் நகரத்தார்கள் இடையே திருமணம் – தீர்மானம் நிறைவேற்றம்



இரணிக்கோவில், பிள்ளையார்பட்டி கோவில் பங்காளிகள் அவர்கள், அவர்களது பொது மகாசபைக் கூட்டத்தில் தீர்மானித்தபடி இரண்டு கோவில்களுக்கிடையே திருமணம் செய்து கொள்ளலாமென முடிவு செய்யப்பெற்றது. இந்த நடைமுறை நாளது வருடம் ஐப்பசி மாதம் 6-ம் (23-10-2024) தேதியிலிருந்து, கோவில் மாலை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் என இரண்டு கோவில் நகரத்தார்களுக்கும், அவரவர் கோவில் பங்காளிகள் உள்ள ஊர்களுக்கும், மற்றும் 7 நகர கோவில் நிர்வாகிகளுக்கும் கடிதம் மூலமாக இரணிக்கோவில் நடப்பு காரியக்காரர், பள்ளத்தூர் திரு. மு.அ.வீர.வீரசேகரன், பிள்ளையார்பட்டி கோவில் நடப்பு காரியக்காரர்கள், காரைக்குடி, திரு. ராம. மெய்யப்பன் மற்றும் பூலாங்குறிச்சி, திரு. சுப.முத்துராமன் ஆகியோர் கடிதம் மூலமாக தெரிவித்துள்ளனர். இந்த முயற்சியில் தளராது முன்னெடுத்துச் சென்று வெற்றி கண்ட அனைத்து நகரத்தார்களுக்கும். நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் சார்பாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஏ.ராம.ஏ.ஞானம், தலைவர், நகரத்தார் ஐக்கிய சங்கம்



இரணிக்கோவில் மற்றும் பிள்ளையார்பட்டி கோவில் நகரத்தார்கள் தங்களுக்கிடையே திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்யப்பெற்றது. அதனைத் தொடர்ந்து இரண்டு கோவில் நகரத்தார்களும் சந்தித்து கொண்ட தருணம்.



பள்ளத்தூர் மு.அ.வீர.வீரசேகரன்



காரைக்குடி, ராம. மெய்யப்பன்



பிள்ளையார்பட்டி நகரத்தார்கள், விசாரணைதாரர்களுடன், இரணியூர் கோவிலுக்கு வந்த நிகழ்வு




பூலாங்குறிச்சி, சுப.முத்துராமன்



# பேசும் நாவல்

அரியக்குடி “ ஸ்ரீ” – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)




பினாங்கு கிட்டங்கிகளின் பொட்டியடிகளில் குறிப்பு, பேரேடு, ஐந்தொகை, இனங்களைப் பற்றிய நாணயம்ன்னு (சிபில் ஸ்கோர்னு) ஏஜெண்ட்களின் அலசல்களுக்கு மத்தியில், “என்ன மானி, இதுநாள் வரையிலே நம்ம பணத்தைக் கடல் தாண்டி ஊருக்கு கொண்டு போறது எம்புட்டு பாடா இருந்தது. என்னதான் மலேயன் பேங்க், ஒலந்தா பேங்க், யூனியன் பேங்க், சிட்டி பேங்க்னு அன்றாடம் பணத்தை போடவும் எடுக்கவும் இருந்தாலும் இதுக்கு ஒரு விமோசனம் பிறக்காதான்னு இருந்தோம்ல அதுக்கு விடிவு வந்துருச்சு...”

“என்ன சொல்லுறீக மானி”.

நாம கானாடுகாத்தான் மு.சித.மு.சித. பத்தி கேள்விப்பட்டிருக்கீகளா?

“என்ன இப்படி சொல்லிப்பிட்டீக. அவுக சீமைத்துரை போல அழகு. சிங்கம் போல கம்பீரம். லண்டன்ல படிச்சு பட்டம் வாங்குனவுக. சரஸ்வதி கடாட்சம் நிறைந்தவுக. லெட்சுமி வாசம் செய்கிற திருத்தலம் அவுக வீடு. எனக்கா தெரியாது” சுப. ஏஜெண்டு சொல்லி முடித்தார்.

அவுக ஒரு பேங்க் நம்ம பினாங்குல திறக்கப் போறாங்களாம். அவுக திருவாசகத்தை கருவாசத்திலே இருந்து கொண்டு வந்தவுக. எது செஞ்சாலும் நல்லா திட்டம் போட்டு நடத்துற குடும்பம்.

அது சரி மானி, இப்ப அவுக பேங்க் ஆரம்பிச்சா, அதுவும் ஏற்கனவே இருக்க ஒலந்தா, மலேயன் பேங்க்குக போலத்தானே. நாம ஊருக்கு பணம் கொண்டு போக எப்பவும் போல கஷ்டம் தானே.

“இல்லை. அவுக பேங்குக்கு ஒரு ஏஜென்ட் போட்டுருக்காக. அவரு ஒவ்வொரு கிட்டங்கிக்கா வந்து பேங்க் பத்தி சொல்லுறாரு. அதுல கணக்குத் திறந்தா நமக்கு ரொம்ப சுமை குறைஞ்சு போயிடும் போல.

“அப்படி, என்னதான் மானி நமக்கு சாதகம் இருக்கு” எப்பவும் எதிலேயும் திருப்தியாகததாக சுப ஏஜென்ட் கேட்டாரு.

“இங்க இவுக பேங்க்ல ஒரு அக்கவுண்டும், நம்ம காரைக்குடியில யாருக்கு பணம் அனுப்பப் போறோமோ அவுக பேருக்கு ஒரு அக்கவுண்டும் திறந்துக்கிடணும். நாம ஊருக்கு அனுப்ப வேண்டிய தொகையை இங்கே கட்டிட்டா அங்கே நமக்கு நம்ம ரூபாயில தந்திருவாகளாம்”.

இவுகள்ட்ட நம்ம ரிங்கியா பணம் கட்டுறோம். அதெப்படி நமக்கு நம்மூர்ல நம்ம பணத்திலே தருவாக.

வெள்ளைக்காரங்கய பேங்க்ல, அது அவுக கட்டிருவாக. அவைங்க நம்மூர்ல அதைக் கொண்டாந்து அவைங்க பேங்க் மூலமா நமக்கு தந்துருவாங்களாம்.

இல்ல மானி, அவைங்க பணமா கொண்டாருவாய்ங்களா.

நம்ம காச அவைங்க எடுத்துக்கிட்டு, அங்க நமக்கு பிரிட்டிஷ் இந்தியா காசா தந்துருவாய்ங்க.

அடுத்த கிட்டங்கி. அங்க ரொம்ப விபரமான முதலாளி, ஏஜென்ட் அங்க நடந்த விவாதத்தைப் பாருங்க.

“வெள்ளைக்காரப் பயலுகள நம்பி இதைப் பரிச்சை செய்யப்பிடாது. பணம் போச்சுன்னா மு.சித.–வா அங்க நமக்குத் தருவாக.

அது சரி அண்ணே. இங்க பாங்கில போடுறோம். உடனே எடுக்கிறோம். நம்ம கண்ணு முன்னாடி மலாய்க்காசை கொடுக்கிறாங்க. இப்ப நீங்க சொல்லுற புதுத் திட்டம் எனக்கு சரியா வருமான்னு தெரியல.

என்ன ராமையா அண்ணே நீங்க என்ன நினைக்கிறீங்க? பலத்த யோசனையில இருக்கீங்க.

இல்ல அம்மான் என்ன செய்வோம் எனக் கையை பிசைந்தார்கள் ராமையா.

அண்ணே நம்ம பெ.ஆ.த. கணக்கு வழக்குல சூரப்புலி. ரொம்ப விபரமான மார்க்கா. ஊருக்கு கொண்டு போறத எப்படி எதவா கொண்டு போகலாம்னும் தெரிஞ்சவுக. இது தாவலே தம்பின்னு சொல்லிட்டு, அவுகளே கணக்கு தொறக்கறாங்களாம்.

அப்ப நாமளும் ஒரு கணக்கு திறப்பமா? அப்பச்சி, இல்ல வேற யோசனை இருக்கா?

தம்பி, முதல்ல சின்னத் தொகையாப் போட்டு அங்க கேப்போம். அது எப்படி வருதுன்னு பாப்போம்.

இப்படி ஒவ்வொரு கிட்டங்கிகளா பேச்சு போகுது. சிலருக்கு புரியல. சிலருக்கு புரிஞ்சது கொஞ்சம் பயம் அதிகம். சிலர் இதெல்லாம் வேண்டாத வேலையப்பா என்றும் சொல்லியிருக்காக.

தாது வருடம், மாசி மாதம், 28–ஆம் தேதி, 1937 பினாங்கே கோலாகலமா இருந்தது. அன்னைக்கு சங்கடஹர சதுர்த்தி.

எல்லோரின் விவாதத்திற்கு உள்ளான பேங்க்கை, கொடாலேர்ந்து சிதம்பரம் செட்டியார், கோட்டையூர் – பாரட்டலா – க.வி.அழ. அழகப்ப செட்டியார், கண்டரமாணிக்கம் – பெ.ஆ.தா., கோட்டையூர் – ராம., ராயவரம் – செ.முரு., காணத்தம்பட்டி – மு.சித. வீட்டு ஆளுக, அவுக அண்ணன் – தம்பிகள் என முக்கிய புள்ளிகளால் நிறைந்து இருக்கிறது. பேங்க் திறப்பு விழா.

மு.சித. பேங்க்கை திறந்து வச்சு பேசுறாக.

“நம்ம நகரத்தார் பல நாடுகள்ல கொண்டுவித்து வரும் லாபங்களை நம்ம நாட்டுக்கு கொண்டு போறதில உள்ள செரமங்களைக் கருதி, பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முறைப்படி அனுமதி வாங்கி, பிரிட்டிஷ் பேங்க்கோட ஒப்பந்தம் செய்து கொண்டு, இந்த பேங்க்கை இங்க ஆரம்பித்திருக்கோம். ஏற்கனவே இந்த பேங்க்கை நம்ம காரைக்குடி, சென்னை, ரங்கோன், சிலோன் போன்ற பல நாடுகள்லே ஆரம்பிச்சிருக்கோம். இன்னும் பல நாடுகளுக்கு விஸ்தீரிக்கப் போறோம். நீங்க எல்லோரும் பயமின்றி உங்கள் செல்வங்களை கொண்டு செல்ல இந்த பேங்கின் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்”.

அடுத்தடுத்து பலரும் உலகப் பொருளாதாரம், உலகெங்கும் நகரத்தார் செய்யும் தொழில்கள் பற்றி செட்டி மக்கள் பேசினார்கள்.

ஆறாவயல் சித. கணக்கு தொறந்து கையிலே ஒரு கவரு வச்சுருந்தாக. அயித்தான், நீங்க தொறந்துட்டிகளா?

ஆமா, மாப்பிளே. எப்படி இருக்குன்னு தெரியலே. சரி பாப்போம்.

இல்ல. வெள்ளைக்காரன் ஒருவேளை நம்ம பணத்தை வச்சுக்கிட்டு தரலைன்னா, என்று சொல்லவும் அங்க இருந்தவக ஒருத்த முகத்தை ஒருத்தர் பார்க்க.

அம்மான், இப்போதைக்கு இணக்கமா சட்டத்திட்டம் இருக்குன்னு சொல்லுறாக. இப்பப் போடுவோம். பெரிய பணம் வேண்டாம்.

“அண்ணே, பணத்தை நம் ஊரில் உள்ள கணக்கிற்கு வரவு வைக்க நாலு வாரமாகுமாம். இதுக்கு வட்டமாக (Service Charge) ஒரு தொகை வசூலிக்கிறார்களாம்”. கூட்டம் முடிந்த கையோடு ஒரு மானியின் அப்டேட் இது.

கண்டவராயன்பட்டி சாத்தப்ப செட்டியார் வந்தாக. “வாங்க மானி இந்தத் திட்டம் எப்படி”? இப்படி ஒரு பேட்டி கேக்க நல்லாருக்கு. வெள்ளைக்காரங்க நம்ம ஊர்ல இருக்கதுகள கொண்டு போறது போல இதையும் கொண்டு பொய்த்தங்கள்னா? ம்ம். அந்நியன் என்னைக்கும் அந்நியன் தானே.

பல் முளைக்கையில் ஈறு வலிக்கும். மாற்றத்தைப் புதிய கண்டுபிடிப்புகளை யாரும் அறிமுகமான நாளிலேயே ஏற்றதாக சரித்திரமே இல்லை தானே.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியை, தனது 28–ஆவது வயதில் உலகளவில் சிந்தித்து, அதில் பெரும்பாலும் நகரத்தார்கள் பயன்பெற வேண்டும் எனும் நோக்கில் இப்படித்தான் ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள் மு.சித.மு. சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

வாசகர்கள் மேலே படித்த பகுதி அனைத்தும் “யாவரும்” புத்தக பதிப்பாளர்கள் வெளியிட்ட, இன்பா சுப்ரமணியன் அவர்கள் எழுதியுள்ள “வையாசி 19” எனும் அழகிய நாவலில் பதிவு செய்துள்ள செய்திகள். நாவலாசிரியர் 632 பக்கங்கள் கொண்ட இந்த நாவலை எழுதுவதற்கு, ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிலவு செய்து இருக்கிறார்கள். நாவலின் கருப்பொருள் ஒரு வைகாசி மாதத்தில் 16–ஆம் தேதியில் தொடங்கி 19–ஆம் தேதியில் முடிவுறும் நகரத்தார் வீட்டுத் திருமணம் தான்.

நகரத்தார் வாழ்வியலில், தாலாட்டில் தொடங்கி, ஒப்பாரி வரை அணு அணுவாக நாவல் பேசுகிறது. திருமணத்திற்கு முந்தைய திட்டமிடுதல்கள், பிந்தைய வாழ்வியல், பேறு காலம், சீர் செனத்திகள், கணக்கு வழக்குகள், வெளிநாட்டில் நகரத்தார் வாழ்ந்த விதம், செட்டியாருக்குப் பின் ஆச்சி ஒற்றையாளாக நிர்வாகம் செய்த நேர்த்தி என பறந்து விரிந்த நாவல் நமது செட்டிநாட்டு பேசு மொழியில் பயணிக்கிறது.

ஒரு நல்ல சந்தர்ப்பம் சில நல்ல மனிதர்களை சந்திப்பதாலோ அல்லது சில நல்ல புத்தகங்களை வாசிப்பதாலோ கிடைத்துவிடும். அப்படி ஒரு வாசிப்பனுபவம் எனக்குக் கிடைத்தது. நமது அடுத்த தலைமுறைக்கு நமது வாழ்வியலை அட்சரச் சுத்தமாக சொல்லித்தர ஆகச் சிறந்த ஆவணமாக இருக்கிறது நாவல். முதல் பதிப்பாக 2016, மார்ச் மாதத்தில் வெளிவந்த நாவல் நம்மை வந்தடைய டிசம்பர் 2022–ல் இரண்டாவது பதிப்பாக வெளிவந்த பிரதியே வாய்த்திருக்கிறது.

“ஆடுற கூத்தும் பாடுற பாட்டும் படிப்பினைத் தந்தாகணும்” என்ற சொலவடைக்கு ஏற்ப பெரிய படிப்பினை செட்டிநாடு குறித்துத் தருகிறது நாவல்.

ஈடு இணையற்ற படைப்பாளி நாவலாசிரியர் இன்பா சுப்பிரமணியன் அவர்கள் நகரத்தார் சமூகத்திற்குக் கிடைத்த வரம். அவர்களைப் போற்றுவோம்.

# மின்னியல் துறையில் சாதனை படைத்த உமா மாணிக்கம்



காரைக்குடி, வைரவன் கோவில், மருதேந்திர புரமுடையார், நா.லெ. வகையைச் சேர்ந்த மாணிக்கம் வள்ளியப்பன் – அலமேலு தம்பதியரின் மகள் உமா மாணிக்கம், பள்ளிப் படிப்பை மும்பை, அகமதாபாத் மற்றும் கல்கத்தாவில் கேந்திரிய வித்யாலயாவில் முடித்தவர். கோவை PSG தொழில்நுட்பக் கல்லூரியில் BE (EEE) முடித்து, மேற்படிப்பு (MS) ஜெர்மனியிலும், ஸ்பெயினிலும் வெற்றிகரமாக முடித்தார். SIEMENS நிறுவனத்தினர் அவருடைய கல்வித் திறனைப் பாராட்டி அவரை BUSINESS AND PRODUCT DEVELOPMENT துறையில் ஜெர்மனியில் வேலைக்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர்

கடந்த செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி IEC (International Electrotechnical Committee) அமைப்பு 2024-க்கான குறைந்த மின்னழுத்த நேரடி மின்னோட்டம் (LVDC) தொழில்நுட்பத்தில் இவரது பங்களிப்புகளுக்காக மதிப்புமிக்க IEC 1906 என்ற விருதை செல்வி உமா மாணிக்கத்திற்கு வழங்கியது. இந்த விருதை மிகக் குறைந்த வயதில் பெற்றவர் என்ற பெருமைக்குரியவர் உமா மாணிக்கம் ஆவார்.

IEC 1906 விருது International Electrotechnical Committee-யால் 2004ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த விருது ஒவ்வொரு ஆண்டும் International Electrotechnical Committee-யால் தலைமைத்துவம் மற்றும் Electrotechnical தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் மூலம், மின் பொருட்கள் உற்பத்தி மற்றும் மின்சார அமைப்புகளை பாதுகாப்பான, திறமையான மற்றும் நம்பகமானதாக மாற்றுவதற்கு பங்களித்தவர்களின் அர்ப்பணிப்பு, திறமை மற்றும் பணிக்கு மதிப்பளித்து வழங்கப்படும் விருதாகும்.

இந்த விருதினை பல திறமையான தொழில்நுட்பவியலாளர்களின் கூட்டு முயற்சியுடன் PT63317 என்ற பணிக் குழுவில் தன்னோடு முக்கிய பங்காற்றியவர்களுடன் பெற்றுள்ள இவர் தனது குழுவினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த பயணத்தில் தனக்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் குறிப்பாக – தனது பெற்றோர், சகோதரி, நண்பர், வழிகாட்டி, சக ஊழியர்கள் என அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

சிறு வயது முதல் கல்வியில் கவனம் செலுத்தி அனைத்து வகுப்புகளிலும் முதல் இடத்தை பிடித்து சாதனை படைத்த இவர் தான் எழுதிய ஆங்கில கட்டுரைகளுக்காக common wealth அமைப்பின் பாராட்டு சான்றிதழ்களை 3 வருடங்கள் தொடர்ந்து பெற்றுள்ளார் என்பது சிறப்பாகும்.

பல மொழிகள் பயின்று தற்போது ஜெர்மனியில் குடியுரிமை பெற உள்ள இவர் இன்றும் கோவை PSG தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் மூலம் இணைய வழி வகுப்பு (online classes) எடுத்து வழிகாட்டியாக இருந்து ஊக்குவித்து வருகிறார்.

ஜெர்மனியில் நகரத்தார் சங்கத்திலும் உறுப்பினராக உள்ள இவர், இளம் வயதில் பணி நிமித்தமாக 25 நாடுகளுக்கும் மேலாக பயணித்து தரமான மின்னியல் துறை வளர்ச்சிக்கு (Electrical standards) பங்காற்றியுள்ளார்.

இவரது பணியின் மூலம் நகரத்தார் சமூகத்துக்கும் குறிப்பாகப் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்துள்ள செல்வி உமா மாணிக்கம் மேலும் பல விருதுகள் பெற்று சாதனைகள் பல படைக்க நமது செட்டிநாடு வாழ்த்தி மகிழ்கிறது.

தகவல் : ஆராவயல் ஆர்எம். சண்முகம் செட்டியார்






27 கிளைகள், 36 வருட அனுபவம்




# ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

Incredible India

RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

## SPECIAL TOURS 2024

www.srimurugantravel.com

| நாள் | சுற்றுலா | புறப்பாடு | கட்டணம் |
|---|---|---|---|
| 10 | ஆக்ரா-காசி அயோத்தியா | மாதந்தோறும் 9,21 | Rs. 13500/- |
| 13 | டெல்லி-ஆக்ரா அயோத்தியா | மாதந்தோறும் 6,18,27 | Rs. 17500/- |
| 6 | ஸ்ரீரடி பண்டரிபுரம் | மாதந்தோறும் 1,8,15,22 | Rs. 8000/- |
| 10 | குஜராத்-துவாரகா பட்டேல்சிலை | மாதந்தோறும் 17 | Rs. 17000/- |
| 17 | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 30000/- |
| 13 | பத்ரிநாத் கேதார்நாத் | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 25000/- |
| 14 | முக்திநாத்-நேபாள் கொல்கத்தா | மாதந்தோறும் 18 | Rs. 27000/- |
| 15 | நவஜோதிர்லிங்கம் | மாதந்தோறும் 18 | Rs. 20000/- |
| 10 | சிம்லா-மணாலி ஆக்ரா | ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 | Rs. 18000/- |
| 13 | அமர்நாத் | ஜூலை முதல் | Rs. 16000/- |
| 2 | மும்பை-ஸ்ரீரடி | தினந்தோறும் | Rs. 14990/- |
| 4 | கோவா SPL | | Rs. 24990/- |
| 4 | டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் | வாரந்தோறும் வியாழன் | Rs. 26990/- |
| 5 | அந்தமான் ஹேவலோக் | தினந்தோறும் | Rs. 29990/- |
| 5 | காஷ்மீர் குல்மார்க் | வாரந்தோறும் புதன் | Rs. 44990/- |
| 5 | டார்ஜலிங் கேங்டாக் | வாரந்தோறும் புதன் | Rs. 39990/- |
| 7 | NORTH EAST | வாரந்தோறும் திங்கள் | Rs. 44990/- |
| 3 | பூரி புவனேஸ்வர் | வாரந்தோறும் வெள்ளி | Rs. 24990/- |
| 7 | குஜராத் துவாரகா | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 35990/- |
| 6 | காசி அயோத்தியா | | Rs. 34990/- |
| 8 | பத்ரி-கேதார் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 44990/- |
| 12 | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி | வாரந்தோறும் திங்கள் | Rs. 54990/- |
| 6 | முக்திநாத் நேபாள் | ஏப்ரல் 1,18 மே 1,10,18 | Rs. 29990/- |
| 6 | பூடான் SPL | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 44990/- |
| 8 | காஷ்மீர் லே-லடாக் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 64990/- |
| 5 | சிம்லா-குளு மணாலி | வாரந்தோறும் புதன் | Rs. 27990/- |
| 5 | லே-லடாக் | வாரந்தோறும் | Rs. 54990/- |
| 6 | நைனிட்டால் முசௌரி-கார்பெட் | வாரந்தோறும் புதன் | Rs. 34990/- |
| 6 | சிங்கப்பூர் மலேசியா | | Rs. 84,990/- |
| 5 | சிங்கப்பூர் மலேசியா | | Rs. 74,990/- |
| 10 | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | | Rs. 1,34,990/- |
| 8 | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | | Rs. 94,990/- |
| 5 | பாங்காக் பட்டாயா Standard | | Rs. 52,000/- |
| 4 | பாங்காக் பட்டாயா Basic | | Rs. 37,990/- |
| 5 | புக்கட் கராபி | | Rs. 64,990/- |
| 8 | Exclusive தாய்லாந்து | | Rs. 94,990/- |
| 4 | மாலத்தீவு Special | | Rs. 59,990/- |
| 5 | ஸ்ரீலங்கா Special | | Rs. 44,990/- |
| 8 | Exclusive ஸ்ரீலங்கா | | Rs. 64,990/- |
| 5 | இந்தோனேசியா பாலி | | Rs. 64,990/- |
| 6 | வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா | | Rs. 94,990/- |
| 7 | Exclusive சீனா | | Rs. 1,54,000/- |
| 10 | ஹாங்காங் மக்காவ் | | Rs. 1,34,990/- |
| 6 | ரஷ்யா Special | | Rs. 1,34,990/- |
| 4 | எகிப்து Special | | Rs. 1,29,990/- |
| 8 | எகிப்து Cruise | | Rs. 1,65,990/- |
| 5 | துபாய் அபுதாபி | | Rs. 74,990/- |
| 7 | சௌத்கொரியா | | Rs. 1,69,990/- |
| 7 | கென்யா | | Rs. 1,59,990/- |
| 9 | ஆஸ்திரேலியா | | Rs. 2,94,990/- |
| 11 | ஆஸ்திரேலியா நியூசிலாந்து | | Rs. 5,29,990/- |
| 9 | ஜப்பான் | | Rs. 2,94,990/- |
| 12 | ஈரோப் Special | | Rs. 2,74,990/- |
| 4 | உஸ்பெகிஸ்தான் | | Rs. 54,990/- |
| 4 | கஜகஸ்தான் அல்மைட்டி | | Rs. 74,990/- |

## தைப்பூசம் ஸ்பெஷல் 2025

**சிங்கப்பூர் - மலேசியா பினாங்கு**

6-2-2025 ரூ. 79,990 முதல்



## தைப்பூசம் ஸ்பெஷல் 2025

**மலேசியா-ஜென்டிங்**

8-2-2025 ரூ. 37,990 முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குருப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குருப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416

கிளைகள் : சென்னை, வடபழனி, பெரியமேடு, மாம்பழம், மைலாப்பூர், காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, காரைக்குடி, கோவை, திருச்சி, பழநி, சேலம், திருநெல்வேலி, ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருப்பூர், இராஜபாளையம்

24x7 Calling Mobile : 98424 47305

# நகரத்தார் சிகரத்தார் 108



காரைக்குடி நாராயணன்

செட்டியார் "நகரத்தார் போஸ்ட்" யூட்யூப்பில் அனுப்பியிருந்த செய்தியைப் படித்தார்.

சிறுவாபுரி நகரத்தார்கள் பாதயாத்திரைக் குழுவின் சார்பாகக் கார்த்திகை மாதம், கிருத்திகை அன்று காலை 7.00 மணிக்கு மேல் மதியம் 12.00 மணிக்குள் அபிசேகமும், தீபாராதனை வழிபாடும் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

ஆச்சி, துளசி மாடத்திற்குத் தண்ணீர் விட்டுக் குங்குமம் வைத்து விட்டு வந்தார்.

நானும் ரொம்ப நாளாப் போகணும்னு நெனைக்குறேன். இந்த வருஷம் போய்ட்டு வந்திட வேண்டியதுதான். அங்கே போயி சின்னச் செங்கல்லையோ, அங்கே கெடக்குற கல்லையோ எடுத்து வச்சா வீடு இல்லாதவங்களுக்கு வீடு கெடைக்கும்னு நம்புறாங்க.

வீடு இல்லாதவங்களுக்கு அந்தப் பிரார்த்தனை சரிதான். நமக்குத் தான் அரண்மனை மாதிரி இருக்கு. புள்ளை குட்டிகளுக்கும் வீடு இருக்கு. அங்கே போயிப் பிரார்த்தனை பண்ணுனா கல்யாணமாகாத புள்ளைகளுக்குக் கல்யாணம் ஆகுமாம். நம்ம பேரன், பேத்திகள் ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் வரப்போறாங்க. அவங்க எல்லாருக்கும் கல்யாணம் சீக்கிரம் ஒரே நாள்ல நடக்கணும்.

ஒரே நாள்லேயா?

ஏன் நடந்தா என்ன. ஒவ்வொரு கல்யாணத்துக்கும் வந்து போக முடியுமா. பொண்ணு மாப்பிள்ளை அமைய வேண்டாமா. நம்ம காலத்தில மாதிரியா இருக்கு. இப்போ மாப்பிள்ளைக்கு பொண்ணு கிடைக்குறது குதிரைக் கொம்பா இருக்கே.

அது எப்படி இருந்தாலும் சரி. அம்மா குதிர் போல. அய்யா கதிர் போலன்னு இருந்தாலும் சரி. யானையை கொடுத்துப் பூனையை வாங்குனாலும் சரி. உள்ளதும் போச்சுடா நொள்ளக் கண்ணான்னு ஆகாமப் போனாச் சரிதான். பிள்ளைகள்லாம் வரவிட்டுச் சேந்து போகலாம். அங்கே போக முடியாதவங்க இந்தப் பதிகத்தை வீட்லேருந்து சொன்னாலே போதும். அங்கே போன மாதிரித்தான்.

ராஜ்மோகன் உடனே கேட்டார்.

என்ன பதிகம் ஆச்சி. நீங்க சொன்னா நானும் இங்கேருந்தே சொல்லுவேன். எனக்கும் கல்யாணம் ஆகும்ல.

செட்டியார் சிரிப்பதோடு வெத்திலையை அங்கே தரையில் கொஞ்சம் துப்பினார். ஆச்சி தலையிலடித்துக் கொண்டார்.

இந்த வெத்திலையை மாடு வைக்கோல் திங்குற மாதிரித் திங்குறீங்க. இதை ஏழு ஜென்மத்துக்கும் போட்டுட்டீங்க. இதை விட்டுத் தொலைக்கக் கூடாதா.

கோவிச்சுக்காதே சிகப்பி. சீக்கிரம் விட்டுடுறேன்.

ஆச்சி பதிகத்தைச் சொன்னார்.

தம்பி. அருணகிரிநாதர் திருப்புகழ் பாடி முருகப் பெருமானை வழிபட்ட திருத்தலம் சிறுவாபுரி. அங்கே போக முடியாதவங்க வீட்ல முருகன் படத்துக்கு முன்னால நெய் விளக்கு ஏத்தி இந்தப் பதிகத்தைச் சொன்னாலே போதும்.

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
　　அண்டர்மன மகிழ்மீற – வருளாலே
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
　　ஐங்கரனு முமையாளு – மகிழ்வாக
மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
　　மஞ்சினனு மயனாரு – மெதிர்காண
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
　　மைந்துமயி லுடனாடி – வரவேணும்
புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
　　புந்திநிறை யறிவாள – வுயர்தோளா
பொங்குகட லுடனாகம் விண்டுவரை யிகல்சாடு
　　பொன்பரவு கதிர்வீசு – வடிவேலா
தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
　　தண்டமிழின் மிகுநேய – முருகேசா
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
　　தண்சிறுவை தனில்மேவு – பெருமாளே.

எப்படியோ நான் ஒரு கணக்குப் போட்டா நீ ஒரு கணக்குப் போடுறே என்று செட்டியார் கூறினார்.

ராஜ்மோகன், ஆச்சியைப் பார்த்துச் சொன்னார்.

அய்யா. ஆச்சி கணக்கு எப்பவும் நூத்துக்கு நூறுதான்.


தம்பி. நம்ம எல்லாருடைய வாழ்க்கையும் கடவுளோட கணக்கு. ஜாதகத்தில பாருங்க. ஓடிப்போனவனுக்கு ஒம்பதாம் எடத்தில குரு. அகப்பட்டவனுக்கு அஷ்டமத்துல சனி. நாளைக்குக் கெடைக்குற கோழியை விட இன்னைக்குக் கெடைக்குற முட்டை மேல். மரம் ஏறிக் கைவிட்டவனும் கெட்டான். கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான். இது எல்லாமே ஒரு கணக்குத்தானே.

செட்டியார் விஷயத்துக்கு வந்தார்.

சரி நம்ம கணக்கு அப்படியே இருக்கட்டும். டைரக்டர் சார், ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பத்திய பெருமையைச் சொன்னீங்க. அப்புறம் அவங்க குடும்பத்தைச் சொல்லுங்க.

ராஜ்மோகன் சொல்ல ஆரம்பித்தார்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் திரு.முத்தையா செட்டியார் – திருமதி மீனாட்சி ஆச்சிக்கு இளைய மகனாகப் பிறந்தவர்.




அவர் கரூரில் கல்வி பயின்று, தமிழிலும், ஆங்கிலத்திலும் திறமையுள்ளவராக இருந்ததால் சுதேசமித்திரன் நாளிதழில் அடிக்கடி கட்டுரைகள் எழுதினார். தொழிலை மேம்படுத்த, பர்மா, மலேசியா, இலங்கை, சயாம், கிழக்கிந்தியத் தீவுகள் என்று பல நாடுகளுக்குச் சென்று பல தொழில்களை விரிவுபடுத்தினார். அன்றையக் கணக்குகளை அன்று இரவே பார்ப்பதைப் பழக்கமாக வைத்திருந்தார். "இம்பீரியல் பேங்க் ஆப் இந்தியா"-வில் பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்தார். லண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களைச் சுற்றிப் பார்த்ததும், கல்வியில் தமிழ் மக்களும் முன்னேற வேண்டும் என்ற முடிவில் சிதம்பரத்தில் இவர் தாயார் மீனாட்சி ஆச்சி பேரில் 1920-ல் கல்லூரியைத் தொடங்கினார். 1929-ல் இசைக் கல்லூரியைத் தொடங்கினார். தமிழ்க் கல்லூரிக்கு உ.வே. சாமினாதய்யரைப் பொறுப்பேற்கச் செய்தார். அந்தக் காலத்தில 20 லட்சம் ரூபாய்களை நன்கொடையாகத் தந்து கல்லூரிகளை இணைத்துப் பல்கலைக் கழகமாக 1928-ல் உருவாக்கினார். ஏற்கெனவே "ராவ்பகதூர்-", "சர்" ஆகிய பட்டங்களைத் தந்திருந்த ஆங்கில அரசு இவர் பல்கலைக் கழகம் தொடங்கியதும், "ராஜா" பட்டத்தையும் வழங்கியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1947-ல் "டாக்டர்" பட்டம் வழங்கியது.

கல்விப் பணியோடு ஆன்மிகத் திருப்பணிகளும் செய்தார். பிறந்த ஊரில் மகளிருக்கான லேடி பெண்ட்லண்ட் மருத்துவமனையைக் கட்டித் தந்தார். 1910 முதல் 1913 வரை காரைக்குடி ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும், 1916 முதல் 1919 வரை சட்டசபை உறுப்பினராகவும், 1921 முதல் 1935 வரை 15 ஆண்டுகள் தொடர்ந்து மாநில அவை உறுப்பினராகவும் இருந்தார்.

1917-ல் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் தோன்றக் காரணமாக இருந்தார். பர்மாவில் நகரத்தார் துயருற்ற போது அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். 1935-ல் பர்மாப் பிரிவுச் சட்டம் வந்த போது நகரத்தார் சார்பாக இங்கிலாந்து அரசரைச் சந்திக்க ஐரோப்பாவுக்குப் பயணம் செய்தார். "அரசி" சீதை ஆச்சியுடன் ஐந்தாம் சார்ஜ் மன்னரைப் பேட்டி கண்டார். பிரெஞ்சு நாட்டிற்குத் தூது சென்றார். 1911-ல் இங்கிலாந்தில் வெஸ்ட் மினிஸ்டர் மண்டபத்தில் நடந்த ஐந்தாம் சார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிற்கும், 1912-ல் டெல்லியில் நடைபெற்ற ஐந்தாம் சார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிற்கும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

செட்டிநாடு புகைவண்டி நிலையம் அருகே 1000 ஏக்கர் நிலம் வாங்கி செட்டிநாடு என்ற புதிய ஊரையே உருவாக்கினார்.

இவர் உருவச் சிலை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தமிழிசை வளரக் காரணமாயிருந்த சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்திலும் உள்ளது. இந்த இரண்டு சிலைகளையும் மைசூர் மகாராஜா ஜெயசாமராஜ உடையார் திறந்து வைத்தார்.

இந்திய அரசு இவரைப் போற்றும் வகையில் அஞ்சல் தலை வெளியிட்டது. 1881 - 1948 என்று அவர் வாழ்ந்த காலம் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அஞ்சல் தலை வெளியீட்டு விழா 30.09.1980 அன்று நடைபெற்றது. அந்த விழாவில் இந்திய அஞ்சல் துறை அமைச்சர் ஸ்டீபன் அவர்கள் அஞ்சல் தலையை வெளியிட ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

செட்டியார் பெருமையுடன் பாராட்டினார். டைரக்டர் சார் பணம், தானம், கல்வி, உழைப்பு இது நாலும் ஒன்னா இருந்தா அவங்களையும் பத்தி இந்த சமுதாயம் ஆயிரம் ஆண்டுகளானாலும் பாராட்டும். மேல சொல்லுங்க.

ராஜ்மோகன் மீண்டும் ஆரம்பித்தார்.

ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு, 30.09.1931-ஆம் தேதி அன்று எம்.ஏ.எம். ராமசாமி செட்டியார் மகனாகப் பிறந்தார். முன்னோர் செய்த தொழில்களை வளர்ப்பதில் கவனமாக இருந்தார். செட்டிநாடு சிமெண்ட் நிறுவனத்தின் தலைவராக இருந்தார். தென்னிந்தியத் தொழில் வணிகக் கழகத்தின் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். விளையாட்டுப் போட்டிகளில் வீரராகத் திகழ்ந்தார். இந்திய ஹாக்கிக் கழகத்தின் தலைவராக இருந்த போது, இந்திய அணி 1975-ல் உலகக் கோப்பையை வென்றது. 1980-ல் ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றது. குதிரைப் பந்தய வெற்றியில் கின்னஸ் சாதனையாளரானார். சென்னை நகரின் ஷெரீப்பாக தமிழக அரசு இருமுறை நியமித்து இவரைக் கௌரவப்படுத்தியது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் தந்து கௌரவித்தது. இவரது சமயத் தொண்டைப் பாராட்டி சிருங்கேரி சாரதா பீடம் பக்த பூஷணம் என்ற பட்டத்தை வழங்கியது. இவரது தெய்வ பக்திக்கும் ஆன்மிக வழிபாட்டிற்கும் அண்ணாமலைபுரத்திலுள்ள ஐயப்பன் கோயில் அடையாளமாகத் திகழ்கிறது. இவர் மணிவிழா 1991-ல் நாடே வியக்கும் வண்ணம் கானாடுகாத்தானில் நடைபெற்றது.

ராஜ்மோகன் படித்து முடித்ததும் ஆச்சி அவரைப் பாராட்டினார்.

தம்பி. எங்க நகரத்தாரைப் பற்றிய ஆவணப் படத்தைச் சீக்கிரம் எடுத்துப் பரிசு வாங்கும் வாய்ப்பை பெற வேண்டும். மறந்திடாம ஒரே ஒரு கல்யாணம் பண்ணிக்குங்க.

இதைக் கேட்டு உள்ளே இருந்த குட்டியும் சிரித்தாள்.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

# வாழையடி வாழை



சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்



### 4. தலைமுறை X (Generation X) 1965 - 80:

பொதுவாக தலைமுறை X மிக மந்தமானது என்று ஒதுக்கப்பட்டது. ஏனென்றால் பொருளாதாரம் மந்தமாக இருந்தது. கம்பெனிகள் ஒவ்வொன்றாக இழுத்து மூடப்பட்டன. பணியாளர்கள் கொத்துக் கொத்தாக வேலை இழந்தார்கள்.

வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாகி விட்டதால், கிடைத்த வேலையில் மூழ்கி, அதைத் தக்கவைத்துக் கொள்வது ஒன்றே வாழ்க்கையின் லட்சியமாகிப் போனது.

குடும்ப வாழ்க்கையில் மனக் கசப்புகள் அதிகமாயின. மண முறிவுகள் பெருகின. தாய் அல்லது தந்தை (ஒற்றை பெற்றோர்) எண்ணிக்கை அதிகமானதால் பிள்ளைகள் மீது கவனிப்பு குறைந்தது. குடும்பத்தில் வருமானம் போதாமையால் கணவன், மனைவி இருவருமே வேலைக்குச் சென்றார்கள். பள்ளியிலிருந்து வீடு திரும்பும் பிள்ளைகளை வரவேற்க ஆளில்லாத தனிமை.

இந்தச் சரிவைக் கட்டுப்படுத்த, இந்தியா உட்படப் பல நாடுகள் 'தாராள மயமாக்கல்' கொள்கையைக் கடைப்பிடித்தன. அதன் விளைவாக, போகப்போக நிலைமை கொஞ்சம் சீரடைந்தது. வெளிநாட்டு முதலீடு பெருகியது. தொழில்கள் சுறுசுறுப்பு அடைந்தன. படித்தவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தகவல் தொழில்நுட்பத் துறைகளில் பணி அமர்ந்தனர்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பில் மிகுந்த அக்கறை காட்டத் தொடங்கினர்.

### 5. மில்லெனியல் தலைமுறை (Millennial Generation - Generation Y) 1981-96:

இந்தத் தலைமுறையினர் 9/11 இரட்டைக் கோபுர வெடிகுண்டுத் தாக்குதலைப் பார்த்தவர்கள். இந்தத் தலைமுறைக் குழந்தைகள் வளரும் போது தான் இணைய தளம் (Internet) உதயமானது. அதனால் இவர்கள் "டிஜிட்டல் உலக மனிதர்கள்" (Digital Natives) என்று புகழப்பட்டார்கள். எங்கு பார்த்தாலும் கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தைக் கற்பிக்கும் பொறியியல் கல்லூரிகள் புற்றீசல் போல் கிளம்பின. அங்கிருந்து வெளிவந்த பட்டதாரிகளைத் திறமையாகப் பயன்படுத்தி கம்பெனிகளின் வளர்ச்சி வாய்ப்பை எகிற வைக்கும் நிர்வாக இயக்குனர்கள் இன்னொரு பக்கம் பெருகினார்கள்.

குறிப்பாக, இந்தியர்கள் தொழில்நுட்ப அறிவில் மேலோங்கினார்கள். ஃபோர்ப்ஸ் வெளியிட்ட 2000-ம் ஆண்டுக்கான உலகளாவிய பெரிய கம்பெனிகள் பட்டியலில் இந்தியாவின் 34 கம்பெனிகள் இடம் பெற்றன. பணம் சேர்ப்பது ஒன்றே வாழ்க்கையின் லட்சியமானது. அப்பன், ஆத்தா என்பதெல்லாம் அப்புறந்தான்!

இவர்களைக் கொஞ்சம் பொறாமைக் கண்ணோடு பார்த்த, முந்தைய பூமர் தலைமுறையைச் சேர்ந்த சீனியர்கள் இவர்களைச் சுயநலவாதிகள் என்றும், பொறுமை இல்லாதவர்கள் என்றும் பழித்தார்கள். ஆனால் மில்லெனியர்களுக்குத் தாங்கள் சார்ந்துள்ள சமூக உறவில் நேசமும், சுற்றுப்புறச் சூழலில் அக்கறையும் இருந்தன. அதைத் தங்கள் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுத்தார்கள். பிள்ளைகள் சுயமாகச் சிந்தித்துத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதை ஆதரித்தார்கள்.

அதே சமயத்தில், உலகமெங்கும் பல இடங்களில் பயங்கரவாதமும், வன்முறைச் சம்பவங்களும் தலைவிரித்து ஆடின. எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற அச்ச உணர்வு மக்களிடையே பரவியது. நாளைய தேவைக்குச் சேமிப்பதை விட இன்றே வாழ்ந்து பார்த்து விட வேண்டும் என்ற மன



நிலை வளர்ந்தது. அதனால் நடுத்தரக் குடும்பங்கள் கூட வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொண்டன. பலதரப்பட்ட நுகர்வோர் பொருட்கள் சந்தையில் குவிந்தன.

**6. தலைமுறை Z (iGen): 1997 - 2010:**

iGen தலைமுறையினர் பிறக்கும் போதே தொடு திரை (Touch Screen) கொண்ட Tablet-ஐயும், Smart Phone-ஐயும் கையில் பிடித்தபடி உலகுக்கு வந்தவர்கள். உலகளவில் ஒருவருக்கு ஒருவர் மிக நெருக்கமாகப் பழகினார்கள். நேரடியான தொடர்பு இல்லையென்றாலும், தொலைபேசி, வலைபேசி, கைப்பேசி, முகநூல் இணைய வழியில் நண்பர்களாக வாழ்ந்த தலைமுறையினர். மற்றவர்களை மதிக்கத் தெரிந்தவர்கள். அரசியல் அறிவு மிக்கவர்கள்.

வீட்டில் இவர்களின் நடவடிக்கைகள், இவர்களின் கல்வி, சமூகத்தில் இவர்கள் பழகும் விதம் எல்லாவற்றையும் இணையதளமும் (Internet), யூட்யூப் (Youtube)-ம்தான் தீர்மானிக்கின்றன.

**7. தலைமுறை ஆல்ஃபா (Alpha Gen): 2011 - 2024:**

முழுக்க முழுக்க 21-ம் நூற்றாண்டிலேயே பிறந்தவர்கள் இந்தத் தலைமுறையினர். எண்ணிக்கையில் உலகம் முழுவதிலும் 200 கோடி பேரைத் தாண்டுவார்கள் போல் இருக்கிறது. இவர்களுடைய ஆயுள் எதிர்பார்ப்பு (Life Expectancy Level) அதிகரித்திருப்பதால், 22-ம் நூற்றாண்டுக்குள்ளும் இந்தத் தலைமுறை நுழையக் கூடும்.

புவி வெப்பமயமாதல் (Global Warming) மற்றும் தட்பவெப்ப நிலையின் பிறழ்வுகள் இவர்களுக்குப் பெரிய சவால்களாக இருக்கும்.

நேனோ தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு, தரவுகளைச் சேகரித்து ஆய்வு செய்யும் தகவல் பரிமாற்றம் (Blockchain) போன்ற அறிவு நுணுக்கங்கள் பல புதிய துறைகளில் இதுவரை செய்தறியாத வேலை வாய்ப்புக்களை இவர்களுக்காக உருவாக்கும்.

இருபதாம் நூற்றாண்டிலும், நடப்பு நூற்றாண்டிலும் அரசியல் மாற்றங்களும், அறிவியல் புரட்சிகளும் இப்படி எத்தனையோ புதுமைகளைக் கண்மூடித் திறக்கும் நேரத்தில் அரங்கேற்றி இருக்கின்றன. இதனால் நம் சமூக வாழ்க்கையும், குடும்ப உறவுகளும் உருமாறி இருக்கின்றன. அமைதியான வாழ்க்கையில் பழகிப் போன, சமூகக் கட்டுப்பாடுகளைத் தலை வணங்கி ஏற்றுக் கொண்ட பழைய தலைமுறை, நவீனப் பரபரப்புகளைப் பிரமிப்புடன் பார்க்கின்றது. இவர்களுடைய அறிவுரைகளை முட்டுக்கட்டைகளாகக் கருதி இளைய சமுதாயம் முகம் சுளிக்கிறது.

அப்படியானால் இரண்டு தலைமுறைகளுக்கும் இடையே உறவில் விரிசல் அதிகமாகி, முதியவர்கள் ஆதரவின்றி நிற்கும் நிலை வருமோ என்று எண்ணும் போது தான், காலம் காலமாக சமூக உறவின் அடிப்படைத் தத்துவம் என்ன என்று சிந்திக்க வேண்டி இருக்கிறது.

ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால், அதில் ஆண், பெண் இரு பாலினத்திலும் குழந்தைகள், இளைஞர்கள், குடும்பத்தை நடத்தும் பொறுப்பிலுள்ள நடுத்தர வயதினர், வயது முதிர்ந்த பெரியவர்கள் என்று பல தரப்பில் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதில் ஒவ்வொரு தரப்பும் குடும்பத்தில் மற்றவர்களைச் சார்ந்து இருக்கிறார்களா? மற்றவர்கள் அந்தத் தரப்பைக் கவனித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்களா? என்றால் அது மட்டும் இல்லை. ஒவ்வொரு தரப்பும் மற்றவர்களை ஏதோ ஒரு வகையில் ஈர்க்கவும் செய்கிறார்கள் என்று தெரிகிறது.

குழந்தைகள் தங்கள் மழலையாலும், கள்ளமற்ற சிரிப்பினாலும் ஈர்க்கிறார்கள். இளைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதன் மூலம் ஈர்க்கிறார்கள். நடுத்தர வயதுக்காரர்கள் குடும்பத்தை நிர்வகிக்கும் திறமையால் ஈர்க்கிறார்கள். பெரியவர்கள் தங்கள் வழிகாட்டுதல்களாலும், அன்பினாலும் ஈர்க்கிறார்கள். ஆகவே குடும்பத்தில் ஒருவரை ஒருவர் சார்ந்திருப்பதும், ஒருவரை ஒருவர் ஈர்ப்பதும் ஒன்றை ஒன்று சமன் செய்து கொள்கிறது.

இதனால் சுற்றிச் சுழலும் புவியின் ஈர்ப்பு விசையால், புவியில் உள்ள உயிரினங்கள், உயிரற்ற பொருட்கள் அத்தனையும் நிலை கொண்டு நிற்பதைப்போல் குடும்பமும் தடுமாற்றமில்லாமல் சென்று கொண்டிருக்கிறது.

விதிவிலக்காக, குணக்கேடுகளாலும், தொழில் முயற்சியில் ஏற்பட்ட சறுக்கலாலும், திட்டமிடத் தவறுவதாலும் சில குடும்பங்களில் முதியவர்களின் ஈர்ப்பு நிலை தேய்ந்து, ஈர்ப்பும், சார்பும் சமன் ஆகாமல் போவதும் உண்டு.

குடும்பத்தில், நடுத்தர வயதினர் முதுமையை நோக்கி நகரும் போது ஆண்களோ, பெண்களோ நிரந்தர ஓய்வு பெற வேண்டிய கட்டாயம் இயற்கையின் நியதியால் ஏற்படுகிறது. இதை முன்கூட்டியே உணர்ந்து கொண்டு தங்களைத் தாங்களே முதுமைப் பருவத்துக்குத் தயார் செய்து கொள்ளாதவர்கள் சில சிரமங்களை அனுபவிக்க நேரிடுகிறது. இதற்குச் சில உளவியல் காரணங்களும் (Psychological Factors), சில உடல் ரீதியான காரணங்களும் இருக்கின்றன.

(தொடரும்)

# வெல்லலாம் வாருங்கள்



எம். சிதம்பரம்

## 1. உன்னில் ஒரு ji பூம்பா

நீங்கள் உங்கள் வாழ்வில் எவ்வளவோ பேசியிருப்பீர்கள், எவ்வளவோ பேரிடம் பேசியிருப்பீர்கள், உரையாடி இருப்பீர்கள். அவற்றுள் எது மிக சிறப்பானதாக இருக்க வேண்டுமெனில், நீங்கள் உங்கள் ஆழ் மனதுடன் ஆற்றும் உரையே. அவையே வேதம், தாரக மந்திரம்.

அதைத்தான் ஆங்கிலத்தில் Self Talk என்றும் Positive Affirmation என்றும் சொல்வார்கள். இந்த positive affirmation பற்றி அறிந்து கொள்ளும் முன் நாம் இந்த ஆழ்மனதின் மகத்துவத்தை பற்றி தெரிந்து கொள்வோம்.

வல்லுனர்கள் கூறுகின்றனர்,

நம் ஆழ் மனது மிக சக்தி வாய்ந்தது என்று. நம் மனதை (conscious mind) விட ஆழ் மனது (Sub Conscious Mind) பல மடங்கு சக்தி வாய்ந்தது. நீங்கள் இன்று வெற்றிகரமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் என்றால் அது உங்கள் ஆழ்மனதின் உதவியால் தான். உங்களின் வெற்றிக்கு அதுவே உறுதுணையாக என்றென்றும் இருக்கும்.

உங்கள் ஆழ்மனது நீங்கள் என்ன சொன்னாலும் நம்பும். ஏன் எப்படி என்ற கேள்வி எல்லாம் அது கேட்கவே கேட்காது. உங்களை அப்படியே உருவாக்கும். அப்படி என்றால் நீங்கள் அதனிடம் வாழ்க்கையில் வெற்றி அடைவேன் என சொல்வீர்களா, இல்லை தோல்வி அடைவேன் என சொல்வீர்களா.

உங்கள் எண்ணப்படி, சொல்படி உங்களை வெற்றியாளனாய் உருவாக்கும் உங்கள் ஆழ்மனதின் இந்த அற்புத சக்தியினைத்தான் நாம் ஜீபூம்பா என குறிப்பிட்டோம்.

இச்சக்தியினை சிறப்பாக பயன்படுத்தினால் மட்டுமே வெற்றி மேல் வெற்றி பெறுவீர்கள்.

இக்கட்டுரையையே நான் ஜெர்மனில் எழுதினால் உங்களுக்கு புரியுமா. அதேபோல் ஆழ்மனதிற்கு புரியாத மொழியில் பேசினால் அது எவ்வாறு செயல்படும். அதற்கு புரிகின்ற மொழி எது. ஆராய்வோமா.

நான் வெற்றி பெறுவேன் என சொல்லலாமா இல்லை நான் தோற்க மாட்டேன் என சொல்லலாமா. இரண்டுக்குமே ஒரே அர்த்தம் தான். ஆனால் எது சிறப்பாக இருக்கிறது. நாம் முதலில் கூறியது தானே. அந்த மொழி தான் அந்த நேர்மறையான மொழி தான் நம் ஆழ்மனதிற்கு புரியும்.

இந்த நேர்மறையான மொழியில் உரையாடினால் மட்டுமே உங்கள் லட்சியங்களை நீங்கள் அடையலாம். சிகரங்களை தொடலாம்.

நாம் நம்மிடமுள்ள ஜீ பூம்பாவை பயன்படுத்தி வேற லெவல் போக வேண்டுமென்றால் அதனிடம் பேசும் பொழுது மூன்று விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும். 3Ps

அதாவது,

1. Positive
2. Personal
3. Present Tense

Positive ஆக நேர் மறையாக எப்படி பேச வேண்டுமென ஏற்கனவே நாம் பார்த்து விட்டோம்.

அடுத்து Personal ஆக இருக்க வேண்டும். நீங்கள் அடைய வேண்டிய நிலை உங்களுடைய தனிப்பட்ட சொந்த இலக்காக இருக்க வேண்டும். அப்பொழுது தான் உங்கள் ஆழ்மனது தனதென எண்ணி உங்களை வெற்றி நடை போடச் செய்யும்.

நிறைவாக நீங்கள் உங்கள் ஆழ்மனதிடம் நிகழ்காலத்தில் மட்டுமே பேச வேண்டும். கடந்த காலத்திலோ எதிர் காலத்திலோ பேசக் கூடாது.

உதாரணத்திற்கு நான் நல்லவனாக இருந்தேன் எனக் கூறவே கூடாது. அப்படி என்றால் நீங்கள் இன்று கெட்டவனாக, நல்லவனாக இருப்பேன் எனவும் கூறக் கூடாது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அப்படி கூறினால் மனதில் அழுத்தம் மிக உண்டாகும். அதுவே நமக்குத் தடையாக அமைந்து விடும்.

பின் எப்படித்தான் சொல்ல வேண்டும். நாம் ஏற்கனவே சொன்னது போல் நம் ஆழ்மனதிடம் நிகழ் காலத்தில் பேச வேண்டும். அதாவது, நான் நல்லவனாக இருக்கிறேன். நான் தைரியசாலி, நான் வெற்றியாளன். நான் சாதனையாளன்.

மேலே கூறியவற்றை வெறும் சம்பிரதாயமாக, இயந்திரத் தன்மையோடு கூறாமல் மனமார வைராக்கியத்தோடு, நம்பிக்கையோடு கூற வேண்டும். நாம் கூறியபடி நிச்சயம் நடக்கும் என நம்ப வேண்டும்.

இப்படி நீங்கள் அடைய வேண்டிய இலக்கு ஒவ்வொன்றிற்கும் உங்கள் ஜீபூம்பாவிடம் இப்படி நீங்கள் ஆணையிட்டால், வெற்றி உங்களை வாரி அணைத்துக் கொள்ளும். தோல்வி உங்களைக் கண்டு மிரண்டு ஓடி விடும்.

– எம்.சிதம்பரம்
பயிற்சியில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவர்




# அரசர் முத்தையவேள் ஆய்வரங்கம் தொடக்க விழா

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழியல் துறையில் நடப்பு ஆண்டிற்கான அரசர் முத்தையவேள் ஆய்வரங்கம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் இராம. கதிரேசன் அவர்கள் தலைமையில் 23.10.2024 அன்று தொடங்கப் பெற்றது. கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா. சொக்கலிங்கம், "எண்ணுக தமிழில் எழுதுக தமிழில்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். தனது உரையில் தமிழுக்கும், கல்விக்கும், இசை உலகிற்கும், தொழில் துறைக்கும் பெரும் பங்களிப்பை வழங்கிய தமிழிசைக் காவலர், பத்மபூஷன் ராஜா சர் முத்தையா செட்டியார் பணிகளை நினைவு கூர்ந்தார். தாய்மொழிகளின் தாய் மொழியான நமது செம்மொழித் தமிழுக்கு மேலும் சிறப்புச் சேர்த்திடும் வண்ணம் வளரும் தலைமுறை எழுத்திலும், வாசிப்பிலும் தமிழையும் அதன் நன்னெறி களைப் பின்பற்றுவது வேண்டும் என்றார். சிந்தனை வளம், மேன்மையான நிலை, ஒற்றுமை உணர்வு என இருக்க வேண்டும். இலக்கணமும், இலக்கியமும் நிறைந்த செம்மொழித் தமிழ் தானும் வளர்ந்து பிற மொழிகள் வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றது என்றார். அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மற்றும் தமிழ்த் துறை உள்ளிட்ட ஏராளமான மாணவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். மதிப்புறு பேராசிரியர், மதகுபட்டி அண. கண்ணப்பன், மேனாள் துணைப் பதிவாளர் ஆத்தங்குடி கனகசபை ராமசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். ♦


## நமது செட்டிநாடு சந்தா படிவம்

திரு/திருமதி.................................................................................................................................

முகவரி.......................................................................................................................................

..................................................................................................................................................

கோவில்...............................................பிரிவு...............................சொந்த ஊர்.......................................

கைபேசி....................... தொலைபேசி.......................... ▸▸ இமெயில் ..................................................

▸▸ புதிய சந்தா ☐ / சந்தா புதுப்பித்தல் ☐ / Ref No..........................................................................

செலுத்திய சந்தா ரூபாய் ஓராண்டு 300/- இரண்டு ஆண்டு 500/- ஐந்து ஆண்டு 1250/-

☐ மணியார்டர் ☐ காசோலை ☐ RTGS ☐ GOOGLE PAY மூலம் செலுத்தி விவரம் தெரிவிக்கவும்.

வங்கி.........................................................../ எண்................................/ நாள்.......................

அனுப்ப வேண்டிய முகவரி: "நமது செட்டிநாடு" (மாத இதழ்), ராணி சீதை அரங்கம், 3வது தளம், 603, அண்ணா சாலை, சென்னை 600 006. தொ.பே.எண்: 04442951888

வெளிநாடு சந்தா விவரம்: சிங்கப்பூர், மலேசியா ஆண்டிற்கு SG $ 40/ பிற நாடுகள் ஆண்டிற்கு US $50/

**Cheque to be drawn in favour of**

Chettinad Print Media P Ltd,
A/C No: 6412480441
Indian Bank, Thousand Lights Branch,
Chennai - 600 006. IFSC : IDIB000T020,

Or

Chettinad Print Media P Ltd.
A/C No:57500000199320
HDFC Bank, R.K.Salai Branch,
Chennai - 600 004, IFSC : HDFC0001097




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan

GSTIN: 36AANCA5941Q2ZW

# AS AUTOMATION & ENGINEERING SERVICES PVT.LTD.

H.NO, 6-102, Incois Rd, Kakatya Hills, Pragathi Nagar,
Hyderabad, Telangana, 500090



**Our Channel Partners**

ABB · UL · Toshniwal

B.Srinivas 7732071000 | info@asautomation.in | www.asautomation.in

# SAP INDIA ENTERPRISES

MANUFACTURING:

MANUFACTURERS OF CABLE TRAYS ◆ ELECTRICAL PANELS ◆EARTHING MATERIAL ◆ ACCESSORIES AND CONTRACT MANUFACTURING

OUR SERVICES:

ERECTION TESTING AND COMMISSIONING OF ELECTRICAL & INSTRUMENT SYSTEMS OF PROCESS PLANTS



Plot No 313, Hansa Industrial Park, Bhagwanpur,
Derabassi-Barwala Road, Derabassi, SAS Nagar, Punjab - 140507

Surender Singh - Contact no. +918146060675

Email I'd sapindia.enterprises@gmail.com | www.sapindia.co.in

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2022-2024
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2022-2024 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 November - 2024

